

கல்கி
30
காசு
KALKI 18.6.1961

‘அவரா லேசில் திருப்தியடைகிறவர்...’



‘அதுவும் துணி விஷயத்திலா? அதெங்கே...’ என்கிறார் பம்பாய்வாசியான ஸ்ரீமதி ஆர். ஆர். பிரபு. ‘இப்போல்லாம் ஸன்லைட்டாலே வெளுக்கறேன் அவரோட துணிக எல்லாத்தையும். அவருக்கோ பெருமை! எனக்குந்தான். இருக்காதா? அமோகமா நுரை கட்டுது ஸன்லைட், தொட்டதெல்லாம் பளிச்சுன்னு வெளுப்பு. சலவைன்னு எனக்கு வேண்டியது ஸன்லைட்தான்!’

துணிகளைக் காப்பதற்குத் தூய, மேன்மை வாய்ந்த ஸன்லைட் டைப் போல் வேறொன்றில்லை என்பதே குடும்ப மாதர்களின் துணிவு. அதுவே உங்களுக்கும் இனிது.


ஸன்லைட்




ஸன்லைட் அருமை -- நம் துணிகளுக்கு நன்மை!

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

30-X52 TM



"என்ன அழகு....என்ன குளுமை....
என்ன மென்மை...இதை அணிய
எனக்கும் ஆசைதான்..."
மன்னிக்கவும், பால்போல் வெண்மையுடன் காணப்படும் கான்கறர் ஷர்ட்டிங்கும், மலர் இதழின் மென்மையான கான்ஸல் ஸாடின் டிரில்லும் ஆண்களுக்கென்று பிரத்தியேகமாகத் தயாரிக்கப் பட்டவை. இதை அவர்கள் அணிந்தால் பொலிவுடனும், நேர்த்தியுடனும் விளங்குவார்கள். இவ்விரு துணிகளும் நீண்ட நாள் உழைக்க வல்லதோடு வண்மையானதும்கூட.
கான்ஸல்*
ஒயிட் ஸாடின் டிரில்
கான்கறர்*
உயரிய பாப்ளின் ஷர்ட்டிங்
QUALITY FABRICS
BINNY & CO. (MADRAS) LTD.
உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணப்படும் அனுமதி பெற்ற கடைகளிலிருந்து கண்ட்ரோல் விலைக்கே வாங்கவும்.
•SANFORIZED•
*"ஸான்பொரைஸ்டு" என்பது க்ளூவட் பீபாடி & கம்பெனியாரின் ரிஜிஸ்டரான டிரேட் மார்க்.
பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்
உரிமையாளர்கள்: பின்னி & கம்பெனி (மதறாஸ்) லிமிடெட்
JWT/BC/CC/1368



உருக்கு
உணவு
உற்பத்தியைப்
பெருக்கும்
எஃகினு
லான கலப்
பையைச் செலுத்
தும் உறுதி வாய்ந்த கரங்
கள்: பூமியைப் பிளந்து நேராகவும்,
சீராகவும், ஆழமாகவும் உழுதுவரும்
உருக்குக் கலப்பை: விதையைத் தெளிக்க
நிலத்தைப் பண்படுத்தி வரும் எஃகு.
புராதன மார்க்கமா? பழங்காலத்து
வழிமுறையாக இருக்கலாம்: ஆனால்
அதில் எஃகின் புதுமை மிளிர்கின்றது.
பழைய மரக்கலப்பைக்குப் பதில் எஃகு
கலப்பை: தேக சிரமத்தைச் சிறிது
குறைத்து உற்பத்தியைக் கணிசமா
கப் பெருக்கி உதவுகிறது. டிராக்
டரின் அபரிமிதமான சக்தி சீக்கி
ரத்தில் அவனுக்குத் துணை நிற்கும்:
சீக்கிரத்தில் அவனது நிலத்தில்
முன்னிலும் அதிகமான மகசூல்
கிடைக்கும். சீக்கிரத்தில் இவையனைத்
தும் அவனுக்குக் கிடைப்பது மட்டு
மல்ல: நம் அனைவருக்குமே கிடைக்
கும். ஏனென்றால், நம்மில் ஒவ்
வொருவருக்குமே சிறிது அதிக
மாக உருக்கின் உறுதுணை கிடைக்க
விரைவில் வசதியும், வாய்ப்பும்
ஏற்படும். அதற்கெனவே
இஸ்கோ பணியாற்றிவரு
கிறது. அதிகப்படியான எஃகு
உற்பத்தி செய்து உங்கள் அனை
வருக்குமே உதவ முழுமூச்சுடன்
முயன்று வருகிறது. உங்களுக்
குச்செய்யும் சேவை நாட்டிற்
குச்செய்யும் பெரும் பணி
யாகும். அதுவே எங்கள்
பாக்கியம்.
தி இந்தியன்
ஐரன் & ஸ்டீல்
கம்பெனி லிமிடெட்.
INDIAN JISCO STEEL
IIC-77 TN

கல்கி பொருளடக்கம்

பிலவ, ஆனி 4 ❊ ஜூன் 18, 1961



மலர் 20 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 47

வாக்காளர் கடமை

ஒரிஸ்ஸாவில் நடந்த தேர்தலில் நூற்றுக்கு இருபது பேர்கூடத் தங்கள் வாக்குரிமையைப் பதிவு செய்யவில்லை என்று செய்திகள் வந்திருக்கின்றன.

தேர்தல் நடத்த இதுவே தக்க சமயம் என்று ஒரிஸ்ஸா காங்கிரஸ் தலைவர் திரு பட்நாயக் சொன்னதன் பேரில் இந்த இடைக்காலத் தேர்தல் நடத்தப்பட்டது.

பாரதப் பிரதமர் நேருஜியும் மத்திய நிதி மந்திரி மொரார்ஜி தேசாய் அவர்களும் ஒரிஸ்ஸாவில் தேர்தல் பிரசாரம் மிகத் தீவிரமாகச் செய்தார்கள். தேர்தல் நெருங்கும் சமயத்தில் அண்மையிலுள்ள துர்க்காபூரில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தைக் கூட்டி ஒரிஸ்ஸா மக்களுக்குக் காங்கிரஸின் செல்வாக்கை எடுத்துக் காட்ட பலமான முயற்சியும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஒரிஸ்ஸா முதன் மந்திரி ஜீப்கள், பஸ்கள் எல்லாம் அபரிமிதமாகப் பெற்றுத் தேர்தலில் பயன்படுத்தியதாகச் சொல்லப்படுகிறது. இவ்வளவெல்லாம் செய்தும் மொத்த வாக்காளர்களில் இருபது சதவிகிதம் பேர்கள்தான் வோட்டுச்சாவடிக்குப் போயிருக்கிறார்கள். காங்கிரஸ், கணதந்திர பரிஷத், சுயேச்சைகள் - ஆகிய எல்லாக் கட்சி ஆதரவாளர்களைச் சேர்த்தாலும் இவ்வளவுதான் என்றால் காங்கிரஸின் செல்வாக்கு எவ்வளவு கீழே போய் விட்டது என்பதை எளிதில் ஊகிக்கலாம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி என்றெல்லாம் முழங்கினார்கள். இந்தத் திட்டங்களை மக்கள் உற்சாகமாக வரவேற்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். திட்டங்களின் பேரைச் சொல்லிக் காங்கிரஸ்காரர்கள் வோட்டுக்கள் கேட்டார்கள். ஆயினும் எண்பது சதவிகித வாக்காளர்கள், வோட்டுச் சாவடிக்குப் போகாமல் வீட்டிலேயே இருந்திருக்கிறார்கள்.

இன்று தேசத்தின் மனநிலை எப்படி இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட இது நல்ல உதாரணம்.

இத்தேர்தலுக்குமுன் ஒரிஸ்ஸாவில், கணதந்திர பரிஷத் - காங்கிரஸ் கூட்டு ஆட்சி நடைபெற்றது. ராஜ்யங்களில் தனிக் காங்கிரஸ் ஆட்சியானாலும், வேறு கட்சியுடன் சேர்ந்த ஆட்சியானாலும், அவற்றுக்குச் செல்வாக்கோ, அதிகாரமோ ஒன்றும் இல்லை. எல்லாம் மத்திய அரசாங்கத்திடம் குவிந்து கிடக்கின்றன. தேசமெங்கிலும் டில்லியின் காங்கிரஸ் ஆட்சிதான் நடக்கிறது. ஆகவே ஒரிஸ்ஸா மக்கள் எண்பது சதவிகிதம் பேர் டில்லியின் காங்கிரஸ் ஆட்சியினிடம் அதிருப்தி அடைந்திருக்கின்றனர் என்றுதான் பொருள்.

நாம் இதை எழுதிக் கொண்டிருக்கும் போது, ஒரிஸ்ஸா தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருக்கின்றன. காங்கிரஸ்காரர்களும் அவர்கள் தலைவர்களும் எதிர்பார்த்த வெற்றி காணப்படவில்லை. எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் அது பெருவாரியான மக்களின் ஆதரவையும் ஒப்புதலையும் பெறாத ஆட்சி என்பதை மட்டும் மனத்தில் கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் கட்சிக்கு எதிர்ப்பாக ஓரளவு பலமான எதிர்க் கட்சி ஒரிஸ்ஸாவில் தேர்தல் மூலம் ஏற்பட்டிருப்பது ஒரு நல்ல சம்பவம். மெஜாரிடி கிடைத்து விட்டபோதிலும் பலமான எதிர்க் கட்சி ஒன்று இருந்தால் அது தேசத்துக்கு நன்மை என்பதை ஒரிஸ்ஸாவில் ஓரளவு நிரூபிக்கலாம்.

வாக்காளர்களுக்கும் ஒரு பெருங் கடமை இருக்கிறது. ஜனநாயக நாட்டில் மக்கள் ஒரு கட்சியின் ஆட்சியினால் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்றால் கையைக் கட்டிக்கொண்டு வீட்டில் உட்கார்ந்திருக்கக் கூடாது. அந்த ஆட்சியை அப்புறப்படுத்த அவர்களுக்குச் சக்தியிருக்கிறது. வாக்குரிமையைப் பயன்படுத்தித் தங்களுடைய அதிருப்தியை வெட்ட வெளிச்சமாகக் காட்ட வேண்டும்.

இதுதான் ஜனநாயக முறை. இந்த முறையைப் பாரதத்தின் ஒவ்வொரு பிரஜையும் கடைப்பிடிப்பதுதான் நாட்டில் அராஜகமும் குழப்பமும் ஏற்படாமல் காப்பாற்றும் வழியாகும். ராமன் ஆண்டால் என்ன,ராவணன் ஆண்டால் என்ன என்று எண்ணி அருமையாகக் கிடைத்துள்ள வாக்குரிமையைப் பயன்படுத்தாமல் விடுவது தேசத்துரோகமாகும் !

அடுத்து வரும் பொதுத் தேர்தலிலாவது மக்கள், ஒரிஸ்ஸாவைப் பின்பற்றாமல் காங்கிரஸ் ஆட்சி பிடிக்கவில்லை என்பதால் எதிர்க் கட்சிக்கு வாக்களித்துத் தங்கள் பலத்தை நிரூபிக்க வேண்டும்.


ராஜாஜி நிதி திரட்டுகிறார்

சென்ற வாரம் சுதந்திரக் கட்சியின் இரண்டாவது பிறந்த நாள் விழா சென்னை கோகலே மண்டபத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

காங்கிரஸின் கண்ட்ரோல் பர்மிட் முறைகளையும், பதவியையும் வைத்துக் கொண்டு மந்திரிகளே போய் நிதி சேர்க்கும் முறையை ராஜாஜி மிகத் தெளிவாக விளக்கி வன்மையாகக் கண்டித்தார். "இந்த ஆட்சியை மாற்றியே தீர வேண்டும். பணத்திலும் பதவியிலும் மிதக்கும் கட்சியை மாற்றுவது என்பது அவ்வளவு சுலபமல்ல. சுதந்திரக் கட்சி ஏழைகளையும் நடுத்தர வர்க்கத்தினரையுமே நம்பியிருக்கிறது. கூட்டம் ஆரம்பிக்கும்போது ஒருவர் மேடைக்கு வந்து ஒரு காகிதத்தைத் தந்தார். அது ஏதோ கேள்வியைக் கேட்பதற்காக எழுதித் தருகிறார் என்று எண்ணினேன். ஆனால் அது ஓர் ஐந்து ரூபாய் நோட்டு, சுதந்திர நிதிக்காகத் தந்தார். அதைப்போலவே, நீங்கள் வீட்டுக்குப் போக பஸ் செலவுக்காகவாவது பையில் ஏதாகிலும் பணம் வைத்திருப்பீர்களே, அதையாகிலும் கொடுங்கள், சுதந்திரக் கட்சியின் தேர்தல் நிதிக்கு" என்றார் ராஜாஜி.

உடனே கூட்டத்தின் நாலாபக்கங்களிலிருந்தும் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய், பத்து ரூபாய் நோட்டுக்களாக மளமளவென்று வந்து குவிந்தன. அன்று மக்களிடையே காணப்பட்ட அந்த வேகமும் பரபரப்பும், மக்களின் உள்ளம் நல்ல நிலையிலிருக்கிறது என்பதைப் புலப்படுத்தின.

சென்னை மக்களின் இந்தச் சீரிய பண்பைப் பின்பற்றி ஒவ்வொருவரும் சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தத் தங்களால் இயன்ற பொருளுதவியை ராஜாஜிக்கு அனுப்பி உதவுவது தமது கடமை என்று எண்ண வேண்டும்.



ஏட்டிக்குப்போட்டி!

"சம்பத் விலகியதால் தி. மு. க.வுக்கு நஷ்டம் ஒன்றுமில்லை." — கருணாநிதி

'சம்பத்து' போனாலென்ன? இதோ 'நிதி' இருக்கிறேனே என்கிறாரோ?

"சென்னை சிங்கப்பூர் மார்க்கத்தில் விரைவில் போயிங் விமானம் பறக்கும்." — அறிவிப்பு

"போயிங்கில் சிங்கப்பூர் போயிங்" என்று பிரயாணிகள் மணிப்பிரவாள நடையைக் கையாளலாம்.

"பாகிஸ்தான் 25000 டன் சர்க்கரையை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும்." — ஏற்றுமதிச் செய்தி

இனியாவது இந்தியா பாகிஸ்தான் உறவு இனிமையாக இருக்குமா?

"வானொலிப் பெட்டிகளுக்கு அதிக வரி கூடாது." — சுப்பராயன்

வானளவு உயர்ந்துள்ள வரிகள் பற்றி எழுந்த கூக்குரல் மந்திரியின் காதில் ஒலித்ததுதான் காரணமோ?

"மதுவிலக்கு முழுத் தோல்வி என்கிறது ஆந்திர ராஜ்யக் கள் இறக்குவோர் சங்கம்."

கள்ளை உள்ளே இறக்கிவிட்டுப் பிதற்றுகிறார்களோ என்று கேட்கிறார் தீவிர மதுவிலக்கு ஆதரவாளர் ஒருவர்.

"பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தாரை தப்பட்டை அதிர்வேட்டு முழங்க ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்." — பெரிய செய்தி

இதென்ன வெடி 'வெங்காய' வெடி என்று பெரியார் அலுத்துக் கொண்டிருப்பாரோ!

உணவுப் பொருள்களின் விலைகள்

ஓர் ஆராய்ச்சி

உணவுப் பொருள்களின் விலைகள் கட்டுக்கு அடங்காமல் உயர்ந்துவிட்டன என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆனால் அவை ஏன் இப்படி உயர்ந்துள்ளன என்பதை ஆராய்ந்து ஆலோசனை கூறுவதற்காகச் சில மாதங்களுக்கு முன் பெங்களூரிலுள்ள "கோகலே பொது அலுவல் நிலையம்" (Gokhale Institute of Public Affairs) பலபேர்களுக்குக் கேள்வித்தாள்களை அனுப்பி அவரவர்களுடைய கருத்துக்களைச் சேகரித்து, அவைகளைப் பிறகு அனுபவமும் அறிவும் முதிர்ந்த ஐந்து பேர்களைக் கொண்டு பரிசீலனைசெய்து, ஒரு யாதாஸ்து விடுத்துள்ளது.

"சர்க்கார் மேற்கொண்டுள்ள தவறுதலான நிதிக் கொள்கைகளும் வரி முறைகளும் பணவீக்கத்தை அதிகரிப்பதின் மூலம் விலை உயர்வுக்கு முக்கிய காரணமாக இருக்கின்றன. கண்டபடி போடப்படுகின்ற திட்டங்களை நிறைவேற்ற வரி முறைகள் வகுக்கப்படுகின்றன. இவ்வரிகளினால் உணவுப்பொருள்களின் விலை எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்று ஒருவரும் கவனிப்பதில்லை."

"இதற்குப் பரிகாரம் பத்து வருஷ காலத்துக்காவது விவசாய நிலங்களுக்கு உச்சவரம்பு என்ற பேச்சையே அரசாங்கம் விட்டுவிட வேண்டும். ராஜ்யங்கள் மேற்கொண்டுள்ள நிலச் சீர்திருத்தச் சட்டங்களும் கூட்டுப் பண்ணைபற்றி மனம் போனபடி பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் பேசுவதும் விவசாய மக்களின் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் மிகவும் குறைத்து விட்டன.

"உணவு விவசாய இலாகா மத்திய சர்க்காரின்கீழ் செயல் புரிந்தாலும் விவசாயம், கால் நடை, பாசன வசதி, நில உரிமை போன்ற பல விஷயங்கள் ராஜ்யங்களால் கவனிக்கப்பட வேண்டியவை என்று அது தட்டிக் கழித்து விடுகிறது. ராஜ்ய சர்க்காரால் அதற்கு ஒதுக்கப்பட்ட இனங்களையே சரிவரக் கவனிக்க முடிவதில்லை. இதற்குப் பரிகாரமாக அரசியல் சட்டம் ஏழாவது ஷெட்யூலில் கண்டுள்ள விஷயப் பாகுபாடுகளைப் பரிசீலனை செய்து மாற்றியமைக்க வேண்டும். மத்திய உணவு இலாக்காவுக்கு ஆலோசகர்களாக ஐந்து பேர்கள் கொண்ட 'உணவுப் பொருள் விலைகள் கௌன்ஸில்' அமைக்க வேண்டும். மேலும் அகில இந்தியாவுக்கும் ஒரு பிரதான உணவுக் கமிஷனர் இருத்தல் அவசியம். அவ்வாறே ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் ஓர் உணவுக் கமிஷனர் தேவை. அவர்களுக்கும் உணவு இலாகாவுக்கும் நிரந்தரத் தொடர்பு இருக்க வேண்டும்."

கோகலே இன்ஸ்டிட்யூட் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் காணும் மேற்படி காரணங்களும் ஆலோசனைகளும் காங்கிரஸ் சர்க்காரின் மனப்போக்குக்கு ஒத்து வராமலிருக்கலாம். அதற்காக உண்மையை மறைத்து விடலாமா?

என்ன சேதி?

யானை விஷயம்

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு தூரம் ஊழல் மலிந்தவர்களாகப் போய் விட்டார்கள் என்பதைப் பீகார் முதன் மந்திரி அவர்கள் பல உதாரணங்கள் காட்டி விளக்கிப் பேசினாராம். ஒரு சாதாரணப் போலீஸ் அதிகாரி, தமது வீட்டில் யானைகளைக் கட்டி வளர்க்கிறார் என்றால் தகாத முறையில் எவ்வளவு பணம் சேர்த்திருக்கிறார் என்பதைச் சுலபமாக ஊகித்துக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார். மாஜி ஜமீன்தார்களாலும், ராஜாக்களாலுமே வைத்து நிர்வகிக்கமுடியாத காரியத்தை, சொற்பச் சம்பளம் பெறும் சாதாரண சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எப்படிச் செய்திருக்கிறார்கள் என்று அதிசயப்பட்டிருக்கிறார். நமது பக்கங்களில் முன் காலத்தில் சாதாரண சர்க்கார் ஊழியர்கள் வீட்டில் இரட்டை மாட்டு வண்டி வைத்திருப்பார்கள். தாசில்தார், ரெவினியூ இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் தங்கள் சொந்த மாட்டு வண்டிகளில் சர்க்கார் காரியமாகச் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். அதேபோல் பீகாரில் வட ஜில்லாக்களில் சாதாரண ஏழை விவசாயக் குடும்பங்களில் யானைகள் வைத்திருப்பது இயல்பு. இன்றும் கேரளத்தில் கூடப் பல மத்தியதரக் குடும்பங்களில் யானை வளர்ப்பவர்கள் உண்டு. யானைவைத்துப் போஷிப்பது சிரமமாயினும், அந்தப் பழக்கம் பண்டைய நாளிலிருந்து இருந்து வருவதாகும்.

ஆனால் சுயராஜ்யம் அடைவதற்கு முன்பு வரை, ஏழை காங்கிரஸ் தொண்டர்களாக இருந்தவர்கள், இன்று பிரம்மாண்டமான கார்களில் ஊர் சுற்றி வலம் வருவது பீகார் முதன் மந்திரியாரின் கண்களில் ஏன் படவில்லையோ? ஏழை காங்கிரஸ் தொண்டரின் மிக ஏழை உறவினர்கள் பலர் இன்று பெரிய முதலாளிகளாகி இருக்கிறார்களே! இது யார் எப்படி வாங்கிய லஞ்சத்தால் என்று ஆராய்ந்தால் மற்ற உத்தியோகஸ்தர்கள் வாங்கிய லஞ்ச விவரம் தானே புரிந்து விடும்!

'ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை' என்ற கதையாக இருக்கிறது, பீகார் முதன்மந்திரி சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் மீது லஞ்சக் குற்றம் சுமத்துவது!

கேரள சபாநாயகர்

காங்கிரஸ், ஒரு தடவையாகிலும் விவேகத்தோடு நடந்து கொள்ளாதா என்று எதிர்பார்த்தோம். கேரள சட்டசபை சபாநாயகர் தேர்தலில் கேரள காங்கிரஸ் அங்கத்தினர்களுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கப்படும் என்று செய்திகள் வந்தன. அதைக் கண்டு சென்ற வாரத்தில் எழுதினோம். அது இப்போது தவறு என்று ஏற்பட்டது. 'லீக்'காரர்களோடு எந்தச் சம்பந்தமும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று மேலிடத்திலிருந்து உத்தரவு அனுப்பியிருக்கிறார்கள். அந்த உத்தரவை வைத்துக் கொண்டு காங்கிரஸ் கட்சி ஒரு நாடகம் நடத்தியிருக்கிறது. முஸ்லிம் லீகை விட்டு விட்டதாக ஒரு சடங்கு நடத்திவிட்டு, அடுத்த கணத்தில் முஸ்லிம் லீக் கட்சித் தலைவரைச் சபாநாயகராக நியமித்து விட்டார்கள். இதைப் பார்த்து உலகம் சிரிக்காமல் என்ன செய்யும்?

வீரியம் பார்க்காமல் தன் காரியத்தைக் கவனித்துக் கொண்டு விட்டது முஸ்லிம் லீக் கட்சி.

அண்ணாமலைப் பிள்ளையின் மறைவு

திரு அண்ணாமலைப்பிள்ளை காலமான செய்தி கேட்டுத் தமிழ் நாட்டில் பலர் திடுக்கிட்டிருப்பார்கள். திருவண்ணாமலையில் வாழ்ந்து அவ்வூருக்குப் பலவிதங்களில் அருந் தொண்டாற்றியிருக்கிறார். பழைய தேசபக்தர். ஒத்துழையாமை




இயக்கத்தில் சேர்ந்து தீவிரமாகப் போராடியிருக்கிறார். பல முறை சிறை சென்றிருக்கிறார். தமிழகத்தின் அரசியலில் முக்கியமான கட்டங்களிலெல்லாம் முன்னணியில் நின்று போராடியிருக்கிறார். நல்ல தெய்வ பக்தர். அவர் எப்போது மேடைமீது ஏறிப் பிரசங்கம் செய்ய வந்தாலும் முதலில் வேலாயுதம் தாங்கி வரும் முருகப் பெருமானை வாழ்த்தி வணங்கி விட்டுத்தான் பேச்சைத் தொடங்குவார். அவர் மறைவினால் வருந்தும் குடும்பத்தாருக்கு நமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.


புதுமை பெறுக! இதம் பெறுக!
நவீனமாய் இருங்கள்! நாள் முழுதும்!


CHARMIS
Talc

மெட்ரிக் முகத்தலளவைக்கு



ஏப்ரல் 1, 1961 முதல் மெட்ரிக் முகத்தலளவைகளை உபயோகிப்பது மத்திய அரசாங்கப் பகுதியான டில்லியில் கட்டாயமாக்கப் பட்டிருக்கிறது.

நாட்டில் மற்ற பகுதிகளில் குறிப்பிட்ட இடங்களில் மெட்ரிக் முகத்தலளவைகள் அறிமுகமாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு வருஷத்திற்குப் பழைய அளவைகளையும் உபயோகிக்கலாம்.

முகத்தலளவைக்கு அடிப்படை
அளவு லிட்டர்

1 லிட்டர்
= 1.1 சேர் ஏறக்குறைய
= 3 நாழிகள் ஏறக்குறைய
(கோவை)
= 4.5 ஆழாக்குகள் ஏறக்குறைய
(சென்னை)

மெட்ரிக் முறை

சுலபமானது ஒரே சீரானது

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது.

நாவல் பிறக்கிறது..

என்னுடைய நல்ல நாவல் பிறந்த கதையை எழுதும்படி கல்கி ஆசிரியர் அவர்களிடமிருந்து கடிதம் வந்தபோது நான் திகைத்துப் போய்விட்டேன். காரணம், பல ஆண்டுகளாக எழுத்துலகத்தில் என் பெயர் உலவி வந்தாலும் இன்னமும் என் மனத்துக்குச் சிறந்ததான நாவல் ஒன்றைப் படைக்காத என் குறை உள்ளத்திலே இருக்கும்போது, 'சிறந்த நாவலைப் படைத்து விட்டேன்' என்று எப்படி நான் கூறிக் கொள்ள முடியும், என்ற எண்ணம்தான். ஆகவே, சிறந்த கதை எது என்று சொல்லி அதைப்பற்றி எழுதுவதை விட, என் முதல் நெடுங்கதை பிறந்த வரலாற்றை எழுதுவது எளிதாகத் தோன்றியது.

சரோஜா ராமமூர்த்தி

சில ஆண்டுகளுக்கு முன்பு-அதாவது 1957-ம் வருஷம் ஆனந்தவிகடன் பொங்கல் மலரில் 'பனித்துளி' என்கிற என்னுடைய முதல் நாவல் வெளிவரப் போவதாக ஒரு விளம்பரம் வந்தது. அந்த விஷயமும் எனக்கு அவ் வாரத்து விகடன் வெளியாகிப் பல நாட்கள் கழித்துத்தான் தெரிய வந்தது. பனித்துளி வெளியாவதற்கு முன்பே 'சுதேசமித்திரன்' வாரப்பதிப்பில் 'இருளும் ஒளியும்' என்கிற தலைப்புடன் ஒரு நெடுங்கதை வெளியானதை வாசக நேயர்கள் அறிந்திருக்கலாம். ஆனாலும், முதலில் எழுதப் பட்ட நாவல் பனித்துளி தான். நாவல் எழுதி முடித்து ஏறக்குறைய மூன்று வருஷங்களுக்குப் பிறகு தான் அது பிரசுரமாயிற்று.

'பனித்துளி' கதாபாத்திரங்களின் அமைப்பு என் மனத்தில் சின்னஞ் சிறு வயதிலேயே ஏற்பட்டு விட்டதாகும்.

என் தகப்பனார் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர். அவர் திருக்கழுக்குன்றத்தில் வேலையில் இருந்த காலத்தில் நான் எட்டு வயதுச் சிறுமியாக இருந்தேன். நாகரிகமும் மின்சார வசதிகளும் அதிகமாய்ப் பரவாத காலம். எங்கள் வீட்டுக்கு எதிரே நெடிய குன்றமும் பசுமையான வயல்களும் காணப்பட்டன. அதிகாலையில் எழுந்து விடுவது என் பழக்கம். காலைத் தென்றலில் நெல்மணிகள் பிடித்த நெற்பயிர்கள் மீது முத்து முத்தாகப் பனித்துளிகள் அரும்பி யிருந்த காட்சியை என்னால் இன்னமும் மறக்க முடியவில்லை. வைரமணிகள் போல் அவை மின்னுவதைப் பார்த்துக் கொண்டே இருப்பேன். மனத்தில் என்னென்னவோ எண்ணங்கள். அவைகளைக் கோவையாக அமைத்துப் பார்க்கும் ஆற்றல் அப்பொழுது எனக்கு இருக்கவில்லை.

அடுத்தபடியாக, என்னைக் கவர்ந்தது இழுக்கது குன்றின்மீது அமர்ந்து அருள் புரியும் வேதகிரீஸ்வரரின் ஆலயம். மார்கழி மாதத்துப் பனிப் போர்வைக்குள் உலகம் துஞ்சும்போது, தெருவழியே பஜனை கோஷ்டி ஒன்று திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களை யெல்லாம் பாடிக் கொண்டே சென்றதை அரைத் தூக்கத்திலிருந்து கேட்ட நான் அதில் என் சிந்தையைப் பறி கொடுத்திருக்கிறேன்.

கால வெள்ளத்தில் அடித்துப் போகாமல், நின்று நிலைத்து, பக்தர்களின் வாய்மொழியாக வரும் அந்தத் தெய்விகப் பாடல்கள் தான் என்னைச் சிந்திக்கத் தூண்டியவை.

பிறகு திருவள்ளுருக்கு மாற்றலாகி வந்துவிட்டார் என் தந்தையார். எனக்குப் பதின்மூன்று பதினான்கு வயதுக்குள் இருக்கலாம். எங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒரு வயோதிகர் குடி யிருந்து வந்தார். அவருடைய கடைசிப் பெண்ணுக்கு வரனுக்காக அலைந்து திருமணம் செய்துவைக்க முடியாமல் தவித்துத் திண்டாடிக் கொண்டிருந்தார் அவர். பெண் வடித்து வைத்த சிலை போல் இரா விட்டாலும் குடித்தனப் பாங்குடையவள். குடும்ப லட்சணத்துடன் விளங்கும் அவள் தினமும் கோயில் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துத் தெருவோடு போவாள்.



நாவல் பிறக்கிறது

இந்த இதழில்

சங்கரராம்

தமது அனுபவங்களை எழுதுகிறார்!



இவள்தான் என் 'பனித் துளி'யின் காமு. பெரியவர் தான் ராமபத்திர ஐயர். திருக்கழுக்குன்றம் பொன்மணியாக மாறக் கதாபாத்திரங்கள் ஒவ்வொருவராக என் மனப் பேழைக்குள் என்னையறியாமல் அந்த வயதிலேயே வந்து புகுந்து கொண்டனர். இருந்தாலும் பதினாறு வயதுவரை பள்ளிப் பாடத்தைத் தவிர, நான் வேறு ஒன்றும் எழுதியதில்லை. பிறகு நான் பெங்களூரில் கல்வி பயிலும் போது சங்கரனின் குடும்பத்தைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது. செல்வச் சிறப்பிலும், பெருமையிலும் மூழ்கிய குடும்பம் அது.

'சங்கரனுக்குத் திருமணம் நடந்தது. வாய்த்தவள் அழகிதான். படித்தவள் தான். ஆனால் பரந்த நோக்கமுடையவள் அல்ல; அன்பின் உருவம் அல்ல. மாணவியாகிய எனக்கு இதெல்லாம் தானாகத் தெரிய நியாயமில்லை. அதுவும் அந்தக் காலத்து மாணவிக்கு! அக்கம் பக்கத்தில் பேசிக் கொண்டார்கள். காதில் விழுந்தது. இதனால் 'பனித்துளி' கதாபாத்திரங்களில் ஒருத்தியான நீலா உருவாகிக் கொண்டு வந்தாள்.

பிறகு, திடீரென்று ஒரு கோடை விடுமுறையில் என் பாட்டியாருடன் தெற்கே மதுரை வரை சென்றிருந்தேன். நண்பர் ஒருவர் வீட்டில் குடும்பத்துடன் தங்கியிருந்தோம். கவின்மிகு மீனாட்சி ஆலயத்தின் முன்பு மெய் சிலிர்க்க நின்றிருந்தேன். பாட்டி அர்ச்சனைக்காகத் தேங்காய் பழம் வாங்கிக் கொண்டிருந்தார். கோயிலினின்று ஒரு பெண் சோகமே உருவாக வெளியே வந்தாள். துயரத்தின் விளிம்பிலே மலர்ந்த இளநகையுடன் என்னை உற்றுப் பார்த்தாள். நானும் அவளைப் பார்த்தேன்.

கண்ணீர் அருவியாகப் பெய்ய அந்தச் சோக உருவம் மண்டபத்தின் தூணில் சாய்ந்து கொண்டு நின்றது. உடன் வந்தவர்கள் கூறினார்கள், கணவன் பல ஆண்டுகளுக்கு முன்பே அவளைக் கை விட்டு விட்டு அயல்நாடு சென்று விட்டான் என்று!

அதுமுதல் 'பனித்துளி'யில் எனக்குப் பிடித்தமான பாத்திரமாக அமைந்த சம்பகம் உருவாகி வந்தாள்.

திருவள்ளூரில் பார்த்த அந்தப் பெண் 'காமு'வின் அன்னை ஒரு நோயாளி. அவள்தான் பனித்துளியின் விசாலாட்சி. அந்த அம்மாள் உண்மையில் நோயிலிருந்து மீண்டார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

விசாலாட்சியின் மறைவைக் குறித்து நான் எழுதியிருப்பது அவ்வளவும் என்னுடைய அன்னையின் மறைவைப் பற்றியவைதான்.

சின்னஞ்சிறு சிறுமி நான். பதினொரு வயதிருக்கலாம். பகல் உணவுக்காக 'கான்வென்'டிலிருந்து வீட்டுக்கு வந்தேன். அன்பு மொழி பேசி ஆதரவுடன் கையில் அமுது படைக்கும் அருமை அன்னை முக்கி முனகிக் கொண்டு படுத்திருந்தார்.

ஜுரம் வந்திருப்பதாகச் சொன்னார்கள். ஒன்றும் விளங்காத வயது. அம்மாவுக்கு உதவி செய்ய வேண்டும் என்று இருந்தாலும், படிப்பில் இருந்த ஆர்வம் பள்ளிக்குச் செல்லத்தான் தூண்டியது. போய்விட்டேன். அடுத்த நாள் சரியாகி விடும் என்கிற நம்பிக்கை. ஆனால் நிலைமை மோசமாக ஆகிவிட்டது. வைசூரி கண்டிருந்ததால் என்னையும் உள்ளே அனுமதிக்கவில்லை. அந்த நாள் தேய்ந்து அடுத்தநாள் உதயம் வந்தது. வீட்டிலே ஒரே குழப்பம். உற்றார் உறவினர் எல்லோரும் கூடியிருந்தார்கள். அம்மாவுக்கு 'என்னவோ' என்கிற வரைக்கும்தான் எனக்குப் புரிந்தது.

பிறகு எல்லாமே முடிந்து விட்டது. என்னை ஒரு பிரமை ஆட்கொண்டு விட்டது. அன்னை மறைந்த இடத்திலே இருந்த விளக்கின் சுடரையே உற்றுப் பார்த்தேன் நான். திரைப்படக் காட்சி போல் அம்மா செய்து வந்த இல்லறப் பணிகள் முழுவதும் அதில் தெரிந்தன.

'அந்திவிளக்கே, அலங்காரப் பெண் மணியே' என்று அம்மா மெல்லிய குரலெழுப்பிப் பாடும் ஒலிகூடக் கேட்ட தென்றால் பாருங்களேன்!

நான் கேட்டேன் அந்தச் சுடரைப் பார்த்து.... 'ஒளியே, உன்னைப் பூஜித்து வந்த என்னுடைய தாய் உன்னுடன் கலந்து விட்டாளா?'

பதினொன்றும் வயதில் அழியாத சித்திரமாகப் பதிந்த இந்தச் சம்பவம் எழுத்தில் உருவாக, என் அன்னையின் மறைவுக்குப் பிறகு பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

பனித்துளியில் இந்த 'விசாலாட்சியின் மறைவு' என்கிற அத்தியாயத்தை எழுதும்போது கண்ணீர் பெருக்கி யிருக்கிறேன். தாயின் அன்பு முகத்தை நினைத்து நினைத்து ஏங்கி யிருக்கிறேன்.

இவ்விதமாகப் பல சம்பவங்கள், ருசிகரமான நிகழ்ச்சிகள் - இளம் பிராயத்திலிருந்து மனத்தில் பதிந்தவை - எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு நெடுங்கதையாக மலரப் பல வருஷங்கள் ஆயின.

இடையில் பல சிறுகதைகள் எழுதியிருந்தாலும் நெடுங்கதை ஒன்று எழுதப் பல வருஷங்கள் எனக்குத் தேவைப்பட்டன. நம்மைச் சுற்றிலும் ஓடிக் கொண்டிருக்கும் உலகத்திலே நடக்கும் ஒவ்வொரு சம்பவமும், ஒரு நெடுங்கதைக்கோ, அல்லது அதன் பகுதிக்கோ, சிறுகதைக்கோ ஆதாரமாக அமைந்து விடுகிறது.

கதாபாத்திரங்களின் உள்ளத்தைச் சித்திரிக்கும்போது எனது உள்ளத்தில் அன்பும், கோபமும், மகிழ்வும், வெறுப்பும் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருக்கும். மற்ற நாவலாசிரியர்களுக்கும் அப்படித்தான் இருக்கும் என எண்ணுகிறேன்.

காமு கண்ணீர் விட்டாள் என்கிற வரியை எழுதும் போது நானும் கண்ணீர் விட்டிருக்கிறேன்.

என்னுடைய முதல் நாவல் பிறந்த கதை இதுதான். வாசக அன்பர்கள் என்னுடைய எந்த நாவலைச் சிறந்ததாகக் கருதுகிறீர்களோ?

வட்டமேஜை

திருமூலர் தவமொழி

நீங்களுடைய 4-6-61 இதழில் தந்தையும் தனயனும்போல் ராஜாஜியும் சோமுவும் தீட்டிக்கொண்டிருக்கிற திருமூலர் தவமொழியைப் படித்தேன்.

உண்ணின்று உருக்கியோர்
ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக்
களிம்பறுத்தானே!

என்ற பாடலைக் கண்டு உருகினேன். மனிதன் ஒருவனுக்கு ஐம்புலனையும், அடக்கும் சக்தி ஏற்பட்டவுடன், தன்னை யறியாமலேயே இறைவனைக் காணக்கூடிய சக்தி ஏற்பட்டு விடுகிறது. பேரின்ப நிலையைக் கண்டவுடன் ஆனந்தக் கண்ணீர் அவனை யறியாமலே ஓடுகிறது. இந்த நிலைக்கு மனிதன் பக்குவம் அடைந்தவுடன், இல்லறத்தை வெறுத்து, சித்தனாகவோ, முனிவனாகவோ மாறி விடுகிறான். இப்படி ஞான மார்க்கத்தை மக்கள் மனத்தில் பதியச் செய்யும் குருவும் சீடனும் பல்லாண்டு வாழ ஸ்ரீ செந்தில் ஆண்டவனை வணங்குகிறேன்.

சேந்தமங்கலம் — எஸ். நித்தியானந்தம்
4—6—61

கடன் வசூல்

விவசாயிகளுக்குப் பல நன்மைகளையும், சீர்திருத்தங்களையும் செய்து வருவதாகப் பறைசாற்றிவரும் அரசாங்கம், வாஸ்தவத்தில் அவர்களின் முதுகெலும்பைத்தான் முறித்துக் கொண்டு வருகிறது.

நான் 1953ம் ஆண்டில் அரசாங்கத்தாரால் விவசாயிகளுக்கு உரம் வாங்குவதற்காக வட்டியில்லாக் கடனாக ரூ. 120 வாங்கியிருந்தேன். 1954-55 வருடங்களில் அதாவது 1364-65 பசலிகளில் தவணைக்கு ரூ. 60 வீதம் இரண்டு தவணைகளில் மேற்படி தொகையைச் செலுத்த வேண்டும் என்றும், இந்தக் கடனுக்கு வட்டியில்லை என்றும் கடன் சம்பந்தமான பத்திரத்தில் கண்டிருந்தது.

1954ம் வருடத்தில் மேற்படி கடன் வசூலிப்பை ஒத்திவைத்து விட்டு 1955ம் வருடத்தில் முதல் தவணையும், அதன் பிறகும் இரண்டு வருடங்கள் கடன் வசூலை ஒத்தி வைத்திருந்து 1958ம் வருடத்தில் இரண்டாவது தவணையும் வசூலித்திருக்கிறார்கள். அந்தக் கடன் அதன் கடைசித் தவணை கட்டப்பட்டவுடன் முடிவடைந்ததாக நான் நினைத்திருந்தேன். ஆனால் இப்போது எங்கள் கிராமாதிகாரிக்கு, என்னிடமிருந்து கடன் பாக்கி (வட்டி) ரூபாய் 24.12 வசூலிக்கும்படி உத்தரவு வந்துள்ளது. நான் ஒரு தவணையை அவர்கள் குறித்திருந்த பசலியில் கட்டியிருக்கிறேன். ஒரு தவணை தான் மூன்று வருடங்களுக்குப் பின் செலுத்தியுள்ளேன். இவர்கள் கடனை ஒத்தி வைத்ததால் நான் வட்டி கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டாலும் மூன்று வருடங்களுக்கு அவர்கள் நிபந்தனைப்படி வட்டி (10 ரூபாய்க்கு மாதம் ஒரு அணா வட்டி வீதம்) ரூபாய் 13.50 தான் ஆகிறது. இந்த 13.50 ரூபாயையும் கடைசித் தவணையுடன் சேர்த்து வசூலித்திருக்க வேண்டும். ஆனால் என்னை இப்போது செலுத்தும்படி உத்தரவு இடப்பட்டுள்ள ரூபாய் 24.12 எப்படி வந்தது? இதற்குச் சரியான பதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து இதுவரையில் கிடைக்கவில்லை.

சேத்தனூர் — என். ரகுபதி
7—6—61

ஞானப் பசி

இளங்குமரனின் தீரச் செயல்களைப் படித்து மெய்சிலிர்க்காதார் யார்? உடல் அவயவங்களின் அழகு மனிதனுக்கு நிலையான இன்பத்தை யளிக்க முடியாது; ஆனால் அறிவினால் வருகிற அழகே மனிதனைப் பண்புள்ளவனாக்குகிறது; முழுமையான நிலைமையையும் அடையச் செய்கிறது என்ற தத்துவத்தை இரண்டாம் பருவ 'ஞானப்பசி'யில் தெளிவாக விளக்குகிறார் திரு நா. பார்த்தசாரதி அவர்கள். இளங்குமரனுடையது மட்டுமல்ல, வாசகர்களின் ஞானப்பசியைக் கூட இரண்டாம் பருவ மணிபல்லவம் தீர்க்க முற்படும் என்று நம்புகிறேன்.

கோயம்புத்தூர்-9 — நா. கி. கணபதி
2—6—61


இன்னமும் தனிப்பட்ட
'பாதுகாப்பளிக்கும் டிரெட்'

உங்களுக்கு அதிக பாதுகாப்பை — நீடித்த காலத்திற்கு அளிக்கிறது

நீங்கள் பயர்ஸ்டோன்

Firestone

நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்களை பொருத்தி ஓட்டும்போது



'பயர்ஸ்டோன் நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்களிலுள்ள ஆயிரக்கணக்கான, வழுக்குவதைத் தடுக்கக்கூடிய கோணங்கள் நீங்கள் நினைத்தபடி மோட்டாரை ஓட்டவும் நிறுத்தவும் தேவையான பிரேக் கண்ட்ரோலை கொடுக்கின்றன. மேலும், நீடித்த நிலைக்கும், தேய்வு பொருத பயர்ஸ்டோன் டிரெட் ரப்பர் உங்களுக்கு நீடித்த காலத்திற்குப் பாதுகாப்பளிப்பதற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது.

பயர்ஸ்டோன்

பொருத்துங்கள்

இன்று சிறந்தவை.....
நாளை மேலும் சிறந்தவை



ஓர் ஏகாதசிக் கதை!

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

எங்கள் ஊரில் ஒரு சிறிய பள்ளிக்கூடம். குழந்தைகளுக்கு வாத்தியார் கதைகள் சொல்வார். ஒரு கதை சொல்லிவிட்டு அடுத்த நாள் கதையின் கருத்தைக் குழந்தைகளை எழுதச் சொல்லுவார். கதை சொல்லுவது சுலபம், கவனிப்பது ரொம்பக் கஷ்டம் என்பார் வாத்தியார் சிவசாமி அய்யர். அவர் இப்படிப் பொழுது போக்காகவும் வேடிக்கையாகவும் கதைகள் சொல்லிக் குழந்தைகளை நல்ல தேர்ச்சி அடையச் செய்வார். ஒரு நாள் அவர் சொன்ன கதை இது.

அந்தக் காலத்தில் கிராம உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் பரம்பரை உத்தியோகஸ்தர்கள்: பரீட்சை கிடையாது. பிரமோஷன் கிடையாது. சொக்காய் கால்சட்டைகள் கிடையவே கிடையாது. எல்லாரும் வைதிகர்கள்.

சக்கரபாணி அய்யங்கார் ஒரு கிராம மணியக்காரர். பெரிய பஞ்சம் வந்தது. அந்தக் காலத்தில் க்ஷாமம் என்றால் யமன் தாண்டவம் ஆடுவான். பல பேர்கள் பசியில் சாவார்கள். வெறும் விளாதாமும் பேச்சுமல்ல. பிரிட்டிஷ் சர்க்கார் எங்கிருந்தோ அரிசி நொய் சம்பாதித்து ஏழைகளிடம் கொஞ்சம் வேலை வாங்கிக் கூழ் காய்ச்சி அவர்களுக்கு வழங்கிவர ஏற்பாடு செய்திருந்தார்கள். கிராம உத்தியோகஸ்தர்கள் இந்தக் கஞ்சித் தொட்டிகளை நிர்வகிப்பார்கள்.

சக்கரபாணி அய்யங்கார் வீட்டில் பதினைந்து மூட்டை அரிசி நொய் தைத்து ஒரு பக்கத்தில் அடுக்கி வைத்திருந்தது. அன்று ஏகாதசி. அந்தக் காலத்தில் ஏகாதசியன்று அநேகமாக எல்லாப் பிராமணர்களும் உபவாசம் இருப்பார்கள். அல்லது "பலகாரம்" செய்வார்கள். தினசரி சாப்பாடு சாப்பிட மாட்டார்கள். ரொம்ப நல்ல வழக்கம். இப்போது அது இல்லை. எல்லாம் மறைந்து

போய்விட்டது ஏகாதசியன்றே பெரிய விருந்துகளும் நடைபெறுகின்றன. மூட நம்பிக்கைகளுக்கு இந்தக் காலத்தில் இட மில்லை. இப்போது பயம் என்பது கிடை யவே கிடையாது. " நான் கடவுளைக் கண்டும் பயப்பட மாட்டேன் " என் பார்கள் தேசத் தலைவர்கள்.

*　　*　　*

சக்கரபாணி அய்யங்காருடைய சகோ தரி ஒரு விதவை. சிறு வயதிலேயே அந்த நிலை அடைந்து விட்டாள். அவள் தான் வீட்டுக்கு எஜமானி. மிக சாமர்த் தியம். எல்லாருக்கும் யோசனை சொல்லு வாள். அவளிடம் அய்யங்காருக்கு மிகப் பிரியம். சிறு வயதில் ஒரு கிழவனுக்குக் கட்டிக் கொடுத்து அவளை விதவையாக்கி விட்ட குற்றம் அவருடையது. அதனால் அவளிடம் மிகப் பட்சபாதம்.

*　　*　　*

அன்று ஏகாதசி என்றேனல்லவா? கிருஷ்ணம்மா பஞ்சப்படி மூட்டை ஒன்றைத் தையல் அவிழ்த்து ஒரு சின்ன படி அரிசி நொய் எடுத்து ஏகாதசி பலகா ரத்துக்குச் சமைக்கக் கொடுத்தாள். சமையல் வீட்டு வேலை, அய்யங்கார் மனைவி செய்வாள். அவள் அந்த நொய்யை அன்று பலகாரத்துக்கு வேண்டிய களி செய்து வைத்தாள்.

அண்ணாவுக்குச் சொல்ல வேண்டாம். மூட்டையிலிருந்து எடுத்தது சொல்ல வேண்டாம். சொன்னால் கோபித்துக் கொள்வான் " என்றாள் கிருஷ்ணம்மா.

பலகாரத்துக்குப் பன்னிரண்டு மணிக்கு வந்தார் சக்கரபாணி அய்யங்கார். அதுவரை வெளியே வெய்யிலில் சுற்றித் திரியவேண்டி யிருந்தது அவருடைய வேலைச்சிரமம். காலை சிற்றுண்டி ஏதும் கிடையாது. அந்தக் காலத்தில் வயதான வர்கள் காலை ஒன்றும் சாப்பிடமாட் டார்கள். மத்தியான போஜனமே முதல் போஜனம். குழந்தைகள்தான் காலையில் 'பழையது' சாப்பிடுவார்கள்.

ராமாயண பாராயணம் ஆனபின் மிகப் பசியுடன் வழக்கம்போல் இலைமுன் உட்கார்ந்தார். "இதுவென்ன புதுமாதிரி யாக இருக்கிறது. நொய்க்களி பிசினாக இருக்கிறது?" என்றார் அய்யங்கார். மனைவி ஒன்றும் பதில் சொல்லவில்லை.

" வீட்டில் உடைத்ததா அரிசி? அல்லது கொட்டணைத்துக்காரி குத்திக் கொண்டு வந்ததா?" என்றார்.

"ஏதோ கிருஷ்ணம்மா கொடுத்தாள். எனக்குத் தெரியாது" என்றாள் மனைவி. அவளுக்குப் பொய் சொல்லி வழக்க மில்லை.

அய்யங்காருக்குச் சந்தேகம் உண்டா யிற்று. முதலிலிருந்தே அவர் கொஞ்சம் பயந்தவர். "வீட்டில் சர்க்கார் அரிசி மூட்டை வைத்துக் கொண்டிருப்பது அபாயம். எந்த வேலை என்ன புத் தியோ?" என்று சந்தேகம் கொண்டே இருந்தார்.

சாப்பிட்டு ஆனதும் கைகழுவி விட்டு மூட்டைகளைப் போய்ப் பார்த்தார். தையல் அவிழ்த்து மறுபடியும் அவசர மாகச் சீர்ப்படுத்தி வைத்திருப்பதை யும் பார்த்து விஷயத்தைக் கண்டு கொண்டார்.

"மகா பாபம்! மகா பாபம்!" என்று சொல்லி மனைவியின் பேரில் கோபித்துக் கொண்டார்.

*　　*　　*

"ஏழைகளுக்கென்று வைத்திருக்கும் நொய்யை நாம் திருடினால் எந்த நரகத் துக்குப் போவோம், தெரியுமா?" என்று மனைவியைப் பார்த்து முகம் சுளித்துக் கொண்டு கேட்டார்.

' எனக்கு ஒரு பாவமும் தெரியாது. மூட்டைகளிலிருந்து நான் ஏதும் எடுக்க வில்லை. சத்தியம் செய்கிறேன்" என்றாள் மனைவி. அவள் பகவானுக்குப் பயந்த வள். அதைவிடக் கணவனுக்கு அதிகம் பயந்தவள்.

"கிருஷ்ணம்மா எழுதிக் கொடுத்தான் என்கிறாயா?" என்றார் இன்னும் அதிகக்கோபத்துடன்.

அதற்கு ஒன்றும் பதில் சொல்லாமல் கண்களில் நீர் ததும்பச் சமையல் அறைக்குள் சென்றாள் மனைவி.

"விட்டம்மா! இது ரொம்பப் பாவம்! இதற்குப் பிராயச்சித்தம் இல்லை" என்றார் சக்கரபாணி அய்யங்கார், விதவைத் தங்கையைப் பார்த்து

"என்ன பிராயச்சித்தம் சொன்னாலும் செய்கிறேன். ஏதோ அவசரத்தில் செய்துவிட்டேன்" என்றாள் கிருஷ்ணம்மா.

• • •

அந்தக் காலத்தில் கிராம உத்தியோகங்கள் பரம்பரை முறை. இனி அவ்வாறு இருக்காது. யாரும் பைகளைத் திறந்து திருட மாட்டார்கள். பள்ளிக்கூடத்தில் படித்துத் தேறியவர்கள் அப்படித் திருடுவார்களா? இல்லை. மூட்டைத் தையலைப் பிரிக்க மாட்டார்கள். மூட்டை மூட்டையாகவே காணாமல் போகும். எப்படிப் போயிற்று என்பதும் தெரியாது.

அடுத்த நாள் குழந்தைகளைச் சுருக்கம் எழுதச் சொன்னார்.

ஒரு குழந்தை எழுதியது :

சக்கரபாணி அய்யங்கார் ஒரு பரம்பரை கிராம உத்தியோகஸ்தர். அவர் வெய்யிலில் வேலை செய்வார். வீட்டுக்கு ரொம்பப் பசியோடு வந்தார். சாப்பாடு நன்றாக இருக்கவில்லை. மனைவிபேரில்கோபித்துக்கொண்டார்.

மற்றொரு பையன் :

அந்தக் காலத்தில் பெரிய பஞ்சம். காங்கிரஸ் சர்க்கார் கஞ்சி காய்ச்சி ஊற்றினார்கள் சக்கரபாணி அய்யங்கார் மனைவி அதற்காக வைத்திருந்த மூட்டைகளிலிருந்து அரிசி திருடினாள். அது ரொம்பப் பாவம்.

மூன்றாவது பையன் :

சக்கரபாணி அய்யங்கார் வீட்டில் ஒரு விதவை அம்மா அவள் ரொம்ப சாமர்த்தியசாலி. அவள் சர்க்கார் அரிசி திருடி விட்டாள். தண்டிக்கப் படவில்லை. குற்றத்தைச் சக்கரபாணி அய்யங்கார் மனைவிபேரில் போட்டு விட்டாள்.

வேறொரு குழந்தை :

பசியோடு வந்த கிராம உத்தியோகஸ்தருக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. கோபம் ரொம்பக் கெட்டது. உபவாசம் இருப்பது நல்லது. இப்போது யாரும் உபவாசம் இருப்பதில்லை.

ஐந்தாவது பையன் :

சக்கரபாணி அய்யங்கார் என்ற ஒரு கிராம உத்தியோகஸ்தர். அவருக்கு ஒரு விதவை சகோதரி அவருடைய மனைவி சமைப்பாள். அவள் கோள் சொல்லிச் சகோதரி பேரில் சக்கரபாணி அய்யங்காரை ரொம்பக் கோபிக்கும்படி செய்தாள்.

ஆறாவது பையன் :

சக்கரபாணி அய்யங்கார் ஏகாதசி விரதம் இருப்பார். ஆனால் உபவாசம் இருக்க மாட்டார். பலகாரம் செய்வார். ஒரு நாள் பலகாரம் நன்றாக இருக்கவில்லை ரொம்பக் கோபித்துக் கொண்டார் கோபம் பொல்லாதது.

ஏழாவது குழந்தை :

முன் காலத்தில் கொஞ்சமாகத் திருடுவார்கள். இப்போது மூட்டை மூட்டையாகத் திருட்டு நடக்கிறது. யாரும் கேட்பார் இல்லை!

எல்லாருக்குமே அதிர்ஷ்டம் வருமா, என்ன? தங்கம்மாளுக்கு என்னவோ அது வந்தது.

நான்கு நாட்களாக, மானத்தோடு ஒரு வாய்ச் சோறு பெற நாய் போல் அலைந்தவளுக்கு இன்று வேலை கிடைத்து விட்டது. அப்படி வேலை கிடைத்ததே பெரிதாக இருக்கும்போது, பசி நேரத்துக்கு மணம் வீசும் இனிப்புப் பொட்டலம் வேறு கிடைப்பதென்றால் அது அதிர்ஷ்டம்தானே?

அது கட்டடம் கட்டக் கல்லெடுத்து வீசும் வேலை. அன்று மாலை வரை, தோள் ஒடிய, விரல் ஒடிய, வெய்யிலில் கண் மடிய அவள் செங்கற்களை அடுக்கி, அடுக்கி அலுங்காமல் வீச வேண்டும். அப்படி அந்தப் பெண்ணுடன் சிறுகச் சிறுக நாள் முழுதும் வருந்தி வதைந்தால், இவ்வுலகில் ஓரிரு வேளைகளுக்கு உண்டு வாழ அவளுக்குத் தகுதி ஏற்பட்டு விடும். அதற்கு' அத்தாட்சியாக ஒன்றரை ரூபாய் என்றும் மதிப்புக்கு உட்பட்ட 'டோக்கன்' கள்-கூலிக் காசுகள் - அவளுக்கு அளிக்கப்படும்.

அப்படி உழைத்து, ஓடாய்த் தேய்ந்து, உருக்குலைந்து சீரும் சிறப்பும் மிக்க இவ்வையத்தில் வாழ்ந்து தீர வேண்டும் என்ற ஆசை எதும் அவளுக்கு இல்லை. உலக வாழ்க்கை அவளுக்குத் துச்சம்தான். ஆனால் முருகையன் அவளுக்குத் துச்சமல்ல. அவனைப் பெற்று வளர்த்து எட்டு வயதுப் பையனாக்கிய பாசமும் துச்சமல்ல.

கணவன் பஞ்சத்தை எதிர்க்கக் கையாலாகாமல் பட்டணக் கரைக்கு ஓடிப் போன பின் அவள் உயிர் வாழ்ந்ததே முருகையனுக்காகத்தான். அதற்காக அவள் தாய்ப் பாசத்தை மெச்சி, வேலையும் கூலியும் அவளைத் தேடிக்கொண்டு வருமா, என்ன? வேலை செய்வது இரண்டு நாட்களாக இருந்தால், வேலை தேடுவது இரண்டு நாட்களாக இருக்கும். சாப்பிடுவது இரண்டு நாட்களாக இருந்தால், சாப்பாட்டைத் தேடுவது இரண்டு நாட்களாக இருக்கும். இன்று வேலை கிடைத்து விட்டது. இன்று சாப்பிட முடியும்.

பதினொரு மணி வரை தங்கம் இயந்திரம் போல் உழைத்தாள். அதற்கு மேல் வெய்யிலை எதிர்ப்பது பெரும் துன்பமாக இருந்தது. பெயருக்கு ஏற்ப அவள் பொன்னிறமாக இல்லாவிட்டாலும் மாநிறமாக இருப்பாள். அதையும் வெயில் மங்கிக் கறுக்க வைத்திருந்தது. உடலுக்கு முப்பது வயதிலேயே வந்துவிட்டது தள்ளாமை. பசியின் கொடுங்கோன்மை வேறு ஒவ்வொரு விநாடியும் அவளுக்கு மலையாய்க் கனத்தது.

அப்போது அவளுக்குக் கல்லைச் சுமந்து வரும் முறை. அவள் வட்டமான முகத்துக்கு மேலே ஒரு வட்டமான பிரி இருந்தது. அதன் மேல் ஒரு வட்டமான தட்டு இருந்தது. அதில் அடுக்கடுக்கான செங்கற்கள். அவள் மென் கரங்களில் ஒன்று கற்களுக்கு ஆதாரமாகத் தட்டைப் பற்றியிருக்க, மற்றொன்று அவள் தளர் நடைக்கு ஆதாரமாக வீசி ஆடிக் கொண்டிருந்தது. அப்படி அவள் கல்லைச் சுமந்து வீசி நடக்கையில் திடீரென்று இடியோ, மின்னலோ, புயலோ ஏதோ ஒன்று பசி மயக்கம் என்ற உருவெடுத்து, அவளைத் தாக்கித் திணறச் செய்து அவளைச் சுழன்று, சுருண்டு கீழே விழச் செய்து விட்டது. உடனே அங்கே வயிற்றுப்பாட்டையும் மீறிய சலசலப்பு எழுந்தது. கும்பல் கூடியது.

அந்தச் சலசலப்பையும் கும்பலையும் மேஸ்திரி சில நிமிடங்கள்தான் அனுமதித்தான். அவள் கீழே விழுந்ததில் ஒரு செங்கல் உடைந்து போனதுதான் துக்கப்பட வேண்டிய அம்சம். அதை உடைத்த தங்கம் அதை மீண்டும் தன் தலையில் சுமக்குமுன் மேஸ்திரியிடம் கேட்டாள். 'கூலியிலிருந்து ஏதாவது சில்லறை தாங்கையா, ஏதாவது சாப்பிட்டு வரேன். கண்ணைக் கட்டுது.''

என்ன அநியாயம்! வேலையைச் செய்து விட்டுக் கூலியை வாங்குவதே சங்கடமாக உள்ள இந்தக் காலத்திலே வேலையை முடிக்கு முன்பே கூலி கேட்கிறாளே!

''இதற்குத்தான் இந்தச் சனியன்களைச் சேர்க்கக் கூடாது! இந்தா புள்ளே! அந்த மாதிரி இஷ்டப்படி காசு தர முடியாது. நீ பாட்டுக்குக் கம்பி நீட்டினா யார் உன்னைத் தேடிக்கிட்டு இருக்கிறது? போ, போ! போய் வேலையைப் பாரு!''

மேஸ்திரியின் கண்கள் சிரித்துச் சிரித்து வேலை செய்யும் பாவனையில் சொகுசாகச் சுற்றி வந்த இரண்டு இளவயசுப் பெண் கூலிகளின் மேல் பதிந்து லயித்திருந்தது. அவனுடைய துன்பத்தைத்தான் என்னென்பது! தங்கம் போன்ற பெண்களையும் சில நாட்களில் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள நேர்ந்து விடுகிறதே!

வேறு வழியின்றித் தங்கம் வேலையில் ஆழ்ந்தாள். ஏதோ ஒரு பிடிவாதம். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, பசியையும் களைப்பையும் மகனின் பாசத்தில் மறைத்துக் கொண்டு, கல்லைத் தலையில் சுமந்து அவள்

வே. கோவிந்தராசன்

மெள்ள, மெள்ள வேலை செய்தாள். எப்படியாவது ஒரு மணி வரை சமாளித்து விட்டால் போதும். பிறகு உணவு நேரம் வந்துவிடும்.

உணவு நேரம் வந்தால் உணவும் வந்து விடுமா, என்ன? நிச்சயமாக இல்லை. ஆனால் ஏதாவது கிடைக்குமே! பன்னிரண்டு மணியானபோது கட்டிடத்து முதலாளி அங்கு வந்து சேர்ந்தார். அவருடைய காரில் கூடை கூடையாக இனிப்புப் பொட்டலங்கள். அங்கு வேலை செய்த அனைவருக்குமே ஆளுக்கொரு பொட்டலம் கிடைத்தது. முதலாளிக்கு அன்றையதினம் என்ன மகிழ்ச்சியோ!

அவர் சென்றபின் மீண்டும் வேலை தொடங்கியது. சிலர் பொட்டலத்தைப் பிரித்து இரண்டே வாயில் தின்று தீர்த்தார்கள். சிலர் ருசி பார்த்துவிட்டு வைத்தார்கள். தங்கம் அதைப் பிரிக்கவே இல்லை. அப்படியே மடியில் வைத்துக் கொண்டாள். பையனுக்குத் தருவதைவிட்டு அவள் சாப்பிடுவதாவது? அவளுக்குப் பசிதான். இருந்தாலும், அது என்ன அப்படி அவளுக்குப் பரிச்சயமில்லாத புதுப் பசியா? பழகிப் பழகிச் சலித்துப் போனதுதானே!

எப்படியோ அவள் மனதை அடக்கிக் கொண்டாள். மற்றவர்களுக்கு ஈடாக மிகவும் பிரயாசைப்பட்டு உழைத்தாள். அவ்வப்போது களைத்துப்போன போதும், கண் இருண்ட போதும் அதைத் தின்னலாமா என்றும் தோன்றியது. எச்சரிக்கையாக அந்தச் சபலத்தையும் ஒடுக்கிக் கொண்டாள். மணி ஒன்றும் ஆயிற்று.

அந்தக் கட்டிடத்தைத் துளித் துளியாக உருவாக்கிக் கொண்டிருந்த அந்தக் கூலிக்காரர்கள் ஆளுக்கொரு பக்கமாகக் கலைந்து சென்றார்கள். சற்றுத் தள்ளிச் சாலையோரம் இருந்த நிழல் பரந்த புளிய மரத்தின் கீழ் தங்கம் அமர்ந்தாள். சற்று நேரத்தில் முருகையனும் அவளைத் தேடி அங்கு வருவான். அவன் இனிப்பை எதிர்பார்த்திருக்க மாட்டான். எனவே திகைத்து மகிழ்ந்துபோவான்.

உழைத்த களைப்பில் அவள் முகமெல்லாம் நீராகப் பொங்கியது. நெஞ்சு 'படபட' என்று தெறித்தது. கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. அவள் கண்களை மூடிக் கொண்டு மரத்தில் சாய்ந்தாள்.

மீண்டும் இந்த வெய்யிலில் எப்படி வேலை செய்வது? செய்யாவிட்டால் கூலி எப்படிக் கிடைக்கும்? எப்படியாவது வேலையைச் செய்து முடிக்க வேண்டும். கூலி வாங்க வேண்டும். முருகையனுக்கு வயிறாறக் கஞ்சி தர வேண்டும். அப்போதுதான் அவளுடைய மனம் ஆறும். ஆனால்?...

அது முடியுமா? அவள் இனியும் வேலை செய்ய முடியுமா? அப்படியே இழுத்துப் பிடித்துச் செய்தாலும் திரும்பவும் மயக்கம் வராமலிருக்குமா? மயங்கி விழுந்து விட்டால்?

அவள் மயங்கி விழுந்தால் அவள் பிழைப்பிலும் மண்தான் விழும். பழையபடி வேலையின்றி நாயாய் அலைய வேண்டும். அல்லது நடுத் தெருவில் விழுந்து சாக வேண்டும்.

அவள் கண்ணைத் திறந்தாள். அவளுடைய எரியும் வயிற்றுக்குச் சிறு ஆகாரம் வேண்டும். அவளுடைய ஓய்ந்த உடலுக்கு உணர்வூட்ட ஒரு தூண்டுதல் வேண்டும். மடியிலிருந்த பொட்டலத்தை அவள் வெளியே எடுத்துப் பார்த்தாள். பசியால் பொறி கலங்கித் தவித்துப் போய் உட்கார்ந்திருந்த அவளுக்கு அது போதும். அவள் மனம் குழம்பியது. ஆனால் சரிந்த எண்ணத்தை அவள் தூக்கிப் பிடித்து நிறுத்தினாள். 'பிள்ளை ஆசையாய்த் தின்பான். நமக்கென்ன கேடு!'

தாய்மையின் வீம்புத்தனம். ஆனால் அதையும் மீறி அவள் உடல் சோர்ந்தது. கைகால்கள் சுவாதீனம் இழந்தாற் போல் துவண்டன. வயிற்றின் தகிப்பு 'ஆவ்' என்று அவளை விழுங்கப் பார்த்தது. அவள் உணர்ந்து கொண்டாள். இனி அவள் உடல் தாங்காது. மேலும் அவள் உழைத்துக் கூலி வாங்கவேண்டுமானால் அவள் கையிலிருப்பதையாவது தின்றாக வேண்டும். அவளுக்காக இல்லாவிட்டாலும் முருகையனுக்காகவாவது அதை உட்கொண்டுதான் ஆக வேண்டும்.

இவள் மனத்தில் அவளையறியாது கிளர்ந்தெழுந்த வேகத்துடன் அவள் பொட்டலத்தைப் பிரிக்கப் போனாள். ஆனால் பிரிக்கவில்லை. தெருவின் முனையில் வாடிய தோற்றத்துடனும் தளர்ந்த நடை நடந்து முருகையன் வருவதை அவள்பார்த்துவிட்டாள்.

அவள் நெஞ்சு பதைத்தது. அவளுக்குத் திகைப்பு. முகம் பரிதாபமாக மாறியது. சங்கடமான உணர்வுகள். கண நேரக் கொந்தளிப்பு. அதில் தீர்க்கமான முடிவு தெரிந்தது. அவள் அந்தப் பொட்டலத்தைச் 'சட்'டென்று மடியில் வைத்து மறைத்தாள்.

ஒரு தாய்க்கு நேரக்கூடாத கொடுமை.

தயங்கித் தயங்கி நத்தை போல் ஊர்ந்து வந்த முருகையன் தங்கத்தை அணுகித் தயக்கத்துடனேயே நின்றான். அவனுக்கு எட்டு வயதானாலும் ஆறு வயது வளர்ச்சிதான். சற்றுத் தூரத்தில் இருந்த 'கம்பெனி' ஒன்றில் சிறு சிறு பெட்டிகளின்மேல் 'லேபில்' ஒட்டும் வேலை அன்று அவனுக்குக் கிடைத்திருந்தது. சரக்கின் தரத்தைவிட 'லேபி'ளுக்குத்தானே முக்கியத்துவம் அதிகம்? அந்த முக்கியமான வேலையைச் செய்த முருகையனுக்குக் கூலியும் கிடைக்கும். நூறு 'லேபில்'கள் ஒட்டினால் பத்துக் காசுகள்! இருநூற்றுக்கு இருபது காசுகள்! முந்நூற்றுக்கு..... அவ்வளவு ஒட்ட அவனால் முடியாதே!

அவனுடைய பசித்த முகம் தங்கத்தைப் பதறச் செய்தது. அவனது இளைத்த முதுகையும் காய்ந்த தலையையும் தடவிக் கொடுத்தாள். அவன் முகம் லேசாக வெளுத்து, கண்ணுக்குக் கீழ் கருமை படர்ந்திருந்தது. அவனுக்குத் தெரியும், தின்பதற்கு ஏதும் இருக்காது என்று. இருந்தாலும் வந்திருந்தான்.

அவனுடைய ஸ்பரிசம் பசியில் புதைந்திருந்த அந்தத் தாயின் பாசத்தைத் துடித்தெழச் செய்தது. 'குழந்தையிடம் மறைத்து அதைத் தின்ன வேண்டுமா? சே! அதை அவனிடமே கொடுத்து விடுவோம்.'

இந்த எண்ணம் வந்தது. எந்தத் தாய்க்குத் தான் தன் குழந்தையை ஏமாற்றி விட்டுத் தான் உண்ண மனம் வரும்? ஆனால்—


எல்லையற்ற
சக்தி !
அமோகமான இச்சக்தியை அவர்களுக்கு அளித்தது எது? சக்தியையும், உடல் வளத்தையும் தரும் மால்ட், பால், குளுகோஸ், முதிர்ந்த கோதுமை ஆகியவை அடங்கிய
ஜே. பி. மங்காராமின்
எனர்ஜி புட்
பிஸ்கட்டுகள்
ஜே. பி. மங்காராம் & கோ., குவாலியர்
சென்னை காரியாலயம்
த. பெ. நெ. 1397 35/37, தம்பு செட்டித் தெரு, சென்னை-1 போன்: 55696


அவள் உடல் அப்போதும் மெல்ல நடுங்கிக் கொண்டிருந்தது. சற்று நேரத்துக்கு முன்னர் அவளை மயங்கி வீழ்த்திய அயற்சி இன்னும் அவளை விட்டு அகலவில்லை. அதே நிலையோடு அவள் வெய்யிலில் கல் சுமந்தாக வேண்டும். கழுத்து நோக, முதுகு ஒடிய அவள் உழைக்க வேண்டும். மற்றொருமுறை மயங்கி விழுந்தால்?

பொங்கி எழுந்த தாய்மை உணர்ச்சிக்கு அவள் அணை விட்டாள். மனத்தையும் இரும்பாக்கினாள்.

அவன் அவளை விநோதமாகப் பார்த்தான். பிறகு பார்க்கக் கூசியவனைப்போல் தலை குனிந்து கொண்டான். என்னவோ கூற வாயெடுத்தான். ஆனால் எதையும் சொல்லாமல் வாயை மூடிக் கொண்டான். அவன் தோற்றம் இயற்கையாக இருக்கவில்லை. அவன் எதையோ மறைக்க வேண்டும். அல்லது அவன் மறைத்ததை அவள் உணர்ந்திருக்க வேண்டும்.

'அப்படித்தான் இருக்குமோ? அவன் பார்த்திருப்பானோ?'

அவளுக்குத் 'திக்' கென்றது. தான் ஏதோ கேவலமான காரியத்தைச் செய்து விட்டது போல் தோன்றியது. அவனுடைய மௌனம் அவள் மனத்தை அரித்தது. ஏதாவது பேச எண்ணினாள். என்ன பேச முடியும்? மயங்கிவிழுந்ததை அவனிடம் கூறக் கூடாது. வேறு என்ன [illegible] நினைத்தாள் பேசவில்லை.



எதைப் பேசவும் அவனுக்கு வாயெழவில்லை. இனிப்புப் பொட்டலம் அவன் நெஞ்சுக்குள் கல்லாகக் கனத்தது. அந்தப் பிஞ்சு உடலை ஸ்பரிசித்த தாயின் கரங்கள், உடனே மடியிலிருந்ததை எடுத்து அவனிடம் தந்துவிடத் துடித்தன. அந்தப் பாச உணர்வை அவள் அடக்கி வைத்தாள். மாலை வரைதானே! கூலி வாங்கினாலும் அவள் செல்ல மகனுக்கு வேண்டியதெல்லாம் வாங்கித் தருவாளே!

"சரி, நான் போறேம்மா!"

நெஞ்சை உருக்கும் குரலில் அவன் கூறினான். அவன் போகிறானாம்! போகச் சொல்ல வேண்டியதுதானா?

அவளுக்கு முள்ளின்மேல் நிற்பது போல் இருந்தது. தீயில் புரள்வது போலிருந்தது. இவனைப் போகச் சொல்ல வேண்டியதுதானா?

அவளுக்குத் தொண்டை அடைத்தது. முகமெல்லாம் வேர்த்தது. பசி ஒரு பக்கமும் பாசம் ஒரு பக்கமும் அதிர்ந்து எழுந்து ஆர்ப்பரித்து அவளைத் திணறச் செய்தன. அவள் ஒன்றுமே கூறவில்லை. அயாசத்துடன் மரத்தின்மீதே சாய்ந்தாள்.

அவன் மெள்ள நடந்து சென்றான். தயக்கத்துடன் நின்று திரும்பினான். ஏதோ பேசவேண்டும் என்ற தவிப்பு. மீண்டும் நடந்தான். நடையிலும் ஏதோ ஒரு தயக்கம் சிக்கிவிட்டது.

அவள் மனம் கசிந்தது. திரும்ப அவனை அழைக்கலாமா என்றும் நினைத்தாள். ஆனால் அழைக்கவில்லை. 'பல்லைக் கடித்துக் கொண்டு எப்படியோ மருந்து சாப்பிடுவதுபோல் இதை விழுங்க வேண்டும்!' என்று தீர்மானித்தவாறு பொட்டலத்தை எடுத்துப் பிரித்து அதிலிருந்த இனிப்பை விண்டு வாயில் போட்டாள்.

பசியின் களைப்போ அல்லது மனத்தின் உறுத்தலோ வாயில் போட்டது தொண்டையில் சிக்கியது. கண்கள் வெளியே வரப் பார்த்தன. அவள் திணறி, இருமி வாயிலிட்டதைத் 'தூ' என்று வெளியே துப்பினாள்.

"சேச்சே! இது இறங்காது. பச்சைக் குழந்தையைப் பட்டினி போட்டு நான் தின்பதா? இப்படித் தின்று உயிரோடு இருக்கிறதைப் பார்க்கிறம்...."

பழையபடி அவள் பொட்டலத்தை மடித்து மடியில் வைத்துக் கொண்டாள். முகத்தைத் துடைத்து விட்டாள். பிறகு அவனை அழைப்பதற்காகத் திரும்பினாள். ஆனால் அவள் அழைக்கு முன்பே கொஞ்சதூரம் சென்றிருந்த முருகையன் திரும்பி வந்து கொண்டிருந்தான். சென்றவன் ஏன் திரும்பி வர வேண்டும்?

அவள் மனத்தில் கலவரம். ஒருவேளை அவளுடைய அற்பச் செயல் அவனுக்குத் தெரிந்து விட்டதோ! அதனால்தான் அப்படித் தயங்கித் தயங்கிச் சென்றானோ! அதனால்தான் இப்போது திரும்பி வருகிறானோ! 'இருக்காது' என்று அவள் தன்னைத் தேற்றிக்கொண்டாள். அவள் எதிரில் அவன் வந்து நின்றான்.

"அம்மா!"

அவன் குரல் நெகிழ்ந்திருந்தது. பொங்கி வந்த அழுகையை அவன் அடக்க முயன்று கொண்டிருந்தான். ஒரு கை கண்ணைக் கசக்கியது. மற்றொன்று கால் சட்டைப் பைக்குள் இருந்தது. கீழுதடு பிதுங்கி அழுகை வெடிக்கக் காத்திருந்தது. அவள் பதறினாள். அவ்வளவு பசியா அவள் செல்லனுக்கு!

"அம்மா!"

அவன் மீண்டும் அழைத்தான். இப்போது அது அழுகையாகவே ஒலித்தது.

"அம்மா... நானே தின்கலான்னு....... நெனைச்சேன்!"

அவளுக்குச் 'சொரே'லென்றது. 'அப்படி யானால் அவனுக்குத் தெரியுமா?'

அடுத்த கணம் அவன் பையிலிருந்து கையை எடுத்தான். அதில் பிரிக்காததோர் இனிப்புப் பொட்டலம் இருந்தது. அவள் வைத்திருந்த அதே போன்றதொரு பொட்டலம். அதை அவன் கெட்டியாகப் பற்றியிருந்தான். பத்துப் பேர்கள் அவனிடமிருந்து அதைப் பறிக்கப் பார்ப்பதுபோல் நீட்டிய கையில் அதை இறுக்கமாகப் பிடித்திருந்தான். அவன் கண்களில் நீர் வழிந்தது.

அவள் தோளினை அவன் ஆதுரத்துடன் பற்றினான். "கம்பெனியிலே தந்தாங்களா?"

'ஆமாம்' என்பது போல் அவன் தலையசைத்தான். இந்தக் கட்டடத்து முதலாளிதான் அந்தக்கம்பெனியின் முதலாளியாகவும் இருக்க வேண்டும். அந்த இள மனதின் போராட்டம் அவளுக்கு விளங்கியது. இவள் மடியில் இருந்ததைப் போல் அவன் பையிலும் ஒரு பொட்டலம் இருந்து அவனைத் தவிக்க வைத்திருக்கிறது. பசியையும் ஆவலையும் அவன் ஒவ்வொரு கணமும் எதிர்த்துப் போராடியிருக்கிறான். களங்கம் எதையும் கற்காமல் தாயின் அரவணைப்பு ஒன்றிலேயே வளர்ந்திருந்த அவனால் அதை மறைத்துவிட முடியவில்லை.

"இன்னேண்டா கண்ணு, நீயே தின்னேன்!"

முடியாது என்பது போல் அவன் தலையசைத்தான். உதடு மேலும் பிதுங்கியது. சிரமப்பட்டு வாய் திறந்து "உனக்கு?" என்றான்.

அவள் மெய்யெல்லாம் பதறியது. 'இந்தச் செல்வத்துக்காக எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் பட்டினியாகப் பாடுபட முடியும்!' என்று வெறி கொண்டாற் போல் எண்ணினாள். இனி அவளுக்குப் பசி வராது. மயக்கம் வராது. களைப்பு வராது. அவளுக்கு உணவும் வேண்டாம். அவள் வெய்யிலில் உழைப்பாள். உழைத்து அவனைக் காப்பாற்றுவாள்.

உறுதியான விழிகளில் தாய்மையின் உணர்வெல்லாம் துடிக்க அவள் அவன் மற்றொரு கையைப் பற்றினாள். "எனக்கு வேண்டாண்டா. எனக்குப் பசியே இல்லை! நீ சாப்பிடு. இந்தா இதையும் சாப்பிடு!"

மடியிலிருந்த பொட்டலத்தை எடுத்து அவன் கையில் வைத்தாள். அவ்வளவு நேரமும் பாறையாக இறுகியிருந்த அவள் மனம் உடைத்துப் பெருகும் ஏரி போல் பொங்கி எழுந்தது. வைராக்கியமாக உலர்ந்திருந்த அவள் கண்கள் நீரைப் பொழிந்தன. அடைத்திருந்த வாய் திறந்து அவள் கேவினாள்.

"பெற்ற குழந்தையை வஞ்சிக்கும் காலமாச்சேடா, கண்ணு!"

இரண்டு சின்னஞ்சிறு கைகளிலும் இரண்டு பொட்டலங்களையும் ஏந்தி நின்ற அவனை அவள் அப்படியே இறுகக் கட்டிக் கொண்டாள். பசியை வென்ற பாசம் பொங்கிப் பெருகியது. அவள் கண்களை மூடிக் கொண்டாள். தாய்மை சிறுமையுற்ற துன்பத்தைத் தாளாது, தவித்து, நெக்குருகி அவள் துடித்து நின்ற காட்சி...அப்பப்பா!


CHAMP
உங்கள் குழந்தைக்கும்
க்ரைமிக்ஸ் கொடுங்கள்
க்ரைமிக்ஸ் குழந்தைதான் வெற்றி வீரன்
Grymix
GRYMIX
Boots
TAM
NATIONAL-BG-161

தீக்கிரை கழியட்டும்!



கிராமம் முழுதுமே இங்கு கூடியிருக்கிறது. சாட்சிகள் விசாரணை முடிந்து, பஞ்சாயத்தில் சூடு பிடிக்கிறது.

"அவளைத் தொட்டுத் தாலி கட்டின பாவத்துக்குப் பரிசப் பணம் அபராதமாகப் போகட்டும்—இன்னிக்கோட அவளுக்கும் எனக்கும் சொந்த பந்தம் இல்லைன்னு தீர்ந்து போகணும்" என்ற ஒரே சொல்லில் நின்றான் கன்னையா.

பஞ்சாயத்துத் தலைவரான முத்துச் சிங்கத்தேவர் இந்தக் கிராமம் உண்டான காலத்து மனிதர். இதைப் போல் எத்தனையோ வழக்குகளைத் தீர்த்துக் கரை கண்டவர். ஆனால் இந்த வழக்கிலே சிக்கல் இருக்கிறது. ஏனெனில் வாதியும் பிரதிவாதியும் அவருக்குப் பேரனும்பேத்தியும்!

அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

"அப்படித் தீர்த்துப் போடணும்னு நினைக்கிறவன் இப்படிப் படுகாயப் படும்படியா அடிச்சிருக்க வேண்டாமில்லெ? துண்டு தறிக்கிறதுக்கு முன்னாலே நிதானிச்சிருக்க வேணும்" என்று கூறினார்.

"சேரமிருக்க போறதுக்குத்தானே இந்தப் புத்தி வந்திருக்கு" என்று சொல்லி இடையில் சிம்பினான் கந்தசாமி. அவன் கன்னையாவுக்கு மச்சினன்.

"கெட்ட காலத்துக்குத்தான் ஊர் மேயற கழுதையைக் கட்டிக்கிட்டு முச்சந்தியிலே நிக்கிறேன்" என்றான் கன்னையா கொதிப்புடன்.

சாவடியின் கீழ்த் திண்ணை யோரமாக – பெண்கள் கூட்டத்துக்கு முன்பாக நின்று கொண்டிருந்த கண்ணம்மாள் தலை நிமிர்ந்தாள். முன்நெற்றியில் பட்டிருந்த காயத்துக்குக் கரித்துகளை அழுத்திக் கட்டியிருந்தார்கள். துணிக்கு மேலேயும் இரத்தக் கசிவு சிவப்பாகப் படர்ந்திருந்தது.

அவளது கலங்கிய விழிகள் கன்னையாவின் பக்கமாகத் திரும்பின.

வீட்டுக்குள்ளே, அடித்தது-பேசியது எல்லாம் போகட்டும்! நாலு பேர்கள் முன்னிலையிலும் இப்படியெல்லாம் பேச வேண்டுமா? இந்தக் கீறல் என்று மறையப் போகிறது?

பொங்கி வந்த அழுகையை அடக்கிக்கொண்டு அவள் தலைகுனிந்தாள்.

"கன்னையா தீர்த்துக்கணும்னு சொல்றான்! உன் மனசிலே இருக்கிறதையும் சொல்லம்மா" என்று கூறினார் முத்துச் சிங்கத் தேவர்.

நீர் கோத்த இமைகள் படபடக்க மீண்டும் தலை நிமிர்ந்தாள் கண்ணம்மாள். அவளது உலர்ந்த உதடுகள் துடித்தன.

"இந்தப் பழியை ஏத்துக்கிட்டு நான் தாலியைத் தரமாட்டேன்!" என்றவள்-விம்மலுடன் அங்கிருந்து நடந்தாள்.

தேவருக்குக் கண்கள் கலங்கின. அப்போது அமைதியாக இருந்த அந்தச் சாவடியில் அவரது குரல் மட்டுமே கேட்டது.

''ஆத்திரத்திலே அவசரப்பட்டு எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது. கண்ணம்மா இருக்கட்டும். இதுக்குஇடையிலேயேஏதொந்தப் பேச்சும் இருக்கப்படாது!'' என்று சொல்லி விவகாரத்தை ஒத்திப் போட்டார் தேவர்.

'' ஆமா....அதுக்குள்ளே...நல்லது கெட்டது தெரிஞ்சு போகும்!'' என்று ஆமோதித்தார் எதிரிலிருந்தவர்.

கண்ணம்மாளின் தலைவன்-கன்னையாவின் பக்கமிருந்து ஏதோ முணுமுணுக்கும் குரல் கேட்டது. ஆனாலும் வேறு பேச்சுக்கு இடமின்றிப் பஞ்சாயத்து கலைந்து விட்டது.

* * *

இந்தக் கிராமத்திலேயே கந்தசாமி சற்றுப் பசையுள்ளவன். கண்ணம்மாள் அவனுக்கு ஒரே தங்கை. தாய் தந்தை இல்லாத தங்கையைக் கண் கலங்காமல் வளர்த்தவன் கந்தசாமி.

கண்ணம்மாளுக்குப் பொருத்தமான மாப்பிள்ளையாகத் தேடியலைந்த பொழுதுதான் அவனது காதில் ரகசியமாக ஒரு பேச்சு விழுந்தது. அதைச் சொன்னவனும் கன்னையாவேதான். அப்போது இருவரும் இணைபிரியாத நண்பர்கள்.

ஆற்றங்கரையிலே-அடிக்கடி செல்லையாவும் கண்ணம்மாளும் நின்று



சோம. மகாதேவன்

தப்பு வழியிலே நடந்ததாக எனக்குப் படலே! எதற்கும் இந்த விவகாரத்தைச்சித்திரை கழிஞ்சதும் வைச்சுக்கலாம். அது வரைக்கும் கண்ணம்மா அவ அண்ணன் வீட்டிலே

பேசிக் கொள்வதாகக் கன்னையா சொன்னான். அதைக் கேட்டுக் கந்தசாமிக்கு உள்ளம் துடி துடித்தது. பெரும் அவமானமாக இருந்தது.

அன்றிரவே கந்தசாமி தன்னுடைய தங்கையிடம் கேட்டு விட்டான். அவள் தலை குனிந்துகொண்டே நின்றாள்.

"இந்தச் செல்லையாவுக்கு நீட்டிப் படுக்க ஒரு வீடு கிடையாது. கையகலப் பூமியில்லை. கந்தசாமியின் வீட்டில் சம்பந்தம் செய்துகொள்ளக் கொஞ்சமாவதுதகுதியிருக்கிறதா அவனுக்கு!"

கந்தசாமி பேசிக்கொண்டே யிருந்தான்.

அழுத்திக் கேட்டபோது அவன் தலை நிமிர்ந்தான். வேறு ஒன்றும் பேசவில்லை. கலங்கிய கண்களில் நீர் வழிந்தது.

வேறு நினைவின்றி இரண்டு தினங்களுக்குள்ளாகவே கந்தசாமி இந்த முடிவுக்கு வந்து விட்டான். தனது தங்கைக்குப் பொருத்திய கணவனாக அவன் கன்னையாவையே தேர்ந்தெடுத்து விட்டான்.

கன்னையாவுக்கு, பூர்வீகச் சொத்தென்று விற்றுத் தொலைத்தது போக இன்னமும் கொஞ்சம் பாக்கி யிருந்தது. இனிமேலாவது கொஞ்சம் இழுத்துப் பிடித்து விட்டால் பையன் தங்கக் கம்பியாச்சே !

கண்ணம்மாள் இந்த முடிவை அறிந்தது முதல் தெளிவாக இல்லை. அவ்வளவுதான்.

மணவினை முடிந்து கன்னையாவின் இல்லறம் ஆரம்பமாகியது. கந்தசாமியின் மேற்பார்வையில் அவனும் காடு கரைகளில் இறங்கிக் கருக்கடையாக வேலை செய்ய ஆரம்பித்தான். அவன் அடியெடுத்து வைத்த நேரம் கையிலும் கொஞ்சம் ரொக்கம் சேர்ந்தது. வீட்டிலும் மகிழ்வு பொங்கி வழிந்தது. இருந்தாலும் இடையில் செல்லையாவும் அதே கிராமத்தில் கண்ணெதிரில் நடமாடுவது கன்னையாவின் மனத்தில் ஒரு குறுகுறுப்பை உண்டாக்கிக் கொண்டே யிருந்திருக்க வேண்டும்.

நேற்றுத்தானே அந்த வினை வித்தாக விழுந்து, ஒரே நாளில் இந்தப் பஞ்சாயத்து கூடும் அளவுக்கு மரமாகிவிட்டது!

செம்மேட்டு நஞ்சையில் வரப்பு வெட்டிக் கொண்டிருந்தான் கன்னையா. அவனுக்கு மதியக் கஞ்சி கொடுத்துவிட்டு ஊருக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தாள் கண்ணம்மா.

வரப்படிப் பாதையின் குறுக்காக-பூசாடி வாமடையில் தண்ணீர் நிறைந்து ஓடிக் கொண்டிருந்தது. வரும்போது வறண்டிருந்த வாய்க்கால் பெரிய மடை முழுதும் திறந்து விட்டார்களோ என்னமோ! அங்கு ஆள் நடமாட்டமும் இல்லை.

சுற்றுமுற்றும் பார்த்தாள் கண்ணம்மாள்.

இந்த வரப்பின்மீதே....வாய்க்காலை ஒட்டியே சென்றால் சற்றுத் தள்ளிக் கணக்குப் பிள்ளை மாவடி கரும்புக் காடு. அதைக் கடந்து விட்டால் மேல்புறம் மடைப் பாலம். இந்தச் சுற்றுப் பாதையைத் தவிர இப்போது வேறு வழியே இல்லை. குறுக்குப்பாதை யென்று இடுப்பளவு தண்ணீரில் இறங்க முடியுமா ?

வரப்பின் வழியாகவே நடந்தாள் கண்ணம்மாள்.

இருமருங்கிலும் ஆள் உயரத்துக்கு மேல் வளர்ந்த கரும்புக்கிடையே வரப்பின்மீது செல்லும் ஒத்தையடிப்பாதை.

கண்ணம்மாள் கரும்புக் காட்டுக்குள்ளே நுழைந்து விட்டாள்.

பாதி தூரத்தைக் கடந்து வளைவில் திரும்பியபோதுதான் எதிர் முகமாகச் செல்லையா வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

திருமணத்துக்குப் பிறகு கண்ணம்மாள் அவனை எத்தனையோ தடவை ஊருக்குள்ளே பார்த்திருக்கிறாள். ஆனாலும் இப்போது தனிமையில் கரும்புக் காட்டுக்குள்ளே...!

அவளது நெஞ்சு படபடத்தது. உடல் முழுதும் 'குப்'பென்று வியர்த்தது. மேற்கொண்டு அடியெடுத்து வைத்தாலும் கால்கள் பின்னுக்கு இழுத்தன.

அவனும் நெருங்கி விட்டான். அவனுக்கும் இதே நிலைதான் ஏற்பட்டிருக்க வேண்டும். அவளை நிமிர்ந்து பார்த்தவன் தலைகுனிந்து கொண்டான்.

எதைப் பேசுவது ?

அவனும் கண்களையோ, முகத்தையோ துடைத்துக் கொண்டான்.

அவள் சற்றுத் தெளிவடைந்து அவனைக் கடந்து செல்ல அடியெடுத்து வைத்தபோது தான் அவளது பார்வை அவனுக்குப் பின்னால் வரப்பின் மீது தயங்கியது.

பதற்றத்துடன் 'பாம்பு' என்று உரக்கக் கத்தினாள் அவள்.

திடுக்கிட்டுத் திரும்பினான் செல்லையா.

வரப்பின் மீது தலை தூக்கி நின்றது ஒரு நல்ல பாம்பு.

அவன் பின்னால் நகர்ந்தான். குறிப்பாக அடிப்பதென்றால் அவன் கையில் தடியில்லை.

பாம்பு படமெடுத்து அவனுக்குப் பக்கமாகப் பாய்ந்தது.

தடுமாறி நின்ற கண்ணம்மாளையும் இழுத்துக் கொண்டு அவன் வந்த பாதை வழியாக விரைந்து ஓடினான் செல்லையா.

பூசாடி வாமடையில் பெருகியோடும் தண்ணீரை மறிக்க, கையில் மண்வெட்டியோடு எதிரே ஓடிவந்த கன்னையா — அவனும் அவளும் கரும்புக் காட்டுக்குள்ளிருந்து கைகோத்து ஓடி வருவதைப் பார்த்துவிட்டான்.

அன்று மாலைப் பொழுதுக்குள் வீட்டிலே புகைந்த பிரச்னை தெருச் சண்டையாக வளர்ந்து விட்டது.

கொண்டவன் அடித்து நெற்றியிலிருந்து இரத்தம் வழிந்த போதும் அவனது கால்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள் கண்ணம்மா.

"என்னை நம்புங்க!" என்று கதறினாள்.

கன்னையா கோபவெறியோடு சிரித்தான்.

"கரும்புக் காட்டுக்குள்ளே பாம்புமட்டுமா வரும்? பஞ்சு மெத்தையும் இருக்கும்!" என்று கொக்கரித்தான்.

அதற்குமேல் கந்தசாமியின் வகையறாக்கள் அங்கு வந்து பேச்சு முற்றிக் கைகலப்பு ஏற்படுவதற்குள் நிலைமையைக் கட்டுப்படுத்த முத்துச் சிங்கத்தேவர் பஞ்சாயத்தைக் கூட்டினார். செல்லையாவையும் அழைத்துக் கேட்டார்கள்.

அவனும் நடந்ததைச் சொன்னான்.

"இதெல்லாம் கட்டுக் கதை!" என்பது கன்னையாவின் முடிவு.

* * *

சாவடியின் மேற்புறம் மெழுக்குத் தெருவின் முனையில் இருக்கிறது கந்தசாமியின் மச்சு வீடு.

தானியங்கள் உலர்த்தும் மொட்டை மாடியில் கைகளைத் தலைக்கு அணையாக வைத்து


கால்கேட்டின் மூலம்
நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை
அகற்றி பற்கள்
சொத்தையாவதையும் தடுங்கள்!
ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் கிரீம் துர்நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.
கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினுல் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாறிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன! இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு! சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டென்டல் கிரீமினுல் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.
கால்கேட்டில் சேர்த்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனுலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.
COLGATE DENTAL CREAM
வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:
✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
✔ சொத்தையைத் தடுக்கிறது
✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது
COLGATE TOOTH POWDER
நீங்கள் பற்பொடியை விரும்பினுல், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.
COLGATE DENTAL CREAM
பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.
DCG. 32QT-TAM.

தென்னாட்டில் தற்பொழுது
49 கிளை ஸ்தாபனங்கள்

தி பஞ்சாப் நேஷனல் பாங்க் லிட்.

(இந்தியர்களுக்கே சொந்தமான மிகவும் புராதனமான பாங்க்)

அங்கீகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ.	2,00,00,000
கொடுக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	1,25,00,000
ரிசர்வ்கள்	...	ரூ.	1,58,50,000
டிபாசிட்டுகள்	...	ரூ.	1,39,48,47,019

புழக்கத்தில் உள்ள நிதி ரூ. 191 கோடிக்கு மேல்

இத்துடன் இண்டோ-கமர்ஷியல் பாங்க் இணைக்கப்பட்டு விட்டதினால், எங்கள் நிறம்பட்ட சேவை இப்பொழுது முக்கியமாகத் தென்னாட்டினருக்குக் கிடைக்கும்

மொத்தம் 417 கிளைகள்
அவைகளில் இரண்டு பாகிஸ்தானிலும்
ஒன்று பர்மாவிலும்

தி பஞ்சாப் நேஷனல் பாங்க் லிட்.

(ஸ்தாபிதம் : 1895)

தலைமைக் காரியாலயம் : பார்லிமெண்ட் ஸ்ட்ரீட், புது டில்லி

வின் மீன்கள் கண் சிமிட்டும் வான வெளியைப் பார்த்தபடி படுத்திருந்தான் கந்தசாமி.

நடுநிசியும் கடந்து விட்டது.

சற்று முன் வரையிலும் அவன் கந்தசாமியுடன் தான் பேசிக் கொண்டிருந்தான்.


நடந்து விட்டதை நினைத்து அவள் அழுகிருள். அதோடு துள்ளி வரும் கந்தசாமியின் கோபத்துக்கும் அணை போடுகிருள்.

"இதுக்கு மேலேயும் அட்டையைத் தூக்கிக் கட்டிலிலேவைக்கணுமா? காணுப் பிணமாகப் போறதுக்குத்தான் அவனுக்குக் காலம் வந்திருக்கு!" என்று திண்ணையிலிருந்தவாறே பொருமினன் கந்தசாமி.

ரேழியில் உட்கார்ந்திருந்த கண்ணம்மாள் எழுந்து அவனுக்கு எதிரே வந்து நின்றாள்.

"நீங்களும் கம்பு தூக்கி நின்று இனிமேலும் சந்தி சிரிக்க வேண்டாம்" என்றவள் முகத்தை மூடிக் கொண்டு பலமாக அழ ஆரம்பித்து விட்டாள்.

எந்த வகையில் அவளுக்கு ஆறுதல் சொல்ல முடியும்? வெகு நேரம் வரை திண்ணையிலேயே உட்கார்ந்து விட்டான் அவன். இரவில் வீட்டில் ஒருவருமே சாப்பிட வில்லை. அப்படி அப்படியே முந்தியை விரித்துப் படுத்துவிட்டார்கள். கந்தசாமியும் மெத்தைக்குச் சென்று அங்கு படுத்து விட்டான்.



சென்னை தியாகராயநகரில் மே மாதம் 26-ந் தேதியன்று அமால்கமேஷன் குரூப் கம்பெனிகளின் டைரக்டர் திரு எம். வி. வெங்கடராமன் அவர்களின் புதல்வர் திரு எம். வி. நாராயணசாமிக்கும் சௌ அலமேலுவுக்கும் அதி விமரிசையாக விவாகம் நடைபெற்றது. மணமகள் கொழும்பு சங்கரய்யர் அண்ட் சன்ஸ் டைரக்டர் ஸ்ரீ சங்கரய்யரின் புதல்வி. சென்னை நகரப் பிரமுகர்களும், தொழிலதிபர்களும், நண்பர்களும் இத்திருமணத்துக்கு வந்திருந்து மணமக்களை ஆசிர்வதித்தனர்.

குளிர்ந்த வாடைக் காற்று வீசியது. கந்தசாமி புரண்டு படுத்தான்.

முத்தாலம்மன்கோயில் பக்கமிருந்து இரட்டு நாயொன்று இழுத்து ஊளையிடும் குரல் நிசப்தத்திலே தேய்ந்து மறைந்தது.

கந்தசாமி எழுந்து உட்கார்ந்து முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

இமைகள் பொருந்தவில்லை. ஊருக்குள்ளே எங்கே திரும்பினலும் இதே பேச்சுத்தான்!

நெஞ்சிலே நிறைந்திருந்த சுமையை வெளியேற்றும் நீண்ட பெருமூச்சிலே அவனது உடம்பு நடுங்கியது.

வடக்கு தெற்கு தெரியாதவனுக்குக் கூடவே இருந்து பாதை காட்டிக் கண்ணைப் போல் பெண்ணையும் கொடுத்து ஆளாக்கி விட்டதற்கு நல்ல பலன்! தீராத பழிதான் தேடி வந்திருக்கிறது!

அவனது நினைவு செல்லையாவின் பக்கம் திரும்பியது.

அவன் அப்பாவி. உழைப்பதைத் தவிர அவனுக்கு வேறு என்ன தெரியும்? இவனோடு மறுபடியும் பேசும் அளவுக்கு அவனுக்கு நெஞ்சழுத்தம் இருக்க முடியுமா?

இந்தக் கன்னியாவுக்குத்தான் மதியில்லை. புத்தி கெட்டுப் போச்சு. குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொண்டது போல...

கீழே நடைக் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது. தொடர்ந்து தொட்டி முற்றத்தில் யாரோ வந்து நிற்பது போல் தெரிந்தது.

"இந்தாங்க!" அவனது மனைவியின் குரல்.

கந்தசாமி துண்டை உதறிக் கொண்டு எழுந்தான்.

"இறங்கி வாங்களேன்!"

"என்ன?"

"கண்ணம்மாளைக் காணோம்! வாசற்கதவு சும்மா அடைச்சிருக்கு!" என்றாள் அவள் நடுக்கத்துடன்.

கந்தசாமி பரபரப்புடன் இறங்கிச் சென்றான்.

* * *

மரண தாகம் பயத்தின் எல்லையையெல்லாம் கடந்து விடுமல்லவா?

வண்டுகளின் ரீங்காரத்தைத் தவிர வேறு அரவமற்ற தனிமையில் இரண்டு தெருக்களைக் கடந்து வந்து கொண்டிருந்தாள் கண்ணம்மா. நெற்றிக் காயத்திலிருந்து கொப்பளித்த இரத்தம் வலது புருவத்தின் மேலாக உறைந்து போயிருந்தது.

ரணத்தினால் ஏற்பட்ட உடல் வலியை அவள் மறந்தே போய் விட்டாள். ஆனால் கல்லையாவின் பேச்சும் கோபமும்.. இதை நினைக்கும்போதே அவளுக்குக் கண்கள் இருண்டு வந்தன.

சிறு வயதிலிருந்தே கண்ணம்மாள் அடக்கமான பெண்ணென்று பெயரெடுத்தவள். அவளது மனத்தில் இருந்ததை அவள் என்றுமே யாரிடமுமே சொல்லிக்கொண்டதில்லை.

மணந்தால் செல்லையாவையே மணப்பது என்று அவள் உறுதியாக நினைத்ததுண்டு. இந்த வழியில் தனது கற்பனைகளை வளர்த்துக் கொண்டதுண்டு. ஆனால் ஒன்றையுமே அவள் கந்தசாமியிடம் சொன்னதில்லை.

திருமணத்துக்குப் பிறகு அவள் செல்லையாவைக் குறித்துப் பரிதாபப்படுவாள். அவனும் குடியும் குடித்தனமுமாய் ஆகிவிட்டால் அவளது நெஞ்சு நிறைந்து விடும்...

ஆனால் இப்பொழுது அந்தத் தழும்பேறிய காயத்தின்மீது மீண்டும் கீறல். இத்தனை காலமும் வாழ்ந்ததெல்லாம் இந்தப் பழிச் சொல்லை ஏற்பதற்காகவா?

மூடியோடுதான் வீட்டிலிருந்து அவள் வெளியேறினாள்.

எப்படியோ இந்தப் புகைச்சல் இதோடு அணைந்து போகட்டும். அவள் கண்ணை மூடிய பிறகாவது கல்லையா தெளிவடையட்டும்.

கிராமத்தின் எல்லைக்கு வந்தாகி விட்டது. பாதையின் ஓரமாகப் பள்ளிக்கூடத்தை அடுத்திருந்த ஆலமரம் இருள் கூடமாக நீண்டு கிடந்தது. எதிரே... முத்தாலம்மன் கோவிலின் வெளிப்பிராகாரம்.

ஆலமரத்தின் நிழலில் ஒன்றடங்கித் தயங்கி நின்றாள் அவள். இந்த நேரத்தில் கோவில் வாசலில் யாரோ அம்மனை வேண்டிக் கொள்வதுபோல் நிற்பது தெரிந்தது.

கோவில் வாசலில் நின்று கொண்டிருந்தவன் — திரும்பி ஆலமரத்தை நோக்கியே வந்து கொண்டிருந்தான்.

அவளது உடல் நடுங்கியது. மரத்தின் இருளில் நுழைந்தபோது, அவன் யாரென்று தெரிந்து விட்டது அவளுக்கு.

செல்லையா!

இருளுக்கு மேல் இருளாக அவளது கண்கள் இருண்டன. அவளுக்குச் சற்றுத் தள்ளித் தயங்கி நின்று விட்டான் அவன். "யாரது!" என்ற அதட்டலும் அரை குறையாகத் தேய்ந்தது.

அவள் திரும்பினாள். உதடுகள் ஒட்டிக் கொண்டன.

"யார் நிற்கிறது?" என்ற அவனது குரலில் இப்போது பயம் தெளிந்து விட்டது. அவளுக்குச் சமீபமாக அடியெடுத்து வைத்தவன் மீண்டும் தயங்கினான்.

"யாரு...கண்ணம்மாவா?"

அவள் பேசவில்லை.

"ஒரு சோதனை போதாதா...இந்த நேரத்திலே இங்கே எதற்கு வந்தே?"

அவள் குமுறிவந்த அழுகையெல்லாம் ஒன்றுசேர, "சாகிறதுக்கு!" என்றாள்.

"நாம ரெண்டு பேரும் எப்பவும் இந்தப் பழியை ஏத்துக்கத்தான் போறோம்!" என்றான் அவன் சற்றுத் தயங்கி.

"என்ன சொல்றீங்க?"

"நானும் சாகத்தான் வந்திருக்கேன்!" என்றான் அவன் தெளிவாக.

"நீங்க எதுக்குச் சாகணும்!?"

அவன் வறண்ட குரலில் கூறினான்:

"வாழுறதுக்கு எனக்கு என்ன பிடிப்பு இருக்கு? நான் எந்தப் பாவத்தைச் செய்தேன், கண்ணம்மா? நல்லவனாகவே இருந்திட்டு இப்ப இந்தப் பழிச்சொல்லை ஏத்துக்க முடியுமா? நான் செத்த பிறகாவது இது நீங்கிப் போகும்."

அவள் குனிந்து இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு அழுதாள்.

"நானும் சாகத்தான் போகிறேன்!" என்றாள் கண்ணம்மா.

செல்லையா பரபரப்போடு அவளுக்குப் பக்கத்தில் வந்து நின்றான்.

"ரெண்டுபேரும் ஒரே நேரத்திலே சாகிறது ஊரார் சொல்கிறது உண்மைன்னு ஆக்கிப் போடும்....கண்ணம்மா! இந்தப் பழிச்சொல் என் தலையோட மறையட்டும்! நீ வீட்டுக்குப் போ!" என்று படபடத்தான்.

அவள் உடல் குலுங்க அழுதாள்.

அவன் துடித்தான்.

"நின்னு பேச இதுவா நேரம்? கல்லையாவின் கோபமெல்லாம் நாளைக்கே மாறிப் போகும். நீ எப்பவும் நல்லா யிருக்கணும் கண்ணம்மா!......அது ஒண்ணு போதும் எனக்கு!" என்றான் செல்லையா.

அவள் நீர் கோத்த இமைகள் படபடக்கத் தலை நிமிர்ந்தாள்.

"அந்த நம்பிக்கை இருந்தா நான் இங்கே எதுக்கு வாரேன்!"

அவன் கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டான்.

"நம்பித்தான் ஆகணும் கண்ணம்மா. அதுக்காக என் உயிர் பலியாகட்டும். எனக்காக நாலு சொட்டுக் கண்ணீர் சிந்த நீயாவது இந்த உலகத்திலே இருக்கிறியே, இதை நினைச்சு நிம்மதியா செத்துப் போவேன். இது போதும் எனக்கு...நீ வீட்டுக்குப் போ!"

"ஊஹூம்! நானும் சாகத்தான் இவ்வளவு தூரம் வந்திருக்கேன்!"

அவன் பரபரப்போடு சுற்றிலும் பார்த்தான்.

"பைத்தியம் மாதிரி பேசறியே. நாம ரெண்டு பேரும் ஒரே நேரத்திலே சாகிறதுனாலே பழி நீங்குமா — நிலைச்சுப் போகும். நீ வீட்டுக்குப் போ...அதோ, மந்தைக்களத்து வழியா யாரோ விளக்கோட வாராங்க. நீ பள்ளிக்கூடத்துப் பக்கமாப் போ!" என்று பதறினான் அவன்.

அவள் தயங்கினாள்.

"இங்கே நிக்காதே கண்ணம்மா!" என்று தணிந்த குரலில் அதட்டினான் அவன்.

படபடக்கும் நெஞ்சோடு அவள் பள்ளிக்கூடத்தின் பக்கமாக நடந்தாள்.

இருளுக்குள் அவள் மறைந்து செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த செல்லையா, மரத்தடியில் நின்ற குத்துக் கல்லின்மீது உட்கார்ந்தான்.

'நல்லதுக்குத்தான்... இந்த முத்தாலம்மனுக்குக் கும்பிடு போடுறதுக்கு நிக்கலையின்னா கண்ணம்மா நேரே ஆற்றங்கரைக்குப் போயிருக்கும் கண்ணை மூடுறதுக்கு! ஒண்ணும் தெரியாம ரெண்டு பேரும் செத்துப் போனா... எப்பவும் இந்தப் பழி மறையுமா?'

பொழுது விடிவதற்குள் செல்லையாவின் கதை முடிந்து விடும். நாளை கண்ணம்மாள் அழுதாலும்...... அப்புறம் கன்னையாவோடு வாழும்போது சிரிக்கத்தான் செய்வாள்.

மந்தைக் களத்தின் வழியாக விளக்கோடு வந்தவர்கள் அருகே நெருங்கி விட்டார்கள்.

மரத்தின் மறைவிலே நிற்பது நல்லது என்ற முடிவோடு செல்லையா எழுந்தான். அதே சமயத்தில் விளக்கின் ஒளி மரத்தடி நிழலை விரட்டியது. தொடர்ந்து "யாரது?" என்று கடுமையாக அதட்டும் குரல் கேட்டது. யாரென்று தெளிவாகவில்லை. யாராக இருந்தால் என்ன?

கையில் தொங்கிய நூல் கயிற்றைச் சுருட்டி எடுத்துக்கொண்டு முன்னால் வந்தான்.

"என்னடா இந்த நேரத்திலே இங்கேயும் நாடகம் நடக்குதா?" என்ற கேலிப் பேச்சு வரவேற்புக் கொடுத்தது.

கன்னையாதான் பேசினான். அவனுக்குப் பக்கத் துணையாகக் கையில் நீண்ட தடியோடு நின்றுகொண்டிருந்தான் மாசாணம்.

செல்லையா நின்றுவிட்டான். பேசவில்லை.

"சாவடியெல்லாம் தேடிப்போட்டுத்தான் இங்கே வந்திருக்கோம்!" என்றான் மாசாணம் கைத்தடியை முன்னால் நிறுத்தி.

"எதுக்கு?" என்று கேட்டான் செல்லையா விரக்தியோடு.

"ரெண்டுலே ஒண்ணு தெரியத்தான்!" கன்னையாவின் கோபம் அணையவில்லை. கனிகிறது.

"எல்லாமே விடிந்ததும் தெரிஞ்சுபோகும்!" என்று முணுமுணுத்தான் செல்லையா.

"என்னடா...சொல்றே?...

"சொல்றதுக்கு என்ன இருக்கு?"

"அப்ப நடந்ததை ஒத்துக்கிறியா? அள்ளிச் சொருகின கொண்டையிலே எல்லாத்தையும் அமுக்கிப் போட்டுப் பஞ்சாயத்திலே பத்தினி வேஷம் போட்டாளே!"

"கன்னையா!" என்று குறுக்கிட்டான் செல்லையா சற்று உரத்த குரலில்.

"அவனே சொல்லட்டும்!" என்ற மாசாணம் மின்விளக்கைச் செல்லையாவின் முகத்துக்கு நேராகப் பிடித்து அழுத்தினான். அந்த நொடிப் பொழுதில் செல்லையாவின் கண்கள் கண்ணீரைக் கொட்டின.

"கன்னையா!—இப்பவே உனக்கு முடிவு தெரியணுமா?"

"அதுக்குத்தான் வந்திருக்கோம்" என்று இடையில் புகுந்தான் மாசாணம்.

செல்லையா சற்று முன்னால் வந்தான்.

"என்னிக்கோ ஒரு நாள் கண்ணம்மாளை நான் மனசாலே நினைச்சது உண்மை. இதுக்கு மேலே ஒரு குற்றமும் செய்யலே! சந்தேகத்தினாலே என்னென்னமோ நடந்து போச்சு. என் தலையோட எல்லாமே நீங்கிப் போகும்! நீங்க போங்க!" என்றவன் திரும்பி மரத்தடியை நோக்கி நடந்தான்.

"ஒப்புக் கொள்ளாம உன் வீட்டுப் போறானே!" என்றான் மாசாணம்.

"இந்தக் கதையெல்லாம் எங்களுக்கும் தெரியும்!" என்றான் கன்னையா.

"சாகப் போறவன்...இல்லாத கதையையெல்லாம் எதுக்குச் சொல்லப் போறான்! கன்னையா! உனக்கு நிம்மதி ஏற்படணும்னு தான் நான் சாகப் போறேன். கண்ணம்மாளோட குடும்பம் நடத்து. அது நல்ல பொண்ணு. கடைசி நேரத்திலே இதையாவது உங்கிட்ட சொல்ல முடிஞ்சது!"

செல்லையா குனிந்து இருகைகளாலும் முகத்தை மூடிக்கொண்டான். உழைத்து வைரம் பாய்ந்த அந்த வலிய உடல் குலுங்கியது.

கன்னையா விளக்கை அணைக்கவில்லை. அவனது நெஞ்சிலே ஒரு கலக்கம்.

"இப்ப நீ, சாகத்தான் இங்கே வந்தியா?"

செல்லையா எழுந்தான்! கீழே நழுவிய நூல் கயிற்றைக் கையிலெடுத்துக் கொண்டான்.

"இதிலேயும் நீ இடையிலே நுழையாதே, கன்னையா!" என்றவன் ஆற்றங்கரை பக்கமாக நடந்தான்.

"செல்லையா!" என்றான் கன்னையா நடுங்கிய குரலில். அப்போது பள்ளிக்கூடத்தின் பக்கமிருந்து பலர் ஓடிவரும் சந்தடி கேட்டது.

கையில் விளக்கோடு முன்னால் ஓடிவந்தான் கந்தசாமி. விரைந்த நடையில் தள்ளாடியவாறு பின்னால் வந்து கொண்டிருந்தார் முத்துச் சிங்கத் தேவர்.

அந்த இருளில் ஆல மரத்தடியில் ஒரு கூட்டமே கூடி விட்டது.

பொழுது புலர்ந்தது. கந்தசாமியின் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தான் கன்னையா.

"என்னை மன்னிச்சிடு, கண்ணம்மா! எல்லாத்தையும் மறந்திட்டு வீட்டுக்கு வா!" என்று அழைத்தான் அவன்.

உள் நடையில் நின்று கொண்டிருந்த கண்ணம்மா தலைவாசலுக்கு வந்து நின்றாள்.

"சித்திரை கழியட்டும்... அதுக்குள்ளே உங்க மனசு மாறாமல் இருக்கட்டும்!" என்றவள் வீட்டுக்குள்ளே போய் விட்டாள்.



க்ளாக்ஸோ
அருந்தி குழந்தைகள் நன்கு வளர்கின்றன



போதிய தாய்ப்பாலற்ற குழந்தைகளுக்கு க்ளாக்ஸோவே சிறந்த பாலுணவு. க்ளாக்ஸோ சுத்தமானது, எளிதில் ஜீரணமாகக் கூடியது. மேலும், குழந்தையின் நல்வளர்ச்சிக்கு அவசியமான இரும்புச்சத்தும், வைட்டமின் 'டி' யும் க்ளாக்ஸோவில் சேர்க்கப்பட்டுள்ளன. இலவசமாக க்ளாக்ஸோ குழந்தைப் புத்தகம் பெற விரும்புவோர், 50 ந. பைசா தபால் வில்லைகளை (தபால்செலவிற்காக) கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்புங்கள்: க்ளாக்ஸோ, உட்ஸ் ரோடு, மதறாஸ்-2

Glaxo



பாரெக்ஸ் — தாய்ப்பால் அல்லது புட்டிப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு, 4-5 மாதம் முதல் பாலுணவைத்தவிர பாரெக்ஸ் தானிய உணவும் அவசியம்.

க்ளாக்ஸோ லாபரெட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்.

பம்பாய் • கல்கத்தா • மதறாஸ் • புது டில்லி   டிப்போக்கள்: ஸ்ரீநகர் • கௌஹாத்தி • விஜயவாடா



திருமூலர் தவமொழி

ராஜாஜி – சோமு

10

இந்த உலகையும், இதன் இயல்புகளையும், உயிர் வர்க்கங்களையும், கடவுட் தத்துவத்தையும் நுட்பமாக ஆராய்ந்த சைவ சமய ஞானிகள் நித்தியப் பொருள்கள் மூன்று என்று கண்டு] சொல்லியிருக்கிறார்கள். அதாவது சாசுவதமாக இருக்கும் பொருள்கள் மூன்று. ஆரம்பமும் முடிவுமில்லாத பொருள்கள் இந்த மூன்றுமே என்று கண்டார்கள். இவை பதி, பசு, பாசம். இந்த மூன்றையும் பற்றிச் சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் 'முப்பொருள் உண்மை' என்று மிகவும் விரிவாக வர்ணிக்கப்பட்டுள்ளது. திருமூலரும் தம்முடைய உபதேசத்தின் ஆரம்பமாக இந்த மூன்றையும் பற்றியே கூறுகிறார்.

பதி என்பது இறைவன். பசு என்பது ஜீவன்களாகக் காணப்படும் உயிர்த் தத்துவம். பாசம் என்பது ஆன்மாக்களைக் கட்டி நிற்கும் தளை. இந்த மூன்றும் நித்தியமானவை. அதாவது உயிரும் தளையும் ஈசுவரனைப் போலவே அநாதி தத்துவங்கள்.

இறைவனும் ஆன்மாவும் அநாதியாகக் கூடவே இருந்தும், உயிரானது இறைவனைக் காண முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்னவென்றால், மூன்றாவது தத்துவமான பாசத்தினால் கட்டப்பட்டு அறியாமையில் அழுந்திக் கிடப்பதுதான்! இந்த அறியாமை நீங்கி உயிர்களுக்கு இறை – உணர்வு எப்படி ஏற்படுகிறது, எங்ஙனம் ஏற்படக் கூடும் என்பதை முனிவர் பாடுகிறார்.

> பதிபசு பாசம்
> எனப்பகர் மூன்றில்
> பதியினைப் போல், பசு
> பாசம் அநாதி.

[எனப்பகர்–என்று வகைப்படுத்திச் சொல்லப்படுகிற. அநாதி–ஆதியற்றது. எப்பொழுது ஆரம்பித்தது என்று சொல்ல முடியாதது.]

பதி, பசு, பாசம் என்று கூறப்படுகிற மூன்றில் பதியாகிய இறைவனைப் போலவே, உயிரும் அதைப் பிணைக்கின்ற பாசமாகிய தளையும் அநாதியான பொருள்கள்.

இறைவனைப் போலவே, இந்த உயிரும் அநாதியானது என்பது ஆகம சாஸ்திரம். பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகை மலங்கள். இந்த மும்மலப் பாசத்திலே கட்டுண்டு நிற்கிறது உயிர்ப் பசு.

ஆணவம் என்பது 'நான்' என்கிற உணர்ச்சி. எல்லாம் ஒன்று என்ற உண்மையை உணர வொட்டாமல் தன்னைப் பிரித்துத் தான் வேறு என்று எண்ணும்படி ஆன்மாவைத் தூண்டும் அஞ்ஞானம்.

கன்மம் என்பது நல்வினை தீவினை என்கிற வேறுபாட்டை உண்டாக்கி உயிரை ஆட்டுகிற தத்துவம்.

மாயை என்பது பதார்த்தங்களைத் துய்க்கும்படி ஓர் இச்சையை உண்டு பண்ணக் கூடிய அழுக்கு. தெய்வ இச்சையிலிருந்து மாற்றிப் பொருள் – இச்சையிலே மயங்கச் செய்யும் தத்துவம்.

பாசம் என்பது இந்த மூவகை மலங்களே.

பதியினைச் சென்றுஅணு
கா, பசு பாசம்

[அணுகுதல் — சென்று சேர்தல், அணுகா — சென்று சேரமாட்டா.]

உயிரும் அதைப் பற்றியுள்ள பாசமும் இறைவனைச் சேரமாட்டா! இதையே முனிவர் "பசு பாசம் பதியினைச் சென்று அணுகா" என்கிறார்.

உயிரானது பிறப்பு இறப்புக்களில் அகப்பட்டு இறைவனை அணுக முடியாமல் பாசத்தில் அழுந்திக் கிடக்கிறது. இந்தப் பாசம் நீங்கி, அறியாமை அகன்று, உயிரானது உய்ய வேண்டும் என்றால், அதற்கு இறைவனே வந்து ஆட்கொள்ள வேண்டும்.

பதி அணு கில்பசு
பாசம் நிலாவே

[நிலாவே—நில்லாவே. பதி அணுகில்—அப்படிக் கருணை கொண்டு இறைவனே வந்தருளினால். பசு பாசம் நிலாவே — உயிருக்கும் பாசத்துக்கும் உள்ள பூட்டு நில்லாமல் கழன்று விடும். பாசப் பூட்டு கழன்று பசுவானது பதியைச் சார்ந்து விடும்.]

அறிவு மயமாக நிற்கின்ற பதியாகிய இறைவன் கருணையால் நிரம்பியவன். ஆன்மாக்கள் மும்மலத்துள் அழுந்திக் கிடக்கின்றனவே என்று திருவருள் கொண்டு, ஞானம் வழங்கிக் கடைத்தேற்றுகிறான்! இத்தகைய அருள் இல்லாது போனால், ஆன்மாவுக்குப் பாசத்திலிருந்து விடுதலை கிடையாது. ஞானம் சித்திக்காது.

ஆன்மாக்களின் பக்குவநிலைக்கு ஏற்ப இறைவனே இரங்கி வந்து ஞானம் அருளினாலன்றி, உயிருக்கு இருளிலிருந்து உய்யும் வழி இல்லை.

பதியானவன் கருணையோடு பசுவை அணுகும்போது, அதைப் பிணித்துள்ள தளை தானாகவே நீங்கி விடும்; பசுவும் மயங்கி நிற்காமல், மயக்கம் நீங்கி இறைவனை உணரும்.

பதிபசு பாசம்
எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல், பசு
பாசம் அனாதி;
பதியினைச் சென்றணு
கா, பசு பாசம்;
பதியணு கில், பசு
பாசம் நிலாவே!



அஞ்சறைப்



குறிப்பிட்ட ஒரு மந்திரிப் பதவியை வகிப்பவர் அந்தத் துறையில் நிபுணராக விளங்க வேண்டுமென்பதில்லை. அதாவது சுகாதார மந்திரி ஒரு டாக்டராகவோ பாதுகாப்புமந்திரி ஒரு ராணுவ வீரராகவோ இருக்க வேண்டுமென்பதில்லை. திறமை மிக்க அரசியல்வாதி பலவிதமான மந்திரி சபைப் பதவிகளையும் வகித்திருப்பார். உதாரணமாக வின்ஸ்டன் சர்ச்சில் வெவ்வேறு விதமான பத்து மந்திரி சபைப் பதவிகளை ஏற்றிருக்கிறார். வாணிபம், காலனி ஆட்சி, உள்நாட்டுத் துறை, ராணுவம், நிதி போன்ற பலவிதமான அலுவல்களை அவ்வப்போது கவனித்து வந்துள்ளார்! இந்த அரிய சாதனையைப் புரிந்தவர்தான் காந்திஜியை 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று பழித்துரைத்தார். அவரே நமது நாட்டுக்குச் சுதந்திரம் கிட்டிய பின்னர் இங்கிலாந்துடன் நாம் நல்லெண்ண உறவையே நாடுவதைக் கண்டு மனம் நெகிழ்ந்து கண்ணீர் ததும்ப நின்றாராம்!

✲


சென்னைக் கவர்னராகவும் இந்தியாவின் சிறந்த நண்பராகவும் திகழ்ந்த ஸர் தாமஸ் மன்ரோவின் இரண்டாவது நூற்றாண்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. சென்னை தீவுத்திடல் மைதானத்தருகில் உள்ள அவரது கம்பீரமான சிலை உருவிலே ஒரே ஒரு குறை: குதிரை மீது அமர்ந்திருப்பவர் பாதங்களை ஊன்றிக் கொள்ளக்கூடிய உபகரணத்தைக் காணவில்லை! இதனை யாரோ சுட்டிக் காட்டிய போது அந்தச் சிலையை வடித்த சிற்பி மன முடைந்து போய்த் தற்கொலை செய்து கொண்டான் என்றும் கூறுவார்கள்.



அந்தச் சிலையைப் பற்றிய ஒரு சின்னஞ் சிறு கதை உண்டு.

ஆங்கிலேயர் ஒருவர் தமது மகனுடன் சென்னைக்கு வந்திருந்தார். எல்லா இடங்

✲



பெர்னாட்ஷாவும் ஷேக்ஸ்பியரும் உலகப் பிரசித்தி பெற்றவர்கள். பெர்னாட்ஷாவுக்கு ஷேக்ஸ்பியர் என்றாலே ஆகாது என்பதும் உலகறிந்த விஷயம்தான்.

ஒரு சமயம் 'ஷா'வின் நூல் ஒன்று பிரசுரமாகி வெளிவர இருந்தது. புத்தகத்தை அச்சிட்டவர்கள் ஷாவை அணுகி முன்னுரையாகச் சில வரிகள் எழுதித் தருமாறு கேட்டுக் கொண்டார்கள். 'சரி' என்று ஒப்புக்கொண்ட ஷா தமது புத்தகத்துக்கு முன்னுரையாக எழுதினார்:

''இதனை மிகவும் உயர்தரமான நாவல் என்பதற்கில்லைதான்; என்றாலும் ஷேக்ஸ்பியர் இரண்டாந்தரமானதால் இது முதல்தரமானதே!''

வெட்டி



செய்ய வேண்டியதை யெல்லாம் தைரியமாகவும் உற்சாகமாகவும் ஒருவனுகவே செய்து முடித்து விட்டு ராமசந்திரன் முன்னிலேயிலும் தன்னுடைய அரசன் முன்னிலேயிலும் நிற்கும்போது ஹனுமான் மேற்கொண்ட அடக்கத்தைக் கவனிக்க வேண்டும். தான் செய்து விட்ட பெரும் காரியத்தைப் பற்றிக் கர்வப் படாமல் யுவராஜனை அங்கதன், அறிவிலும் வயதிலும் பெரியோனுகிய ஜாம்பவான், இன்னும் மற்ற வீரர்களுக்கும் மரியாதை காட்டி அவர்கள் ஏவலிடுவதற்கு முன் தான் பேசாமலிருந்தது வாயு புத்திரனுடைய பண்பாட்டின் மகிமை.....இன்னொரு விஷயமும் இவ்விடத்தில் கவனித்தல் தகும். ஜானகியை இலங்கையில் நேரில் கண்டு பணிந்தது முதற் கொண்டு பிராட்டியைத் தியானிப்பதிலும் பக்தி செலுத்துவதிலும் ஹனுமான் மிகவும் ஈடுபட்டு விட்டான். ராமபக்தியைக் காட்டிலும் கூட பிராட்டியினிடம் அவனுக்கு உண்டாகிய பக்தி அதிகமாகிவிட்டது. பரம்பொருளைத் தாயாகப் பாவித்து மகிழ்ந்த எல்லாப் பெரிய பக்தர்களுடைய அனுபவமும் இதுவே. —சக்கரவர்த்தித் திருமகனில் ராஜாஜி





களுக்கும் சிறுவனை அழைத்துச் சென்று காண்பித்தார். ஒவ்வொன்றையும் கட்டுக்கடங்காத ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு வந்தான் சிறுவன். கடைசியில் ஐலண்டு மைதானத்தருகே வந்து சேர்ந்தார்கள். "இதோ பார்த்தாயா இதுதான் மன்ரோவின் சிலை! எவ்வளவு அழகாயிருக்கிறது, பார்! நன்ருகப் பார்த்து மனத்தில் பதிய வைத்துக் கொள்" என்ருர் தகப்பனர்.

பல நாட்களுக்குப் பிறகு அவர்கள் கப்பலேறித் தாய்நாடு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது மகன் திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவனுய்க் கேட்டான் :

"ஏனப்பா? மன்ரோவுக்கு மேல் எவனே ஒருவன் உட்கார்ந்திருந்தானே, அது யார்?"

❁

படத்திலுள்ள ஆலன் ஷெப்பார்ட் வான வெளிப் பயணம் செய்து திரும்பிய பின்னர் மனிதன் சந்திர மண்டலத்துக்கு வெகு சீக்கிரத்தில் போய் விடலாம் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது. எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடிப்பதைக் காட்டிலும் பலமடங்கு கடினம் சந்திர மண்டலத்தில் உயிர் வாழ்வது! அங்கே காற்று மண்டலம் இல்லே. அதனுல் சுவாசிக்கப் பிராணவாயுவை முதுகில் சுமந்து செல்ல வேண்டும்! விஞடிக்கொரு முறை நம்மைத் தாக்கும் விண் கற்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பகல் நேரத்தில் தாளமுடியாத வெய்யிலேயும் (120°c) இரவில் பொறுக்க முடியாத குளிரையும் (−10°c) அனுபவிக்க வேண்டும். காற்றுமண்டலம் அங்கே இல்லேயாதலால் சத்தமே கேட்காது. நிசப்தமான அந்த உலகுக்கு ஈர்ப்புத் தன்மை குறைவானதால் 'ஹைஜம்ப்' குதிப்பதும் 'ஸிக்ஸர்' அடிப்பதும் மிக மிகச் சுலபமாகும்!




ரெக்ஸ் அருந்தி... குளுமையுடன் இருங்கள்

சிரிக்காதே!



"சார்! இந்தக் கூந்தல் தைலத்தைத் தடவிக் கொண்டால் திரும்பிப் பழைய நிறத்தை உங்கள் முடி அடைந்து விடும்!"

"ஐயோ, வேண்டாம்! என் முடியின் பழைய நிறம் வெள்ளை. ரொம்பச் சிரமப் பட்டுக் கொஞ்சம் கறுப்பு நிறத்துக்குக் கொண்டு வந்திருக்கேன்!"


*

டைரக்டர் நடிகையிடம்: இது கணவ னிடம் வெறுப்பைக் காட்டும் சந்தர்ப்பம். உணர்ச்சியோடு நீங்கள் நடிக்க வேண்டும். வாழ்க்கையில் உங்கள் கணவனிடம் நீங்கள் எவ்வளவு வெறுப்பைக் காட்டுகிறீர்களோ, அதையே இந்தக் காட்சியிலும் காட்டி நடிக்க வேண்டும்!

*

"ஐயா, இருக்காராம்மா?"

"சட்னிக்குத் தேங்காய் இல்லே என்று சொன்னேன். வாங்கி வரப் போயிருக்கிறார்."



"கடையிலிருந்தா?"

"இல்லே, கல்யாண வீட்டிலிருந்து!"

★

"வீட்டு வாடகை பாக்கியை அடுத்த மாதம் நிச்சயம் கொடுக்கிறேன்!"

"மூன்று மாதங்களாக இதையேதான் சொல்லி வருகிறீர்கள்!"

"நான் நிலையான கொள்கையுள்ளவ னாச்சே. பின்னே எப்படி மாற்றிச் சொல்லுவேன்?"

★

"ஓய்! ஏனய்யா இரைந்து கத்துகிறீர்! மெள்ளப் பேசுங்களேன்! எனக்குக் காது செவிடு இல்லே!"

"மெள்ளப் பேசினால் எனக்குக் காது கேட் காது, சார். என்ன பேசறேன் என்று எனக் குக் காதில் விழ வேண்டாமா?"

ஓட்டலில் சாப்பிட வந்தவர்: என்ன சார்! இங்கு சாப்பிடும் இடத்தில் ஏகப்பட்ட ஈயாக மொய்க்கிறதே! எப்பொழுதுமே இப்படித்தான் இங்கு ஈ மொய்த்துக் கொண் டிருக்குமோ?

ஓட்டல் முதலாளி: இல்லே சார்! சாப் பிடும் வேளையில் மட்டும்தான் இங்கு மொய்க் கும், மிச்ச நேரத்திலெல்லாம் குப்பை மேட் டுக்குப் போய் விடும்!

*

கருப்பன்: என்ன இப்படி முகம் வாட்ட மாக இருக்கே!

வெள்ளையன்: உம்...ம்! நாய் ஜன்மம் எடுத்து என்னத்தைக் கண்டோம், குறவனைக்



கண்டால் 'வள் வள்' என்று குரைப்பதைத் தவிர வேறு உருப்படியா என்னத்தைக் கண்டோம்?

*

ஒரு பெரிய கம்பெனி செய்தித் தாளில் ஒரு விளம்பரம் கொடுத்திருந்தது:

"ரொம்ப வருடங்களாக நடந்து வந்த எங்கள் கம்பெனியை நாங்கள் இரண்டு நாட் களில் மூடி விடுகிறோம். எங்களுக்குச் சேர வேண்டிய பணத்தைக் கடன்காரர்கள் கொடுக்காமல் போனதால் இந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இப்படிக்கு
டைரக்டர்கள்

குறிப்பு: இன்னும் இரண்டு நாளில் கடன் காரர்கள் பெயரும் விலாசமும் இந்தப் பத் திரிகையில் விளம்பரப்படுத்துகிறோம்."

இவ்வாறு விளம்பரத்தைக் கண்டதும், மறு நாளே கம்பெனிக்குச் சேர வேண்டிய கடன் பாக்கி வந்து குவிய ஆரம்பித்து விட்டது.

— சாமா

*

"என் மனைவி இந்த வருஷம் முழுவதும் ஜவுளிக் கடைக்குப் போய்க் கண்டபடி துணி எடுப்பதில்லே என்று வாக்குறுதி யளித்திருக்கிறான்!"

"அப்படியா, தேவ லேயே?"



"என்ன தேவலே? எல்லாத் துணிகளை யும் இன்றே மொத்தமாக அவள் வாங்கிக் கொள்ளப் போகிறாளாம்!"

— ஏ. எஸ். சுந்தரராஜன்

அன்பே ஆரமுதே

அத்தியாயம் பதினொன்று

ஹாலுக்குள் வந்ததும் மருந்துப் பையையும், மூக்குக் கண்ணாடியையும் சோபாவில் வைத்து உட்கார்ந்து கொண்டார் அனந்தசாமி. சுற்று முற்றும் பார்த்தார். யாருமில்லை. நாகம்மாள் எதிரே ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். அனந்தசாமி அவள் முகத்தை இரு விநாடிகள் பார்த்தார்.

"கவலைப் படாமல் இருக்க முடியாது யாராலும். கவலைப்படாமல் காரியம் நடக்காது. ஆனால் அந்த விசிறி மையம் மாதிரி கவலைப்படணும். ஓரம் மாதிரி கவலைப்படக் கூடாது" என்றார்.

நாகம்மாள் சுழலும் மின்சார விசிறியைப் பார்த்தாள். அவர் என்ன சொல்கிறார் என்று புரிந்துகொள்ள முயன்று கொண்டிருந்த அந்த முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது.

இரண்டு மூன்று விநாடி ஓடிற்று.

"ஓரம் வேகமாகப் பறக்கிறது. அது ஒரு அடி சுற்றினால் மையம் ஓரங்குலம் கூடச் சுற்றியிராது" என்றார் அவர்.

"ஆமாம்!"

"கவலைப்படாமல் இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஓட்டம் ஆட்டம் எல்லாம் வேண்டியதுதான். ஆனால் அடிமனசை அதெல்லாம் பாதிக்கக்கூடாது என்று சொல்கிறேன். எத்தனை உளைச்சல் பிடுங்கல் பட்டாலும் அடிமனசுக்கு ஒரு நிதானம், அழுத்தம் எல்லாம் வேண்டும். எது வந்தாலும் வரட்டும் என்று கல்லுப்பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருக்க வேண்டும்" என்று நிறுத்தினார் அவர்.

நாகம்மாள் விசிறியை விட்டுக் கண்ணை எடுக்கவில்லை.

அனந்தசாமி மேலும் சொன்னார்: "அதுவும் இந்தக் காலத்துக்கு நிதானம் ரொம்ப அவசியம். காலில் சக்கரம் கட்டிப் 'பற பற' என்று பறக்கிறார்கள் எல்லோரும். அதுவும் போதாதென்று பெட்ரோல் வேறு போட்டு முடுக்கி விடுகிறார்கள். மனசுக்குக் கூடவா பெட்ரோலைப் போட்டு அதிர வைக்கணும்?"

"வாஸ்தவம்தான்" என்று திரும்பினாள் நாகம்மாள்.

"பின்னே ஏன் கவலைப்படுகிறீர்கள்?"

"நான் கவலைப்படவில்லை. ஏதோ இந்தக் காசிப் பயல் பெயர் வந்ததும் படபடவென்று வந்தது. அவ்வளவுதான்; ஆனால் நிஜமாக எனக்குக் கவலை இல்லை. நேற்று உங்கள் கதையைக் கேட்டேனே. அதை நினைத்து நினைத்துப் பார்த்தேன். நான் ஏன் கவலைப்பட வேண்டும் என்று சமாதானம் பண்ணிக் கொண்டேன். இந்த உலகத்தில் நடக்காததெல்லாம் நடக்கிறபோது நான் கவலைப் படுவானேன்? உங்கள் கலியாணம் நடக்காது என்று நீங்கள் அந்த நிமிஷம் வரையில் நினைத்திருப்பீர்களோ? இல்லை, அந்தப் பெண்தான் நினைத்திருக்குமோ?"

அனந்தசாமிக்கு முப்பது வருஷங்களுக்கு முன்னால் நினைவு ஓடியது. அவர் தலையை அசைத்தார்.

"திடீரென்று ஓடினீர்கள். அடுத்த ரயிலைப் பிடித்துக்கொண்டு கண்காணாமல் போனீர்கள். எங்கே போகிறோம், என்ன செய்யப் போகிறோம் என்று திட்டவட்டமாக நினைத்துக் கொண்டு போனீர்களோ?"

அனந்தசாமி யோசித்துப் பார்த்தார்.

"நீங்கள் சொல்கிறது ரொம்பச் சரி. நான் பாட்டுக்குத் துரும்புமாதிரி மாறிப் போனேன். ரிஷிகேசத்தில் போய் இறங்கினேன். அங்கேகூட அடுத்து என்ன செய்யப் போகிறோம் என்று யோசிக்கவில்லை. கங்கைக் கரையோடு நடந்தேன். என்ன செய்வதென்று புரியாமல் ஒரு மாசம் சுற்றினேன். அப்புறம்தான் ஒரு சன்யாசியைப் பிடித்துக் கொண்டேன்."

"அந்தச் சமயத்திலெல்லாம் அந்தப் பெண்ணைப்பற்றி நினைக்கவேயில்லையா?"

"ஓரிரண்டு தடவைகள் அவளைப் பற்றி நினைவு வந்தது உண்டு."

"அவளும் சன்யாசியாயிருப்பாளோ?"

"யார் கண்டார்கள்......?"

"யார் கண்டார்கள் என்று பெண் கட்டைகளுக்கு இருக்க முடியுமா, இந்தத் தேசத்தில்?"

"வேறு யாருக்காவது கலியாணம் பண்ணிக் கொடுத்திருப்பார்கள்" என்றார் அனந்தசாமி.

தி. ஜானகிராமன்

"அப்படிச் சொல்லுங்கள். அதுதான் நம்ம தேசத்தில் நடக்கக்கூடிய காரியம்" என்று சொல்லிக்கொண்டே நாகம்மாள் எழுந்து உள்ளே போகும் நிலையண்டை நின்று எட்டிப் பார்த்தாள். "சத்திய பாமா, பால்காரன் வந்துவிட்டானோ?" என்று கேட்டாள்.

"பால் கறந்து கொண்டிருக்கிறான்" என்று பதில் வந்தது.

"வேலையாக இருக்கிறாயா?"

"இல்லையே!"

"அப்படியானால் இப்படித்தான் வந்து உட்காரேன்."

ருக்மிணி எழுந்து ஹாலுக்குள் வந்து ஓர் ஓரமாக இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். அனந்தசாமி சின்னதாக இரண்டு மருந்துப் பொட்டணங்களை மடித்து விரலால் தேய்த்துக் கொண்டிருந்தார்.

"இவள் என்னோடு வாசித்தவள்" என்று அறிமுகம் செய்தாள் நாகம்மாள் உண்மை போல.

"அப்படியா?"

"இப்ப டில்லியில் இருக்கிறாள். ஒரு காலேஜிலே ப்ரொபசரா யிருக்கிறாள். எதுக்கு ப்ரொபசர் நீ?"

"சரித்திரத்துக்கு."

"ஆமாம், சரித்திரத்துக்குத்தான். அப்பவே சொன்னாயே. மறந்துவிட்டேன். அப்படியென்றால் எல்லார் சரித்திரமும் உனக்குத் தெரிந்திருக்கும்.... நீங்கள் என்னையும் சரித்திரப் புரொபசராக ஆக்கி விடுங்கள்" என்றாள் நாகம்மாள் அனந்தசாமியின் பக்கம் திரும்பி.

"உங்களையா? நானா?"

"ஆமாம். உங்கள் சரித்திரத்தைத் தெரிந்து கொண்டால் எல்லா மனுஷர்களையும் பற்றித் தெரிந்து கொண்டாற் போல......அப்புறம் சொல்லுங்கள். ரிஷிகேசம் போனீர்கள். கங்கைக் கரையோடு நடந்தீர்கள். ஒரு மாசம் கழித்துச் சன்யாசி ஒருத்தனைப் பார்த்தீர்கள். அப்புறம்.....?"

"அதைப்பற்றி இப்ப என்னம்மா?" என்று சிறிது சந்தேகத்துடன் ருக்மிணியைப் பார்த்தார் அனந்தசாமி.

"பரவாயில்லே, சொல்லுங்கள். அவளுக்குத் தேசங்களுடைய சரித்திரம்தான் தெரிந்திருக்கும். சன்யாசிகளின் சரித்திரமும் தெரியட்டுமே."

அவர் சிரித்தார். "சன்யாசிகளின் சரித்திரத்தில் என்ன இருக்கப் போகிறது. திடுக்கிடும்படியாக, சுவாரசியமாக?"

"நீங்கள் திடுக்கிடும்படியாகத்தானே ஆரம்பித்தீர்கள்? நீங்கள் சொல்லிக் கொள்ளாமல் மறைந்தது எத்தனை பேரைத் திடுக்கிடப் பண்ணியிருக்கும்!"

"முன்னாலேயே அப்படி ஆகிவிட்டதென்றால் அப்புறம் என்ன இருக்கப் போகிறது? அந்த சன்யாசியோடே நாலு வருஷங்கள் சுற்றினேன். கைலாசம், மானசரோவரம், கேதாரநாதம், பத்ரிநாதம், அமரநாதம் இப்படி அவர் போகிற போக்கில் நானும் போகிறது. வைத்தியம் எல்லாம் அவரிடம் சொல்லிக் கொண்டதுதான். வைத்தியம் மட்டுமில்லே. ஒரு வருஷம் ஆறுனும் இந்தண்டை அந்தண்டை அசையாமல் ஒரே இடத்தில் கண்ணை மூடிக் கொண்டு உட்காரக் கற்றுக் கொடுத்ததும் அவர் தான். ஒரு தடவை நவராத்திரியின் பொழுது அப்படி உட்காரச் சொன்னார். உட்கார்ந்தேன். பத்தாம்நாள் கண்ணைத் திறந்து பார்த்தேன். எழுந்திருக்க மனசில்லே. மறுபடியும் கண்ணை மூடிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. எதிரே கங்கை ஓடிக் கொண்டிருந்தது. நான் உட்கார்ந்திருந்த இடத்துக்கு நேராகக் கங்கையின் மேல்படியில் ஒரு கல்லின்கீழ் கடுதாசித் துண்டு ஒன்று சிக்கிக் கொண்டு பறக்க முடியாமல் தவித்தது. என்னமோ தோன்றியது. எழுந்து போய் எடுத்துப் பார்த்தேன். 'நான் போய் வருகிறேன். நீயும் போகலாம்' என்று எழுதி யிருந்தது. முதலில் 'பகீர்' என்றது. யாரோ உயிரை எடுத்துக் கொண்டுவிட்டாற்போல் ஒரு பயம். ரிஷிகேசத்தில் இருந்த அத்தனை பேரையும் ஓடி ஓடிப் பரபரவென்று விசாரித்தேன். 'நேற்று ராத்திரி நீங்கள் உட்கார்ந்திருந்த படித்துறைக்குப் பக்கத்தில் தான் அவரும் உட்கார்ந்திருந்தார்' என்றார்கள். அதே கவலையோடு ஹரித்துவாரத்துக்கு வந்தேன். ஆள் கிடைக்கவில்லே. போய் வருகிறேன் என்று எழுதியிருந்தாரே, எங்கே போனார்? வேறு ஊருக்குப் போனாரா? இல்லே, தண்ணீரிலேயே இறங்கிப் போய்விட்டாரா? ஒன்றும் புரியவில்லே. மறுபடியும் ரிஷிகேசத்துக்கே வந்தேன். தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது. ஏன் இப்படி ஓடினீர்கள் என்று கேட்டுக் கொண்டே யிருந்தேன்...."

"அப்படித்தானே அந்தப் பெண்கூட அழுதிருக்கும்!" என்று குறுக்கிட்டாள் நாகம்மாள்.

அனந்தசாமி சற்று மௌனமாயிருந்தார். பிறகு பத்து விநாடிகள் கழித்துச் சொன்னார். "உண்மைதான். எனக்கு அப்பொழுது ஞாபகம் வராமலில்லே. அப்பா அம்மாகூட அன்று நான் சொஜ்ஜியைத் தின்றுவிட்டு ஓடி வந்தது, ஏமாந்துபோய் நிற்கிற ஒரு பெண்ணின் உருவம்-எல்லாம் நினைவுக்கு வந்தன."

நல்லதையே நாடுங்கள்

ஸாவ்லான் உபயோகியுங்கள்

ஆன்டிஸெப்டிக் திரவம்





ஷாம்பூவாக உபயோகிக்கலாம்

தலையில் பொடுகைத் தடுக்கிறது
'ஹிபிடேன்', 'செடவ்லான்' இரு கிருமிநாசினிகள் கொண்டது.

வேறு எந்த ஆன்டிஸெப்டிக்கைக் காட்டிலும் அதிகமான கிருமிகளையும், எல்லா விதமான கிருமிகளையும் கொல்லுகிறது.

நோய் பரவாமல் தடுத்து சுத்தம் செய்கிறது.

வலிக்காது-வேதனையளிக்காது.

தேவதாருவின் நறுமணம்உள்ளது

மற்ற 'ஸாவ்லான்' தயாரிப்புகள்
ஸாவ்லான் ஆன்டிஸெப்டிக் கிரீம்
ஸாவ்லான் ஆன்டிஸெப்டிக் லாஸெஞ்ச்
ஸாவ்லான் பேபி பவுடர்

ICI

இம்பீரியல் கெமிகல்
இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்.
கல்கத்தா பம்பாய்
சென்னை புதுடெல்லி

ICI 35TM

"அந்தப் பெண்ணின் ஞாபகம் கூடவா....?"

"ஆமாம்!"

"அந்தப் பெண்ணின் முகம் எல்லாம் ஞாபகம் வந்ததோ உங்களுக்கு?"

"முகம் ஞாபகம் இல்லைதான். நான் சரியாக எங்கே பார்த்தேன்? பெண் பார்க்கப் போனபோது கூட நன்றாகப் பார்க்கவில்லை. ஏதோ பார்த்தேன். பளிச்சென்று இருந்தது. விளக்கை யாரோ காண்பித்துவிட்டு உள்ளே எடுத்துப் போகிறாற்போல."

"உடனே நீங்கள் புறப்பட்டு ஊருக்கு வரப்படாதோ?"

"காஷாயத்தோடா?" என்று கேட்டுச் சிரித்தார் அவர்.

"நீங்கள் காஷாயம் வாங்கிக் கொண்டு விட்டீர்களா?"

"வாங்கிக்கொண்டு மூன்று வருஷங்களாகிவிட்டன."

"சரி சரி..."

"அப்புறம் இலங்கையிலிருந்து ஒரு புத்த பிட்சு வந்திருந்தார். அவரோடு புத்த கயைக்குப் போனேன். இலங்கைக்கு வாயேன் என்றார். கிளம்பிவிட்டேன். அநுராதபுரத்திலும், பொலன்னருவையிலும் அவரோடு சுற்றிக்கொண்டிருந்தேன். அங்கேயும் வைத்தியம்தான். பட்டணத்து சாயபு ஒருவர், பிள்ளைக்கு உடம்பு சரியாயில்லை, வந்து பார்த்தால் தேவலை என்று அழைத்துக்கொண்டேயிருந்தார். இலங்கையில் அவருக்குக்கடைகண்ணிஎல்லாம் உண்டு. புறப்பட்டு வந்தேன். அம்மாவைப்பார்த்தேன். இங்கேயே தங்கி விட்டேன்."

"அம்மாவும் போய் விட்டாள் இப்ப" என்றாள் நாகம்மாள்.


"ஆமாம்."

"அம்மாதான் இல்லையே என்று மறுபடியும் கிளம்பி விடுவீர்களோ?"

"யார் கண்டார்கள்?"



நாகம்மாள் பேசாமல் இருந்தாள் சிறிது நேரம். பிறகு சொன்னாள்: "திடுக்கிடும் சம்பவங்கள் இல்லை தான். இருந்தாலும் எனக்கு இதையெல்லாம் கேட்க வேடிக்கையாகத்தானிருக்கிறது., வருத்தமாகக் கூட இருக்கிறது."



"வருத்தம் என்ன? இது எனக்கு சந்தோஷமாகத்தானிருக்கிறது."

"அந்தப் பெண் சந்தோஷப்படுமா? அது எத்தனை நாட்கள் வருத்தப்பட்டிருக்கும் ....?"

"வாஸ்தவம்."

"கலியாணமாகியிருந்தால் சரி. பிள்ளைகுட்டிகளைப் பெற்றுக்கொண்டு எல்லாவற்றையும் மறந்திருக்கும். இல்லையென்றால்...?"

"அப்படியா நீங்கள் நினைக்கிறீர்கள்?"

"எப்படி?"

"கல்யாணம் ஆகியிராதென்று?"

"ஒரு சமயம் இருந்தால்? தாலி கட்டின பிறகுதான் பதிவிரதையாளென்ன? தாலி கட்டாமல் ஓடிப் போனவரை நினைத்துக் கொண்டிருப்பவளும் பதிவிரதைதானே."

"பதிவிரதை என்ற பேர் பொருத்தமாயிருக்குமோ என்னவோ, ஆனால் நம்ம தேசத்திலே இந்த ஆச்சரியங்கள் எல்லாம் நடக்கிறது உண்டுதான்."

"அது என்ன, பொருத்தமோ என்னமோ என்று சந்தேகப்படுகிறீர்கள்? அவளைப் பற்றியவரை, தாலி கட்டினானோ இல்லையோ, அவன்தான் தன் புருஷன் என்று நினைத்துக் கொண்டிருந்தால்...?"

"உங்கள் சரித்திர ப்ரொபசரையே கேட்டுப் பாருங்களேன். அவர் பேசவே இல்லையே?" என்று அனந்தசாமி அந்தப் பக்கம் திரும்பினார்.

"நீங்கள்தான் கேளுங்களேன். சொல்லேண்டி சத்தியபாமா?"

"நாகம்மாள் சொல்வது சரிதானா? ஏம்மா, உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார் அனந்தசாமி.

ருக்கு தலையைத் தொங்கவிட்டுக் குனிந்து கொண்டிருந்தாள். விரல் நடுங்கியது. நாற்காலிச் சட்டத்தை நகத்தால் அழுத்திக் கீறி நடுக்கத்தைச் சமாளித்துக் கொண்டிருந்தாள்.

"நாகம்மாள் எத்தனை கோபமாகப் பேசுகிறார், பார்த்தீர்களா?" என்று கேட்டுத் திரும்பிப் பார்த்தார் அனந்தசாமி. நாகம்மாளை அங்கே காணவில்லை. பாலை வாங்கி உள்ளே வைக்கப் போய் விட்டாளோ என்னவோ?

ருக்கு பதில் சொல்லவில்லை.

"பெண்ணுக்குப் பரிந்துதானே பெண்களும் பேசுவார்கள்? அவருக்குக் கோபம் வருவது சகஜம்தானே."

"வருத்தம் என்றல்லவா நாகம்மாள்..." என்று வாயைத் திறந்தாள் ருக்கு. அதைக்கூட அவளுக்கு முழுதும் சொல்ல முடியவில்லை. கடைசி வார்த்தை தளும்பிக் கொண்டு, விழாத கண்ணீர் மாதிரி நின்றுவிட்டது. முகம் சிவந்து விட்டது. உடலுக்குள் சூடு தட்டிவிட்டது. முதுகுத் தண்டு சிலிர்த்தது.

அனந்தசாமி வியப்புடன் இந்த மாறுதலைப் பார்த்தார்.

"வருத்தம்தான் கோபமாக வருகிறது" என்றார் அவர்.

"தன் சிநேகிதிக்கு இந்த மாதிரி ஒரு அதிர்ச்சி வந்துவிட்டால் கோபம்தானே வரும்?" என்று ருக்மிணி நடுங்கிக் கொண்டு குனிந்தவாறே சொன்னாள்.

" நாகம்மாளுக்குத் தெரியுமா அந்தப் பெண்ணை...என்னிடம் சொல்லவே இல்லையே....இந்த வேடிக்கையெல்லாம் நாகம்மாளுக்கு எப்படிப் பிடிக்கும்? தெரியும் என்று ஜாடையாகக் கூடக் காட்டிக் கொள்ளவில்லையே."

" தெரியும் என்றதால்தான் இப்படி ஆர்வமாகப் பேசினுள். இல்லாவிட்டால் இந்த விஷயத்தை இவ்வளவு தூரம் அக்கறையாகப் பேசுவானேன் அவள்?"

" அந்தப் பெண் என்ன ஆயிற்றும் அப்புறம்?"

"அது அப்புறம் கலியாணமே பண்ணிக் கொள்ளவில்லை. பண்ண வேண்டும் என்று தாயார் தகப்பனுர் தலைகீழாக நின்றார்களாம். அது கேட்கவில்லை. பெரியப்பாவோடு டில்லிக்குப் போய்விட்டது. காலேஜில் படித்து எம். ஏ. பாஸ் பண்ணிற்று. அந்தக் காலேஜிலேயே வாத்தியாராயிட்டுது. இப்பொழுது சரித்திரப் ப்ரொபசராக உயர்ந்து விட்டது என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்" என்றள் ருக்மிணி.

அனந்தசாமி குழம்பிப் போய் அவளைப் பார்த்தார்.

" அவள் பெயர் ருக்மிணி. சத்யபாமா என்று மாற்றினேன். ருக்மிணியைக் கலியாணம் பண்ணிக் கொள்ளக் கிருஷ்ணன் ரதத்தை ஓட்டிக்கொண்டு வந்தார். யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் அவளை ஏற்றிக்கொண்டு போய் விட்டார். இந்த ருக்மிணியையோ அகமுடையானுக இருந்திருக்க வேண்டியவர் விட்டு விட்டு, தனியாக யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் போய் விட்டாரே. பெயரை மாற்றுமல் என்ன செய்ய?" என்று நிலையில் வந்து நின்று கொண்டே சிரித்தாள் நாகம்மாள்.

திரும்பிப் பார்த்தார் அனந்தசாமி. யாரோ தேவதை சிரிப்பது போலிருந்தது. கேதாரநாத்துக்கும் கைலாசத்துக்கும் அவரை இழுத்துச் சென்ற நிமாய்ஜி ஸ்வாமி சிரிப்பதுபோலிருந்தது. கங்கோத்ரியிலும் இமயத்தின் கிடுகிடு பள்ளத்தாக்கிலும் ஓடும் புண்ணிய நதிகள் சிரிப்பது போலிருந்தது. நிமாய்ஜி 'அன்னை அன்னை' என்று வர்ணிக்கிற ஏசப் பரம்பொருள் பெண் வடிவு கொண்டு சிரிப்பது போலிருந்தது.

நெட்டுக் குத்தலாகப் பார்த்துக் கொண்டேயிருந்தார் அவர். முகத்தில் மட்டும் மரியாதை. அந்தப் புன்னகை அப்படியே இருந்தது. வியப்புப் புன்னகையாக, விரிந்த கண்களின் கீழ் ஸ்தம்பித்து நின்றது.

நாகம்மாளின் சிரிப்பொலி நின்று விட்டது. அதன் கார்வை மட்டும் தேயவில்லை. இமயத்தின் மலைவெளியில் பட்டுப் பட்டு எதிர்த்து வந்து கொண்டிருந்தது. அருகிலும் தொலைவிலும் மோதி மோதி ஒலித்தது.

அந்தக் கார்வை மெதுவாகத் தேய்ந்து அடங்கின பிறகுதான் மாம்பலத்தில் ஒரு வீட்டு ஹாலில் உட்கார்ந்திருக்கிற உணர்வு வந்தது. இடையில் கடந்த அந்தக் கணங்களில் அவர் மனமும் ஆத்மாவும் எங்கெங்கோ சென்று விட்டன.

" என்ன இது!" என்றார் அவர்.

அந்த விழியின் ஆச்சரியம் இன்னும் சுருங்கவில்லை.

" நீங்களா அது?" என்று அதே வியப்புடன் ருக்மிணியைப் பார்த்தார்.

" அவளேதான்....நீங்கள்தான் அப்பொழுதே நன்றாகப் பார்க்கவில்லை என்றீர்களே" என்றாள் நாகம்மாள்.

அனந்தசாமி நன்றாகத்தான் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார். முகத்தைப் பார்த்தார்; கண்களைப் பார்த்தார். நறுக்கி வழித்தாற் போன்ற நாசியைப் பார்த்தார். உறுதியாக அமைந்த முகவாயைப் பார்த்தார். வெடவெடவென்று உயர்ந்திருந்த உடலைப் பார்த்தார். தலை முதல் கால்விரல் வரை விரவி நின்ற அமைதியைப் பார்த்தார். கட்டிக் கட்டி அடக்கப்பட்டுக் கிடந்த உள்ளத்தின் பொலிவு உடலில் வடிந்தமைந்ததைப் பார்த்தார்.

" மல்லி, மல்லிப்" என்று ஒரு குரல் வாசலை ஓங்கி அறைந்தது.

நாகம்மாள் எழுந்து ஓடினாள். "ருக்கு, கொஞ்சம் காப்பியைக் கலவேன்" என்று சொல்லிக் கொண்டே போனாள்.

ருக்குவின் முழு உயரமும் உள்ளே எழுந்து சென்றது.

அனந்தசாமி மருந்துப் பொட்டலங்களை எடுத்துப் பையில் போட்டு மூடினார். குடையை எடுத்துக் கொண்டார். செருப்பை மாட்டிக் கொண்டு அவர் வெளியே வந்தார்.

வாசலில் நாகம்மாள் பூக்காரன் சரம் நறுக்குவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"நான் வரேம்மா."

"என்னது! காப்பி கலக்கச் சொல்லியிருக்கேனே!"

' இப்ப வேண்டாம்."

" அதெல்லாம் சொல்லப்படாது. சாப்பிட்டுவிட்டுத்தான் போகணும்!"

" இரண்டு இடங்களில் சர்பத் சாப்பிட்டாகி விட்டது."

நம் நாட்டு பெண்மணிகள் தங்களது அழகான நீண்ட கூந்தலைத் தொன்றுதொட்ட பழக்கப்படி வீட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஷாம்புவினுல் சுத்தம் செய்கின்றனர். அது கூந்தலை மிகவும் நன்ருகவே சுத்தம் செய்யலாம். ஆனுல் அது மிகவும் சிரமமான காரியம்.

ஷாம்பு எதற்கு?

வீட்டில் தயாரிக்கும் ஷாம்புவைவிட நல்ல தேங்காய் எண்ணெயினுல் ஆலையில் தயார் செய்யப்பட்டு பாட்டிலில் கிடைக்கும் ஷாம்பு கூந்தலைச் சுத்தம் செய்ய வெகு சுலபமானது. டாடாவின் தயாரிப்பான இத்தகைய ஷாம்பு எளிதில் உபயோகிக்கக்கூடியது. நறுமணம் கொண்டது. அதன் மிருதுவான நுரை கூந்தலை நன்ருகச் சுத்தம் செய்து மயிர்க்கால்களிலிருக்கும் தூசி, அழுக்கு முதலியவைகளை அகற்றி கூந்தலை மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கச் செய்கிறது.

பளபளப்பான கூந்தலுக்கு...

டாடாவின் ஷாம்பு




TSY-16 TAM

"இதோ ஆகிவிட்டதே."

"நான் காரணமாகத்தான் சொல்கிறேன்...... வருகிறேன்" என்றார் அவர். ஹறஹறவென்று நடையைக் கட்டினார். திரும்பிப் பாராமல் நடந்தார். பெரிய சாலையில் ஏறித் தேனாம்பேட்டைச் சதுக்கத்தைக் கடந்தார். எல்டாம்ஸ் சாலைக்குள் பத்து அடி நடந்ததும், ஒரு டாக்ஸி அவரை உராய்வதுபோலக் கடந்தது. கையைத் தட்டி நிறுத்தி ஏறிக் கொண்டார்.

"ராயப்பேட்டைக்கு விடு."

டாக்ஸி விட்டு வாசலில் வந்து நின்றதும், உள்ளேயிருந்து கட்டணத்தைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, வந்து தம் அறையில் துண்டை உதறி விரித்தார்; படுத்தார். உத்தரத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தார். தூக்கத்தில் அப்படியே நழுவி விழுந்தார்.



'கல்கி' பத்திரிகையின் உதவியாசிரியர் 'கௌசிகன்' அவர்களின் சகோதரர் லெப்டினண்ட் சுந்தரேசன் அவர்களுக்கும், முன்னாள் உள்விவகார மந்திரி திரு பந்த் அவர்களின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்த காலஞ்சென்ற திரு கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களின் இரண்டாவது புதல்வி சௌ. சீதாலக்ஷ்மிக்கும் சென்ற மாதம் சென்னை தியாகராயநகரில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் திருமணத்துக்கு வந்திருந்து சிறப்பித்தனர்.

நிச்சிந்தையாக உறங்கினார் அவர். கனவில்லாத உறக்கம். முனகல் இல்லாத உறக்கம். புரளல் இல்லாத உறக்கம். நுழைந்தவுடன் அப்படியே மல்லாந்து படுத்தவர் அதே நிலையில், அசைவும் சலசலப்புமின்றி ஆழ்ந்த துயிலில் ஒடுங்கிக் கிடந்தார்.

காலமும் நேரமும் அற்ற அந்தத் துயில் வெளியில் திடீரென்று வர்ணம் தோன்றியது. தீயின் பொன்னிறம் வளையம் வளையமாக வந்தது. சிறு சிறு வட்டமாகக் கிளம்பிப் பெரும் பெரும் வட்டமாக விரிந்து வந்தது. உற்றுக் கவனித்த பொழுது அது வர்ணமாக இல்லை. ஒலியே பொன்னிறம் கொண்டு வடிவம் கொண்டு அலைந்து வருவது போலிருந்தது.

தூக்கத்திலிருந்து புலன்கள் சுழன்ற பொழுது கண்ணைத் திறவாமலே அந்த ஒலியைக் கேட்டார். விண் வெளியில் கார்வை கொடுத்த அந்த ஒலி பழக்கமாகக் கேட்கிற ஒலி போலிருந்தது. எங்கோ பறந்து மறைந்த புலன்கள் கொஞ்சம் கொஞ்சமாக வந்து தரை தட்டியது போலிருந்தது. அசைந்து கொடுத்தார். புலன்கள் உடலில் அந்தந்த உறுப்புகளில் வந்து அமைந்து விட்டன. ஒன்றுமில்லை. வழக்கமாகக் கேட்கிற கோவில் மணி. அடுத்த தெருவில் உள்ள கோவில் மணி.

கண்ணை நன்றாகத் திறந்தபொழுது அறை இருள் அடர்ந்திருந்தது.

"ஆயாக்கு ஒரணா சைசாம்பரம்" என்று வாசலில் கூவல் கேட்டது. அதைக் கேட்டதும்தான் அது பிரியும் காலை இருளில்லை; வந்து கவியும் மாலையிருள் என்று தெரிந்தது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார். கசகசவென்று உடல் வேர்த்துக் கசிந்தது. துடைத்துக் கொண்டே அறையை விட்டு வெளியே வந்து முற்றத்துக் குழாயில் முகத்தைக் கழுவிக் கொண்டார்.

"என்ன ஸ்வாமி, அதிசயமாயிருக்கு!" என்று முற்றத்தில் கால் தொங்கத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து ருத்திராட்ச மாலையை உருட்டிக் கொண்டிருந்த மங்களப் பாட்டி கேட்டாள்.

"தூங்கிப் போய்ட்டேன், பாட்டி!" என்றார் அனந்தசாமி.

"அதான் அதிசயமாயிருக்கேன்னேன். ராத்திரி ஏழரை எட்டு, ஒன்பது என்று வருகிற வழக்கமாச்சே உங்களுக்கு! சாயங்காலம் உங்க சமையல் உள் திறந்திருந்தது. என்னடாப்பா என்று வந்து பார்த்தேன். ஒரே தூக்கம். ரொம்ப அலைச்சலாக்கும்?"

"ஆமாம் — கடுமையான வெய்யில். அந்த வெய்யிலில் அலுப்புக்குக் கேட்பானேன். இன்றைக்கு வெய்யில் முழுதும் நம்ம தலையிலேதான்!" என்றார் அனந்தசாமி சிரித்துக் கொண்டே.

"ஒரு நாழி முன்னால் வந்தேன். சந்தியா காலமாயிடுத்தே. இன்னும் தூங்கறீரே, எழுப்பலாமா என்று பார்த்

தேன். நான்தான் 'தூக்கம் தூக்கம்' என்று தவங் கிடக்கிறேன். வரமாட்டேன் என்கிறது. எதுக்கு இந்தப் பாவம் என்று போய்விட்டேன்.''

''ரொம்ப அசதி'' என்று முகத்தைத் துடைத்துக் கொண்டார் அனந்தசாமி.

''தெரிகிறது. இல்லாவிட்டால் சமையல் உள்ளிலேயே நீங்கள் படுத்துத் தூங்கி யிருப்பீர்களா?''

கிழவி சொன்ன பிறகுதான் சமையல் உள்ளில் படுத்த புதுமைகூட அவர் மனத்தில் உரைத்தது. அவருடைய இன்னொரு அறை மாடியில் இருந்தது. மருந்து சீசாக்கள், புத்தகங்கள் எல்லாம் வைத்துள்ள அறை. அறைக்குப் பின்னால் மொட்டைமாடி. படியேறி, மாடி அறையின் மூலையிலிருந்த பானையிலிருந்து குளிர்ந்த தண்ணீர் இரண்டு மிடறு குடித்து விட்டு, மொட்டை மாடியில் சாய்வு நாற்காலியைப் பிரித்துச் சாய்ந்து கொண்டார் அவர். நட்சத்திரங்கள் முளைத்து விட்டன. நரை முற்றிலும் மறையாத கருமையில் அப்பொழுது தான் ஏற்றிய திரிகள்போல் மங்கலாக அந்த ஒளிக் கூட்டம் தெரிந்தது. இன்னும் சற்றுப் போனால் ஒளி ஓங்கிச் சுடரும். எதிரே தென்னந்தோப்புக்குள் காற்றுப் புகுந்து யாரோ வருவதை எதிர் பார்ப்பதுபோல் ரகசியச் சலசலப்பாக பேசிக் கொண்டிருந்தது. மணி ஒய்ந்து விட்டது. பழந் தின்னும் வௌவால் நாலைந்து தெற்கு நோக்கிப் பறந்தன. மொட்டை மாடிமீது கிளையை வளைத்து வளர்ந்திருந்த மலைவேம்புமரத்து இலைகளுக்குள் சில்வண்டு 'ஙீ...' என்று ஒத்து ஊதியது.

தண்ணீர் போட்டுக் கழுவிய அவர் உடலில் காற்று வந்து இதமாகத் தடவிக் கொடுத்தது.

நட்சத்திரங்களைப் பார்த்துச் சிரித்தார் அனந்தசாமி. ஆகாசம் இப்படிக் கண்ணைச் சிமிட்டுவது, தம்மைப் பார்த்து, தம் நிலையைப் பார்த்து நமட்டு விஷமமாகச் சிமிட்டுவது போல் தோன்றியது அவருக்கு. 'தானிருக்கிற அழகுக்கு தடவிக் கொண்டாலும் வேப்பெண்ணெயை' என்று மங்களப் பாட்டியைப் போல் சொல்லிக் கொண்டார் அவர். தம்மைப் பார்த்தே உரக்கச் சிரிக்க வேண்டும் போலிருந்தது. 'நீ எங்குதான் போ, முப்பது வருஷங்கள்தான் போ, மூவாயிரம் வருஷங்கள்தான் போ, நான் உன்னைத் துரத்தித் துரத்தி வருவேன்' என்று ஒன்று, உருவமில்லாத ஓர் எண்ணம் அவர் இதயத்தண்டை சொல்வது போலிருந்தது. (தொடரும்)


தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
எப்பொழுதும் பிரகாசத்துடன் நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & சன்ஸ்
122, கன்ஸராசால், பம்பாய்-2.


நரிவேட்டை
கதை: ஜெயந்தி
சித்திரம்: விஜு - 10
தன்னிடம் உயிரையே வைத்துள்ளதாக லின்யி கூறுவதெல்லாம் வெறும் நடிப்பு, உண்மையில் அவள் நம் தேசத்தைக் காட்டிக் கொடுக்கும் ஒரு துரோகக் கும்பலைச் சேர்ந்தவள், தன்னிடமிருந்து பல விஷயங்களை மறைக்கிறாள் என்றெல்லாம் குற்றம் சாட்டுகிறான் குமார். லின்யி இதனை மறுத்துக் கண்ணீர் வடிக்கிறாள்.. ......
உங்களை ஏமாற்றும் எண்ணமே எனக்கில்லை. கெஞ்சிக் கேட்கிறேன்; என்னை நம்ப மாட்டீர்களா?
கண்ணீரைக் கண்டு கலங்கி விடுபவனில்லை, நான். உன்னை அடியோடு வெறுக்கிறேன்.
...குமாரின் மனம் கரையவில்லை.
கல்நெஞ்சனிடமும் கனிவைத்தான் காட்டுகிறாள் லின்யி.
தயவு செய்து அப்படிச் சொல்லாதீர்கள். என் இதயத்தை உங்கள் காலடியில் சமர்ப்பித்திருக்கிறேன். அதனை உதைத்துத் தள்ளாதீர்கள்
என்னிடம் நீ அன்பு கொண்டிருப்பது நிஜமானால் உன் அப்பாவுடன் சகவாசம் வைத்துக் கொண்டிருந்த துரோகிகளை எனக்குச் சுட்டிக் காட்டு!
அப்பாவுக்கு நண்பர்கள் பலர் உண்டு. ஆனால் அவர்களில் யாரையுமே அத்தகைய நீசன் என்று கருதத் தயாராக இல்லை நான்.
ஒன்றுமே அறியாதவள் போல நீ பொய் சொல்கிறாய். உன் மனம் மாறியதாகத் தெரிந்த பின் வந்து சந்திக்கிறேன்.
குமார் அவளைக் கதற விட்டு விட்டு வெளியேறுகிறான்
இதே நேரத்தில் வஞ்சகமாக ஷியாமாவை மோட்டாரில் ஏற்றிக் கொண்டவர்கள் காலிம்பாங் நகர எல்லையை அடைகிறார்கள்.
நீங்கள் தலைவரிடம் போங்கள். நான் கடைத் தெருவருகே இறங்கிக் கொள்கிறேன்.
அப்படியே ஆகட்டும்.


நன்கு அறிமுகமானவர் கள்போலல்லவா ரவியும் இந்த இரட்டையரும் பேசிக் கொள்கிறார்கள்?
அவர்களுடைய சம்பாஷணை ஷியாமாவின் சந்தேகத்தை அதிகமாக்குகிறது.
பிரயாணமெல்லாம் சௌகரியமாகத் தானே இருந்தது?
வழியில் ஒரு விதமான தொந்தரவும் இல்லை என்று தலைவருக்குத் தெரியப் படுத்துங்கள்.
தலைவரா யார் அது?
அதைப் பற்றி உனக் கென்ன? வாயை மூடிக் கொண்டு வா.
இவர்களுடன் கிளம்பியதே தவறு போலிருக்கி றதே?
ரவியின் நடத்தை ஷியா மாவுக்குப் பிடிக்கவில்லை. அவர்களை விட்டுப் பிரிந்து போக சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருக்கிறாள்.
கடைத் தெருவில் மோட்டார் நிற்கிறது.
நீங்கள் இறங்கிக் கொள்ளுங்கள் மிஸ்டர் ரவி!
நானும் விடை பெற்றுக் கொள்கிறேன்.
அம்மூவரிடமிருந்து விடுபட்டால் போதுமென்று இறங்க யத்தனித்த ஷியாமாவை முரட்டுக் கரமொன்று உள்ளே தள்ளுகிறது.
எங்கே, தப்பிக்கவா பார்க்கிறாய்?
இந்தத் தருணத்தில் சென்னியிடம் வெறுப்பு மேலிட ஹோட்டல் டெலிமோவிலிருந்து வெளியேறிய குமார் அந்தப் பக்கமாக வருகிறான். சற்றுத் தூரத் தில் மனத்தாங்கலுடன் நடக்கும் அவனைத் தற்செயலாகக் காண்கிறாள் ஷியாமா
அதோ என் கணவர்! விடுங்கள் என்னை!



பயமும் மகிழ்ச்சியும் ஒருங்கே மனத்தில் நிறையப் பெற்ற ஷியாமா விரிட்டஸரி உதவி கோரச் சற்றுத் தாமதித்து விடுகிறாள். அதற்குள்...
மூச்சு விடும் சத்தம் கூட எழாது இவளிடமிருந்து! ஓட்டு வண்டியை, சீக்கிரம்!
விநாடிப் பொழுதும் தாமதியாமல் 'வான்' விரைகிறது. தனியே விடப்பட்ட ரவி தவிக்கிறான்.
MERCURY
யார்? குமாரா? ஐயோ! அவன் என்னை அடையாளம் கண்டு கொண்டால்
சட்டென்று எதிர்ப்புறமாகத் திரும்பி நடக்கிறான் ரவி. குமாரின் கண்களுக்கு ஷியாமா தென்படாமல் போனாலும் ரவியைக் காணத் தவறவில்லை அவன்.
டில்லியில் என்னைத் தாக்கிய கயவனல்லவா இவன்? தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள வேண்டாம்
வேண்டுமென்றே அவன் மீது மோதுகிறான் குமார்.
மன்னிக்க வேண்டும் வெரி சாரி!
ஷி! ஷி.... பரவாயில்லை போனால் போகட்டும்
நல்லவேளை அந்த மடையனுக்கு என்னை ஞாபகமே இல்லை. இனி நிர்ப்பயமாகப் போகலாம்.
SAMS
குமார் தன்னை நிழலெனத் தொடர்வதை ரவி அறியவில்லை.
ரவி செல்லுமிடத்தையும் அங்கு அவனுக்குக் கிடைக்கும் வரவேற்பையும் பார்த்ததும் குமாரின் மனக்கசப்பு வளர்கிறது.
வாருங்கள், வாருங்கள்! பார்த்து ரொம்ப நாளாயிற்றே!
ஸின்பி! சௌக்யமா?
தொடரும்

௫. இவள்தான் விசாகை!

மணிபல்லவம்

திருநாங்கூர் அடிகளின் பூம்பொழிலில் அவரிடமிருந்து முதற் சுவடியை வணங்கி வாங்கிக் கொண்ட அந்தக் கணத்தில் இளங்குமரன் மனம், நாள் தவறாமல் ஊர் வம்புகளையும், அடிபிடி சண்டைகளையும் ஏற்றுக் கொண்டு முரட்டுப் பிள்ளையாகக் காவிரிப்பூம் பட்டினத்தில் சுற்றிக் கொண்டிருந்த தன் பழைய நாட்களைச் சற்றே நினைவு கூர்ந்தது. அந்தப் பழைய நாட்களின் நிகழ்ச்சிகளில் ஒன்றைத் தனியே பிரித்து இப்போது தான் சுவடியைத் தாங்கிச் சுமந்து நிற்கும் நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டான் அவன்.

அந்த நாளில் காவிரிப்பூம்பட்டினத்தின் அம்பலங்களிலும், பொது மன்றங்களிலும், இளைஞர்கள் தங்கள் பலத்தைப் பரீட்சை செய்வதற்காகத் தூக்கிப் பார்க்



கும் 'இளவட்டக் கல்' என்னும் கனமான உருண்டைக் கற்கள் இருந்தன. இவற்றைத் தூக்க முடிகிறதா, இல்லையா என்பதைப் பொறுத்து இளைஞர்களின் தோள் வலிமையைக் கணக்கிட முடிந்தது. பூம்புகாரில் புறநகராகிய மருவூர்ப்பாக்கத்தின் தெரு முனைகளிலும், நாளங்காடிச் சதுக்கத்திலும், மறக்குடி மக்கள் மிகுந்த புற வீதிகளிலும், இத்தகைய இளவட்டக் ற்கள் கிடக்கும். இவற்றைச் சுற்றி எப்போதும் இளைஞர்களின் கூட்டத்தைக் காணலாம். பொன் திணித்தாற் போன்ற அழகிய தோள்கள் புடைக்க, நெற்றியில் குறுவியர் முத்தரும்பக் கல் தூக்கும் காளையர்களின் எழிலைக் காண்பதற்காக அந்தந்த வீதிகளின் மேன்மாடங்களில் அங்கங்கே தாமரை பூத்துத் தயங்கினாற்போல் பெண்களின் மலர்ந்த முகங்கள் தோன்றும். தன் விடலைப் பருவத்தில் நகரத்தி

ளுள்ளவற்றிலேயே மிகவும் பெரியவை என்று கருதப்பட்ட இளவட்டக் கற்களை யெல்லாம் அலட்சியமாகத் தூக்கி அருகிலிருந்தவர் முகங்களில் வியப்பை மலரச் செய்திருக்கிறான் இளங்குமரன். தீரர்களின் செயல்களைக் கண்டு வியப்படைகிற பருவத்து இளைஞர்களிடையே அவன் வியப்புக்களைச் செய்து காட்டும் தீரனாக இருந்த காலம் அது!

வலிமை வாய்ந்த அதே கைகளில் 'இப்போது இந்தச் சுவடி ஏன் அதிகமாகக் கனப்பதுபோல் ஒரு பாரத்தை உணர்த்துகிறது? மெல்லிய இந்தச் சுவடியைத் தாங்கிச் சுமக்கும்போது என் கைகள் ஏன் இப்படி நடுங்குகின்றன? திடீரென்று நான் இளைத்துப் போய் விட்டேனா? என்னிடமிருந்து இந்த ஒரே ஒரு நாள் போதுக்குள் ஏதோ ஒரு வலிமை குறைந்திருக்கிறதே! அது எங்கே குறைந்தது? யார் முன்னிலையில் குறைந்தது? விதை யிடுவதற்கு உழுது வைத்த நிலம்போல் என் மனம் எதை எதிர்பார்த்து இப்படி இறுக்கம் நெகிழ்ந்து குழைந்து போயிருக்கிறது?' - என்ற நினைவுகளுடன் கையில் சுவடியேந்தியபடி தயங்கி நின்றான் இளங்குமரன் சற்றே நிதானமாக எண்ணிப் பார்த்தபோது தானும், தன் உணர்வுகளும் இளைத்த இடம் அவனுக்கு மீண்டும் நினைவு வந்தது.

'மறுபடியும் எப்போதாவது என்னிடம் கேள்வி கேட்க வந்தால் மனம் நிறைய ஞானத்தோடு வலது கையில் சமய வாதப் புரிவதற்கான கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண்டு ஞானவீரனாக வந்து சேர்! மற்போர் வீரனைப்போல் உடம்பை மட்டும் வலிதாகக் காண்பித்துக் கொண்டு வந்து நிற்காதே!' என்று உலக அறவியின் வாயிலில் அந்தப் பௌத்த சமயத் துறவி சிரித்துக் கொண்டே கூறினாரே: அவர் அப்படிக் கூறியதைக் கேட்டுத் தான் தலைகுனிந்து நின்ற அந்தக் கணமே தன் வலிமையும் தானும் இளைத்துப் போய் விட்டது போன்று ஒரு பிரமையை இளங்குமரன் உணர்ந்திருந்தான். அவனுடைய தயக்கத்தை அடிகள் கவனித்தார்.

"எதை நினைத்துத் தயங்குகிறாய், இளங்குமரா? உன் கைகள் ஏன் இப்படி நடுங்குகின்றன? இந்தச் சுவடி அவ்வளவு பெரிய சுமையல்லவே?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் நாங்கூர் அடிகள்.

"அறிவின் உலகமாகிய இந்தச் சுவடிகளை யெல்லாம் பார்க்கும்போது இவற்றின் அருகே நான் மிகவும் இளைத்துப் போய்த் தளர்ந்து விட்டாற்போல் தோன்றுகிறது. ஐயா!"

"உடம்பிற்கு ஆடபாற்பட்டதாய், உடம்பைக் காட்டிலும் வலியதாய் உள்ள உணர்வுகளுக்கு அருகில் நிற்கிறபோது உடம்பு சிறியதாய்த் தோன்றுவது இயல்புதான். அப்படிப்பட்ட சமயங்களில் மனத்தைப் பெரிதாக்கி மலரச் செய்து கொண்டு பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். கல்விக்குக் கரை இல்லை கற்பவருக்கு நாளும் இல்லை. இருக்கிற நாட்களிலும் அவலக் கவலைகளுக்கும், நோய் நொடிகளுக்கும் கழிகிற நாட்கள் பல. சுருள் சுருளாகப் பிடரியில் படரும் கரிய முடியும், பட்டுக் கரையிட்ட ஆடைகளும், பொன்னுருக்கினாற் போன்ற மேனி நிறமும் உடம்புக்குத்தான் அழகு தரமுடியும். மனத்துக்கு அழகும். வலிமையும் தருவது கல்விதான். அதை இன்றுதான் நீ அடையத் தொடங்குகிறாய். தளர்ச்சியையும், சோர்வையும் விலக்கிவிட்டு மலர்ந்த மனத்தோடு என் முன்பாக இப்படி உட்கார்ந்து கொள்."

கைகளில் சுவடியை விரித்து வைத்துக் கொண்டு அடிகளுக்கு முன்னால் அடக்க ஒடுக்கமாக அமர்ந்தான் இளங்குமரன். கிரந்தசாலையைச் சுற்றியிருந்த பூம்பொழிலில் மலர்ந்திருந்த பூக்களின் மணமும், தூபப் புகையின் வாசனையும், காலைப்போதின் தூய்மையும், கற்பதற்காக நெகிழ்ந்திருந்த மனமும், எதிரே சிரித்துக் கொண்டே அமர்ந்திருந்த ஆசிரியரின் தோற்றமும் இளங்குமரனுக்குப் புனிதமான எண்ணங்கள் பிறக்கும் சூழ்நிலையைத் தந்தன.

தமக்கே உரிய கோமளமான குரலில் பாடத்தைத் தொடங்கினார் அடிகள்:—
"ஒவ்வொரு மொழிக்கும் ஆதி வடிவம் ஒலி வடிவம்தான். கண்ணுக்குப் புலனாகாத பரம்பொருளைக் காட்டுவதற்காகக் கண்ணுக்குப் புலனாகிற தெய்வ விக்கிரகங்களைப் படைத்துக் கொண்டு வழிபடுவதுபோல் தோற்றமில்லாத ஒலிக்குத் தோற்றமளிக்க ஏற்பட்ட வரிவடிவங்களே எழுத்துக்கள். ஓசை வேறு. ஒலி வேறு. பண்படாமலும் வரையறை பெறாமலும் வழங்குவனவெல்லாம் ஓசை. பண்பட்டும் வரையறை பெற்றும் வழங்குவன எல்லாம் ஒலி. ஒலியிலிருந்து எழுத்துக்கள் பிறந்தன. எழுத்துக்களிலிருந்து மொழிக்கு உருவம் பிறந்தது. எழுத்துருவத்திலிருந்து சொற்கள் பிறந்தன சொற்கள் பொருள்களை அடைந்தன பல பொருள்களை அடைந்த ஒரு சொல்லும், ஒரே பொருளை அடைந்த பல சொற்களுமாக மொழி நிலத்திற் பதங்கள் விளைந்தன. ஒற்றைத் தனி மலர்போல் ஓரெழுத்தில் விளைந்த சொற்





களும், தொடுத்த மலர்கள்போல் பல எழுத்துக்களிணைந்து விளைந்த சொற்களுமாக மொழி வளர்ந்தது. சொல், செவிக்குப் புலனாகும்போது ஒலி வடிவில் இலங்குகிறது; கண்ணுக்குப் புலனாகும்போது எழுத்து வடிவில் இலங்குகிறது. பூ என்ற தோற்றமும், மணம் என்ற உணர்வும், தனித் தனி நிலைகளாயினும் இரண்டும் ஒன்றிலிருந்து எழுகிற உணர்வுகள் அல்லவா? அதுபோல் சொல்லும், பொருளும், வேறு வேறு உணர்வுகளாயினும் மலர் மணம்போல் சொற்பொருளுணர்ச்சி ஓரிடத்திலிருந்து எழுவதே......"

"சொற் பொருளுணர்ச்சி என்பது என்ன ஐயா?" என்று இளங்குமரன் ஆர்வத்தோடு குறுக்கிட்டுக் கேட்டான்.

"இன்ன சொல்லால் இன்ன பொருள்தான் உணரப்படும் எனப் பழகிய வழக்குக்குச் சொற்பொருளுணர்வு என்று பெயர். 'பாம்பு' என்ற சொல்லைக் கூறினால் உடனே பாம்பு என்னும் பொருளும், பாம்பு என்ற பொருளைப் பார்த்தால் உடனே பாம்பு என்ற சொல்லும் இடையீடு இன்றி ஒருங்கே நினைவு வருகிறதல்லவா? உலகத்து மொழிகளில் எல்லாம் உணர்த்தப்படும் பொருள்களிடையே வேறுபாடு இல்லை. உணர்த்தும் சொற்களில்தான் வேறுபாடு உண்டு. இனிமை என்கிற உணர்வு புல்லாங்குழல், யாழ் முதலிய எல்லா இசை வகைக்கும் பொதுவாவது போல் 'பொருளுணர்த்துதல்' என்பது எல்லா மொழிச் சொற்களுக்கும் பொதுவான குறிக்கோள். ஒன்றாகிய பரம்பொருளை ஒவ்வொரு சமயமும் வேறு வேறு மார்க்கங்களில் வந்து முடிவு காண முயல்வது போல் ஒரே பொருளை வேறு வேறு சொற்களால் உணர்த்துவது மொழிகளின் மதம். மொழியுணர்வை ஒட்டிச் சமயவுணர்வும் இறையுணர்வும் இணைந்து வளர்வது நமது தமிழ் நாட்டில் வழக்கமாயிருக்கிறது இளங்குமரா!"

"ஐயா! 'தமிழ்' என்ற சொல்லால் நம்முடைய மொழியையும், நாட்டையும் இணைத்துப் பேசி வருகிறோமே; இந்தச் சொல்லுக்கு என்ன பொருள்?"

ஆகா! நீ இப்படியல்லவோ தொடர்ந்து தூண்டிக் கேட்க வேண்டும்? நீ கேட்கக் கேட்க எனக்கு உற்சாகம் வளருகிறது. அப்பனே தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்று பொருள்! இந்தத் தெய்வத் திரு மொழியில் ஒலி செவிக்கு இனியது. எழுத்து கண்ணுக்கு இனியது சொற்கள் வழங்குவதற்கு இனியன. பன்னூறு ஆண்டுகளாகப் பண்பட்டு வளர்ந்த மொழியைப் பேசும் பாக்கியம் செய்தவர்களாயிருக்கிறோம் என்பதே நமக்கெல்லாம் பெருமை. தலைமுறைகள் செய்த தவத்தால் வளர்ந்து வளர்ந்து சொற்களெல்லாம் மந்திரமாய் ஆற்றல் பெற்ற மொழி இது" என்று பெருமிதத்தோடு பதில் கூறினார் அடிகள்.

இதைக் கேட்ட அந்த விநாடியில், தான் ஒரு தமிழ் மகன் என்பதனால் இளங்குமரனுக்கு மனத்தில் ஏற்பட்ட பெருமை ஒப்பற்றதாயிருந்தது.

எழுத்திலக்கணத்தைப் பற்றிய சிறந்த கருத்துக்கள் பலவற்றை நுணுக்கமாக இளங்குமரனுக்குக் கூறி விளக்கினார் அடிகள். அவற்றையெல்லாம் கேட்கக் கேட்க, புதிய உலகம் ஒன்றைத் திறந்து காண்பித்தாற் போலிருந்தது இளங்குமரனுக்கு.

பாடம் முடிந்ததும் அடிகள் வேடிக்கையாகச் சிரித்துக் கொண்டே இளங்குமரனிடம் இப்படிக் கூறினார்:

'கடவுள் மனிதர்களின் தலையெழுத்தை நிர்ணயித்து அவர்களை உலகத்துக்கு அனுப்பினார்! அவர்கள் உலகத்தில் எத்தனையோ எழுத்துக்களையும், மொழிகளையும் நிர்ணயித்துக் கொண்டு வாழப் பழகி விட்டார்கள்! உலகத்தின் தலையெழுத்தைக் கணக்கிடுகிற அளவுக்கு வளர்ந்து விட்டார்கள் தங்கள் தலையெழுத்தைப் புறங்காணும் காவியங்களையும், இலக்கிய இலக்கணங்களையும் எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். எவ்வளவு விந்தையான உலகம் இது? தெய்வம் விதியை வகுத்து எழுதிப் படைத்தது மனிதர்கள் எழுத்தைப் படைத்து விதி வகுத்திருக்கிறார்கள். சொல்லையும் பொருளையும் போல் சக்தியும் சிவமுமாய் இணைந்திருக்கும் சொற்பொருட்காரணனை பெருமானைச் சொல்லும் பொருளுமாக இணைத்துப் பாவித்துச் சொற்பொருளால் வணங்குகிறேன்' என்று பரம்பொருளை வணங்குகிற அளவுக்குப் பெருமை படைத்திருக்கிறார்கள். மண்ணுலகத்துக்கு மொழி படைத்துக் கொடுத்த மனிதர்கள் தாங்கள் வகுத்த விதிக்கு இலக்கணம் என்று பெயரும் சூட்டியிருக்கிறார்கள் விதியின் எழுத்துக்கு வடிவும் தெரியவில்லை; பொருளும் தெரியவில்லை. மனிதர்கள் படைத்த எழுத்துக்கு வடிவும் பொருளும், வகையும் எல்லாம் இருக்கிறது அல்லவா?"

—இளங்குமரன் ஆவல் மீதூரக் கேட்டுக் கொண்டிருந்தான் அப்போது அவர்கள் இருவரும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த கிரந்த சாலையின்

ASP/LICIAS 15 TAM

நீங்கள் ஆயுள் இன்சூரன்சு எடுக்க முன்வரும்போது... விரைந்து பணிபுரிய எல். ஐ. சிக்கு உதவுவீர்!

உங்கள் உயிரை இன்சூர் செய்ய முடிவெடுக்கும்போது பாதுகாப்புப் பாதையில் அடியெடுத்து வைக்கிறீர்கள் எனலாம். அது குடும்பப் பாதுகாப்பிற்கும் வருங்காலத் தேவைகளுக்கும் வகை செய்யும் வழி.
பிறகு உங்கள் முன்மொழிவின் (ப்ரொப்போசலின்) மீது தாமதம் ஏற்படுவானேன்?

முன்மொழிவுத்தாளோடு (ப்ரொப்போசலோடு) பிரீமியத் தவணைப் பணம் முழுவதினையும் செலுத்துங்கள்

இது உறுதியளிக்கும்...
உங்கள் முன்மொழிவு (ப்ரொப்போசல்) பற்றி சீக்கிரம் முடிவு செய்ய:
உங்கள் குடும்பத்திற்குப் பாதுகாப்பு உடனே துவங்க.

அதோடு
முழுப் பிரீமியத் தொகையோடு வருகின்ற முன்மொழிவுகள் (ப்ரொப்போசல்கள்) அனைத்தும் உதவுகின்றன. எதற்கு? உங்கள் முன்மொழிவு (ப்ரொப்போசல்) ஏற்கப்பட்டதும் உடனடியாகப் பாலிசி வழங்கப்படுவதற்கு!

லைப் இன்சூரன்சுக் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

வாயிற் பக்கமிருந்து. "தாத்தா! நான் உள்ளே வரலாமா?" என்று பெண் குரல் ஒன்று வினவியது.

"யார்? விசாகையா? வா, அம்மா! இரண்டு மூன்று நாட்களாக உன்னை இந்தப் பக்கமே காணவில்லையே; எங்கே போயிருந்தாய்?" என்று அடிகள் அந்தக் குரலுக்குரியவளை வரவேற்றுக் கூறிக் கொண்டே வாயிற் பக்கம் திரும்பினார்.

தலையில் திருத்திய சங்கு போல் எடுத்துக் கட்டிய சடை முடியும், எளிய தோற்றமும் அட்சய பாத்திரம் ஏந்திய கைகளுமாக மேக மண்டலத்திலிருந்து தூய்மையே வடிவாய் இறங்கி வரும் மின்னல்போல் உள்ளே நுழைந்தாள் துறவுக் கோலம் பூண்ட புத்த சமயப் பெண் ஒருத்தி. அழல் கொண்டு செய்தாற் போன்ற நிறமும், துறவுக் கோலத்துக்குரிய ஆடையும், நடந்து வருகிற போதே தூய்மை சூழச் செய்கிற தனித் தன்மையுமாக அந்தப் பெண்ணைக் கண்டதுமே இளங்குமரனின் மனம் வணங்கியது. பேதைமை மாறாத இளம் வயது. நிலவைக் கறை துடைத்தாற் போன்ற தூய முகம். அதில் உணர்ச்சியலைகள் படியாது அமைதி திகழும் கண்கள். சிவந்த இதழ்களில் நிறைந்த சாந்தம். சாந்தத்திலிருந்து பிரிக்க முடியாத தொரு புன்னகை. தோற்றம் நிறையப் பாதாதிகேச பரியந்தும் வார்த்தைகளாற் சொல்ல முடியாத தொரு பேரமைதியோடு அந்தத் துறவி நின்றாள். அவளுடைய வெண்கமலப் பூங்கைகளில் அட்சய பாத்திரம் ஏந்திய கோலமும் நின்ற நிலையும், மின்னலிற் செய்து நிறுத்திய சிற்பமோ எனக் காண்பார் கண்களைத் தயங்கச் செய்தன. பெரிதாய், அழகாய், அளவாய்த் தொடுத்துத் தொங்கவிட்டிருந்த முல்லை மாலை சரிந்து நழுவுவது போல் தரையில் மெல்ல அமர்ந்தாள் விசாகை.

"இளங்குமரா! இந்தப் பெண்ணின் பெயர் விசாகை. உன்னைப் போலவே என்னிடம் கற்றவள். இவள் இந்தக் கோலம் பூண நேர்ந்தது ஒரு விந்தையான வரலாறு. 'தெய்வம் விதியின் எழுத்தை வகுத்தது. மனிதன் எழுத்துக்கு விதி வகுத்தான்' என்று சிறிது நேரத்துக்கு முன் உன்னிடம் கூறியது உனக்கு நினைவிருக்கிறதல்லவா? விதி வகுத்த வாழ்வை மீறி, தான் வகுத்த வாழ்வுக்கு விதி அமைத்துக் கொண்ட பெண் இவள். இத்தனை இளம் வயதில் இவள் மனத்துக்குக் கிடைத்திருக்கிற வைராக்கிய முதிர்ச்சி அற்புதமானது. பிறர் வியக்கத் தக்கது" என்று நாங்கூர் அடிகள் இளங்குமரனுக்கு அந்தப் பெண்ணைப் பற்றிக் கூற ஆரம்பித்தார்.

"'விந்தை! விந்தை!' என்று பார்க்கிறவர்களிடமெல்லாம் சொல்லி மகிழ்கிற அளவுக்கு என் வாழ்வில் அப்படி என்ன இருக்கிறது, தாத்தா? துர்ப்பாக்கியங்களும், ஏமாற்றங்களும் நிறைந்த பழங் கதையை மறுபடியும் மறுபடியும் நினைவூட்டுவதில் உங்களுக்கு என்னதான் இன்பமோ?" என்று சொல்லிச் சிரித்தாள் விசாகை. அந்தச் சிரிப்பில் பாவ நினைவுகளை அழிக்கும் தெய்விகத் தூய்மை தெரிந்தது. துன்பம், பயம், சோர்வு, சிறுமை எல்லாமே அந்தச் சிரிப்பில் எரிந்து போகுமென்று தோன்றின.

"ஆகா! நீ விரும்பவில்லையானால் உன்னைப் பற்றிச் சொல்வதை நிறுத்திக் கொள்கிறேன், விசாகை! உன்னுடைய கதை இந்தப் பிள்ளைக்கு அவசியம் தெரிய வேண்டுமென்பதற்காகத்தான் சொல்ல நினைத்தேன்..." என்று தயங்கினாற்போலக் கூறி நிறுத்தினார் அடிகள்.

'நன்றாகச் சொல்லுங்கள், தாத்தா! எனக்கு மறுப்பேயில்லை. ஆனால் கதைக்கு உரியவளாய்க் கதைக்கு ஆளாகிக் கதையாகிவிட்ட எனக்கு என்னவோ அதில் அப்படிப் பெருமைப்பட ஒன்றுமில்லை என்பது போல் தோன்றுகிறது."

'கதாபாத்திரங்களே தங்கள் கதையை நினைத்துப் பெருமைப்பட்டால் கதை சொல்கிறவன் கதி என்ன ஆவது? நீ பேசாமல் கேட்டுக்கொண்டிரு, விசாகை! இப் பிள்ளை உன் கதையைக் கேட்டதும் எவ்வளவு பெருமைப் படுகிறான் என்பதைப் பார்க்கலாமே?" எனச் சிரித்துக் கொண்டே கூறி, இளங்குமரன் முகத்தைப் பார்த்தார் அடிகள். அந்த முகத்தில் ஆவல் நிறைந்திருந்தது.

6. வேழம்பர் விரைந்தார்!

சுரமஞ்சரியின் வேண்டுகோளுக்கு இணங்கி அவசரமாக ஓவியன் மணிமார்பனைத் தேடிக் கொண்டு புறப்பட்டாள் தோழி வசந்தமாலை. சில நாட்களாக அவள் அறிந்த மட்டில் ஓவியன் மணிமார்பன் அந்த மாளிகையின் எல்லையில் இருப்பதாகவே தெரியவில்லை 'ஓவியன் சொல்லாமற் கொள்ளாமல் அங்கிருந்து

வெளியேறி ஓடிப் போயிருக்க வேண்டும். அல்லது நகைவேழம்பருடைய குடியிருப்புப் பகுதியிலிருந்து வெளியேற முடியாமல் சிறை வைக்கப் பட்டிருக்க வேண்டும்.'

நகைவேழம்பருடைய கட்டுக்காவலில் அவன் இருக்கிறானா, இல்லையா என்பதை அறிந்து கொள்வது அவ்வளவு எளிய காரியமில்லை என்பதையும் வசந்தமாலை உணர்ந்திருந்தாள். அந்த மாளிகையின் எல்லைக்குள் நகைவேழம்பர் இருக்கும்போது அவருடைய பகுதிக்குள் நுழைந்து ஒலியனைத் தேடுவதென்பது இயலாத காரியம். அவர் இல்லாத நேரங்களிலும் காவல் உண்டு. நகைவேழம்பரின் மனத்தைப் போலவே அவருடைய குடியிருப்பு மாளிகையில் பாழடைந்த பகுதிகளும், இருண்ட கூடங்களும் அதிகமாக இருந்தன.

தான் தலைவியிடமிருந்து இளங்குமரனுக்கு மடல் வாங்கிக் கொண்டு போன நாளுக்குப் பின் ஒலியன் மணிமார்பனைத் தானும் தன் தலைவியும் மீண்டும் சந்திக்கவே இல்லை என்பதை நினைத்தபோது வசந்தமாலைக்குப் பலவிதமான சந்தேகங்கள் உண்டாயின. 'அந்த மடலைக் கொண்டு போனபின் அவன் திரும்பி வராமலே, ஓடி யிருக்கலாமோ' என்று எண்ண இடமில்லை. ஏனென்றால் அந்த மடல் நகைவேழம்பர் கையில் சிக்கியிருக்கிறது. மடலோடு அதைக்கொண்டு சென்றவனும் அகப்பட்டிருக்கத்தானே வேண்டும். முடிவாக ஒலியன் மாளிகையிலிருந்து வெளியேறிச் சென்றிருக்க முடியாது என்ற உறுதியே வசந்தமாலையின் உள்ளத்தில் வளர்ந்தது. பெருமாளிகைத் தோட்டத்தின் ஒரு மூலையில் இருந்த நகைவேழம்பரின் பகுதியை அவள் அடைந்தபோது, அது இருளில் மூழ்கியிருந்தது. அதன் பெரிய கூடத்தில் 'சிறிய தீபம்' ஒன்று காற்றுடன் போராடிக் கொண்டிருந்தது. வாயிற்புறம் ஒரு காவலன் உட்கார்ந்தபடியே தூங்கிக் கொண்டிருந்தான். நகைவேழம்பர் எங்கோ வெளியே போயிருந்தார் போலிருக்கிறது. வசந்தமாலை ஓசைப்படாமல் அடிமேல் அடி வைத்து அந்த மாளிகைக்குள் நுழைந்தாள். கூடத்திலிருந்த தீபத்தைக் கையில் எடுத்துக் கொண்டு ஒவ்வொரு பகுதியாகத் தேடினாள். வெளிப்புறம் தாழிட்டிருந்த இருட்டறை ஒன்றைத் திறந்தபோது அவள் எதிர்பார்த்துத் தேடிய மணிமார்பன் அங்கே தளர்ந்து ஒடுங்கிப் பொலிவிழந்து அமர்ந்திருப்பதைக் கண்டாள். 'தன் பின்னால் புறப்பட்டு வருமாறு' அவனுக்குக் குறிப்புக் காட்டிவிட்டு முன் நடந்தாள் அவள். ஒலியன் பயந்து நடுங்கினான்.


''வந்த வழியே திரும்பிப் போய் விடுங்கள், அம்மா! அந்தக் கொலைகார மனிதர் இப்போது வந்து பார்த்தால் உயிரையே வாங்கி விடுவார். இந்த மாளிகையின் பாதாள அறைகளில் கூண்டிலடைக்கப்பட்ட கொடும்புலிகள் இருப்பது தவிர, மாளிகைக்குள்ளேயே கூண்டிலடைபடாத புலிகளாய் மனிதர்களே இருக்கிறார்கள். ஒன்றுமே புரிந்து கொள்ள முடியவில்லை. நான் இன்னும் சிறிதுகாலம் உயிரை மட்டுமாவது காப்பாற்றிக் கொள்கிறேன். நீங்கள் எனக்கு உதவுவதாக முயன்று அதையும் அந்தக் கொடுமைக்காரர் கைகளினால் அழியச் செய்து விடாதீர்கள்'' என்று பேசத் தொடங்கிய ஒலியனின் வாயைத் தன் வலது கையால் பொத்தி மேலே பேசவிடாமற் செய்தாள் வசந்தமாலை.

''உங்களுக்கு ஒரு கெடுதலும் வராது. பேசாமல் என் பின்னால் வாருங்கள்''



என்று அவன் காதருகில் கூறிவிட்டு, அவனுடைய மறுமொழியை எதிர்பாராமலே அவன் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு நடந்தாள் அவள். மென்மையான அவள் பிடியிலும் ஓவியனின் கை நடுங்கியது. நகைவேழம்பரது மாளிகையின் பின்புறமுள்ள கோட்டத்துக்குள் வந்து சேர்ந்ததும் ஓவியனைப் பிடித்துக் கொண்டிருந்த கைப்பிடியை விட்டாள் வசந்தமாலை.


"பார்த்தால் பயந்த மனிதரைப்போல் நடந்துகொள்கிற நீங்கள் செய்கிற காரியங்களெல்லாம் பயமில்லாத காரியங்களாகச் செய்து விடுகிறீர்களே, ஐயா? எங்கள் தலைவி கொடுத்தனுப்பிய தாழை மடலை அதற்குரியவரிடம் சேர்க்காமல் நகைவேழம்பரிடம் கொடுத்திருக்கிறீர்களே; அது எப்படி நேர்ந்தது? உங்களை நம்பிக்கையான மனிதர் என்று எண்ணி மடலைக் கொடுத்தனுப்பிய எங்களுக்கு நல்ல பாடம் கற்பித்து விட்டீர்களே?" என்று வசந்தமாலை கடுமையான குரலில் கேட்டபோது—



"அம்மணி! அது என் பிழையில்லை. உங்கள் மடலை அதற்குரியவர் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். மாளிகைக்குத் திரும்பி உங்கள் தலைவியைச் சந்தித்து மடலைக் கொடுக்கும் எண்ணத்தோடு வந்தவனை அந்தக் கொடுமைக்கார மனிதர் பயமுறுத்தி மடலையும் பறித்துக் கொண்டு இந்த இருட்டறையில் கொண்டுவந்து தள்ளி விட்டாரே! நான் என்ன செய்வது?" என்று தன் இயலாமைக்குக் காரணத்தை ஓவியன் விளக்கினான். அவன் குற்றமற்றவன் என்பது வசந்தமாலைக்குப் புரிந்தது. ஒரு பாவமும் அறியாத அந்த அப்பாவி ஓவியன் சிறைப்பட்டுக் கிடந்து ஒளியிழந்து போயிருப்பதைப் பார்த்து அவள் மனம் இளகினாள்.

டாக்டர்கள் மில்க் ஆப் மக்னீஷியாவையே சிபாரிசு செய்கிறார்கள் — மிதமாக பேதி ஆவது, அமிலத்தை எதிர்த்து பூர்ண நிவாரணமளிப்பதில் சக்தி வாய்ந்தது.

உலகத்திலுள்ள ஆயிரக்கணக்கான டாக்டர்களையும், சிசு வைத்திய நிபுணர்களையும், பிரசவ வைத்தியர்களையும், ரண சிகிச்சை வைத்தியர்களையும் "நீங்கள் உங்கள் நோயாளிகளுக்கு பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவை சிபார்சு செய்கிறீர்களா?" என்று கேட்டதற்கு அவர்களில் அனேகர் "ஆம்!" என்று பதிலளித்தார்கள்.



ஆம், குழந்தைகளுக்கும், பிரசவம் மற்றும் ரண சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கும் கூட பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா மிகவும் பலன் தரக்கூடியது என்று டாக்டர்கள் கருதுகிறார்கள்.

இதில் ஆச்சர்யமொன்றுமில்லை!

பேதி மருந்து ஆனாலும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா சீராகவும், செம்மையாகவும், இதமாகவும் வேலை செய்கிறது. ஜீரண உறுப்புகளை பலவீனப்படுத்துவதில்லை. அமிலங்களை அடக்கும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வயிற்றுக் கோளாறு, வாயு, நெஞ்செரிச்சல் மற்றும் மலச்சிக்கலுடன் வரும் இதர அமில உபாதைகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது.

எந்தவிதமான பேதி மருந்தும் இம்மாதிரி சுகமான பரிபூரண நிவாரணமளிக்காது!


உங்கள் டாக்டரைக் கேளுங்கள்! ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டியது

பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா

REGD. TRADE MARK



இரைப்பையில் மித மிஞ்சிய அமிலத்தால் ஏற்படக்கூடும் அஜீரணத்திலிருந்து உடனடியாக நிவாரணம் பெற எங்கும், என்றும் இனிமையான, இனிப்பான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வில்லைகளை உட்கொள்ளுங்கள். 4 வில்லைகள் கொண்ட கையடக்கமான பாக்கெட்களிலும், 75, 150 கொண்ட புட்டிகளிலும் கிடைக்கும்.



பூரண விநியோகஸ்தர்கள்:
டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்

"கவலைப்படாதீர்கள். மறுபடியும் நீங்கள் அந்த இருட்டறைக்குப் போகும்படி நேராது. அந்தக் கொடுமைக்காரருடைய முகத்திலும் விழிக்க வேண்டிய அவசியமிராது. இன்னும் சிறிது நேரத்தில் எங்கள் தலைவி ஒரு காரியமாக உங்களை இந்த மாளிகையிலிருந்து வெளியே அனுப்பப் போகிறாள். வாருங்கள். தலைவியைச் சந்திக்கப் போகலாம்" என்று ஓவியனை அழைத்துக் கொண்டு சுரமஞ்சரியின் மாடத்துக்குச் சென்றாள் வசந்தமாலை. நகைவேழம்பரோடு தந்தையாரும் எங்கோ வெளியே போயிருந்ததனால் அவர்கள் திரும்புவதற்குள் ஓவியனிடம் செய்தியைச் சொல்லி அவனை அனுப்பிவிட வேண்டுமென எண்ணினாள் சுரமஞ்சரி. ஓவியனைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் கூறி அவன் குற்றமற்றவன் என்பதையும் வசந்தமாலை தன் தலைவிக்கு விவரித்தாள்.

"நாம் சந்தேகப்பட்டதுபோல் உங்களது மடல் நகைவேழம்பர் கையிற் கிடைத்ததற்கு இவர் காரணமில்லை, அம்மா! அந்த ஒற்றைக்கண் வேங்கை பயமுறுத்தி இவரிடமிருந்து அதைப் பறித்துக் கொண்டதுமல்லாமல் இவரைத் தன் மாளிகையின் இருட்டறையில் இத்தனை நாட்களாகச் சிறை வைத்துக் கொடுமைப் படுத்தியிருக்கிறது! இந்தக் கொடுமையை யாரிடம் போய்ச் சொல்லுவது?"

வசந்தமாலையிடமிருந்து இதைக் கேட்டபின் சுரமஞ்சரியின் உள்ளத்தில் ஓவியன்மேல் ஏற்பட்டிருந்த வெறுப்பு மாறி அனுதாபமே பெருகிற்று. ஆறுதலாக அவனை நோக்கிக் கூறலானாள் சுரமஞ்சரி:—

"உங்களைப் போன்றவர்கள் கலைத் திறமையோடு மன உறுதியையும், துணிவையும் சேர்த்து வளர்த்துக் கொள்ள வேண்டும். கொடுமைகளுக்கு அஞ்சி அடங்கி விடக்கூடாது. கொடுமைகளை எதிர்த்துக் கொடுமைகளிலிருந்து மீளவும், மீட்கவும் தான் அறிவு, கலை எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன..."

"இருக்கலாம், அம்மா! ஆனால் கொலை செய்யும் கைகளுக்கு முன்னால் கலை செய்யும் கைகள் வலுவிழந்து நடுங்குகின்றனவே? நான் என்ன செய்வது? வெள்ளையுள்ளம் படைத்தவனாகவே வளர்ந்து விட்டேன். மாறமுடியவில்லை. அன்று இந்திர விழாவின்போது நாளங்காடிப் பூத சதுக்கத்தில் உங்களைச் சந்திக்க நேர்ந்தபோதே என்னுடைய போதாத காலத்தையும் சேர்த்துச் சந்தித்து விட்டேனோ என்னவோ?"

"இப்படி இன்னொரு முறை சொல்லாதீர்கள், ஓவியரே! உங்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று உங்களிடம் அவரது ஓவியத்தை வரையும் பணியை ஒப்படைத்தேனே தவிர இப்படியெல்லாம் நீங்கள் உங்களுடைய துணிவின்மையால் அடையும் துன்பங்களுக்கு என்னைக் காரணமாகச் சொல்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் வரைந்தளித்த ஓவியம் அழியாச் சித்திரமாக எனது ஓவியச் சாலையில் இருக்கும் என்று கனவு கண்டேன். இன்று பிற்பகல் நான் கனவு கண்டு கொண்டிருந்ததற்கு நேர்மாறான விதத்தில் பயன்படுவதற்காக அந்த ஓவியம் பறிபோய் விட்டது. அந்த ஓவியத்திலுள்ள மனிதரைத் துன்புறுத்திச் சிறைப்பிடித்துக் கொண்டு வருவதற்காக அதை அடையாளமாகக் கொடுத்தனுப்பியிருக்கிறார்கள். எப்பாடு பட்டாயினும் அதைத் தவிர்த்து அந்த மனிதருக்குக் கெடுதல் நேராமல் தடுப்பதற்கு உங்கள் உதவியை நாடவேண்டியவளாக இருக்கிறேன், ஓவியரே!"

சுரமஞ்சரி கூறிய இந்தச் செய்தியைக் கேட்டு மணிமார்பன் திடுக்கிட்டான். ஆனாலும் சிறைப்பட்டு அடங்குகிற அளவுக்கு இளங்குமரன் வலிமையற்றவனில்லை என்று உறுதியான நம்பிக்கை அவனைப் பதற்றமடைவதிலிருந்து தவிர்த்தது.

"ஓவியத்தை இங்கிருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்களே என்பதற்காக வேண்டுமானால் நீங்கள் கவலைப்படலாம், அம்மா! ஆனால் அதை வைத்து அவரைத் தேடிப் பிடித்துத் துன்புறுத்துவார்களோ என்று நினைத்துக் கவலைப்படுவதற்கு அவசியமில்லை! சிறைப்பட்டு அடங்குகிற வலிமைக் குறைவுள்ள மனிதரில்லை அவர். தேடிப் போகிறவர்கள் அவரிடம் சிறைப்படாமல் மீண்டு வந்தால் போதும்! வலிமையான சூழ்நிலையில் வலிமை வாய்ந்த மனிதர்களுக்கிடையே வலிமையோடுதான் இருக்கிறார் அவர்" என்று ஓவியன் சமாதானம் கூறிய பின்னும் சுரமஞ்சரி நிம்மதியடையவில்லை.

"ஐயா, ஓவியரே! என்னை உங்கள் சகோதரியாக எண்ணி மறுக்காமல் இந்த உதவியைச் செய்யுங்கள். அவர் எங்கிருந்தாலும் உடனே சந்தித்து இதைக் கூறி முன்னெச்சரிக்கை செய்தபின் நீங்கள் உங்கள் விருப்பம் போல் எங்கு வேண்டுமானாலும் போகலாம். கொடுமைக்காரர்கள் நிறைந்த இந்த மாளிகைக்கு மறுபடியும் திரும்பி வரவேண்டுமென்ற அவசியம்கூட இல்லை. வெளியேறிப் போகிற போக்கில் எனக்காக நீங்கள்



இந்த உதவியைச் செய்துதானாக வேண்டும்."

"நீங்கள் என்னவோ அந்த மனிதருக்காக உயிரையே விடுகிறீர்கள். உங்களைப் பொறுத்த வரையில் அந்த மனிதர் நெகிழ்ச்சியே இல்லாத கல்லாயிருக்கிறாரே அம்மா. அன்றைக்கு அந்த மடலை ஏற்றுக்கொள்ளாமல் என்னைத் திருப்பியனுப்பி அவமானப் படுத்தியது போதாதென்று இன்றைக்கு இன்னொரு முறையும் அவரிடம் போய் அவமானப்படச் சொல்கிறீர்களே?" என்று அதுவரை சொல்வதற்குத் தயங்கிக் கூசியதை பயம் விட்டுச் சொன்னான் ஓவியன்.

இதைக் கேட்டுச் சுரமஞ்சரி ஓவியனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். ஒரு கணம் சுட்டெரித்து விடுவது போலிருந்தது அந்தப் பார்வை. மறுகணம் நிதானமாய் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே கூறலானாள் அவள்:

"அவர் என்னை மதிக்காமல் இருக்கிறார் என்பதற்காக நானும் அவரை மதிக்காமலிருக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்ப்பது தவறு. ஓவியரே! அவர் என்னிடமிருந்து விலக விலக நான் அவருடைய அன்மையை நாடித் தவிக்கிறேன். இன்னதென்று உங்களுக்குச் சொல்லி விளக்க முடியாததொரு நுண்ணிய உணர்வு இது!... இதைப் பற்றிப் பேசும் என்னிடம் தூண்டிக் கேட்காமல் நான் உங்களிடம் கோரும் உதவியைச் செய்ய முடியுமா. இல்லையா என்பதற்கு மட்டும் மறுமொழி கூறுங்கள்."

அந்த அன்புப் பிடிவாதத்தைக் கேட்டு ஓவியன் திகைத்துப் போனான். என்ன பதில் கூறுவதென்று தோன்றாமல் தயங்கினான் அவன். அவளுடைய பார்வை அவனைக் கெஞ்சியது.

"நீங்கள் கூறியபடி அவரைச் சந்தித்து இந்தச் செய்தியைக் கூறி எச்சரிக்கை செய்கிறேன் அம்மா. ஆனால் நான் மறுபடியும் இந்த மாளிகைக்குத் திரும்பி வருவேனென்று நீங்கள் எதிர்பார்க்கலாகாது. இந்த ஒற்றைக் கண் மனிதர் என்னை இங்கிருந்தால் எளிதில் வாழவிடமாட்டார். இன்று நள்ளிரவுக்குள் உங்களுடைய செய்தியை உரியவரிடம் கூறிக் கவனமாக இருக்கச் சொல்லிவிட்டு நான் புறப்பட்டு விடுவேன்."

"எங்கே புறப்படப் போகிறீர்கள்?"

"எங்காவது நல்லவர்கள் இருக்கிற இடத்தைத் தேடிப் புறப்பட வேண்டியதுதான்!"

"அப்படியானால் நாங்களெல்லாம் கெட்டவர்களா ஓவியரே?"

"நீங்கள் நல்லவர்களாயிருந்தால் போதுமா? உங்களுக்கு இப்போதிருந்தே இந்த மாளிகையில் பல துன்பங்கள் வரத் தொடங்கிவிட்டனவே? உங்கள் மனத்துக்குப் பிடித்தவரை உங்கள் தந்தையாருக்குப் பிடிக்கவில்லை! உங்கள் தந்தையாரையும் அவருடன் சூழ்ந்திருப்பவர்களையும் உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை."

"அது எப்படி வேண்டுமானால் இருக்கட்டும் ஓவியரே! நான் இந்த மாளிகையில் வாழப் பிறந்தவள்: இங்கு விளைகின்ற இன்ப துன்பங்களை அநுபவித்துத்தான் ஆகவேண்டும்! மகிழ்ச்சியோடு போய்வாருங்கள். போகுமுன் இந்த உதவியைச் செய்து விட்டுச் செல்லுங்கள்."

ஓவியன் வணங்கி விட்டுப் புறப்பட்டான். "இதோ இதைப் பெற்றுக்கொண்டு செல்லுங்கள்." -ஓவியன் திரும்பினான். தன் கழுத்தில் அணிந்திருந்த மணிமாலையைக் கழற்றி நீட்டினாள் சுரமஞ்சரி. ஓவியன் அதைப் பெற்றுக் கொள்ளத் தயங்கி நின்றான்.

"இவ்வளவு பெரிய பரிசுக்குத் தகுதியானவனா நான்?"

"தகுதி என்பது கொடுக்கிறவர்களுக்கு இருந்தால் போதும். வாங்குகிறவர்களுக்கு மறுக்காமல் வாங்கிக் கொள்வதுதான் பெரிய தகுதி. இப்போது நீங்கள் எந்த மனிதரைத் தேடிக்கொண்டு போகிறீர்களோ, அந்த மனிதர் ஒரு முறை ஏற்றுக்கொள்ள மறுத்த பரிசு இது! நீங்களும் மறுத்தால் என்னால் பொறுத்துக்கொள்ளவே முடியாது."

"அவர் மறுத்த காரணம் என்னவோ?"

"அவர் காரணங்களைக் கடந்த மனிதர். எதையுமே பிறரிடமிருந்து ஏற்றுக் கொள்ள விரும்பாதவர்..."

"அன்பு உள்பட...?"

கேட்க வேண்டாததைக் கேட்டுவிட்டதுபோல் சுரமஞ்சரியின் முகம் சுருங்கிச் சிறுத்தது. போகிற போக்கில் ஓவியன் தன்னைக் குத்திக் காட்டிப் பேசிவிட்டுப் போகிறானே என்று அவள் மனம் புண்பட்டது. அதை மறைக்க முயன்றவாறே மணிமாலையை அவன் கைகளில் கொடுத்துவிட்டு வணங்கினாள் அவள். அவன் வாங்கிக் கொண்டான்.

வசந்தமாலை மாளிகையின் வாயில் வரை துணை வந்து ஓவியனை வழியனுப்பினாள். அந்த சமயம் அவர்கள் வெளியே போயிருப்பதாக நினைத்துக் கொண்டிருந்த நகைவேழம்பர் என்ற ஒற்றைக் கண் புலி வேறொரு பக்கமாக வெளியேறித் தன்னைப் பின்தொடர்ந்து விரைந்ததை ஓவியன் கவனிக்கவில்லை. வசந்தமாலை கவனித்தாள். ஆனால் அவளால் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் ஓவியனை அனுப்பிவிட்டு உள்ளே திரும்பிப்போனதுதான் கவனித்தாள்.

(தொடரும்)


விரைவில்
வருகிறது
சரவணபவா & யூனிடியின்
எல்லாம் உனக்காக
டைரக்ஷன்.....
A. சுப்பாராவ்
வசனம்
சங்கீதம்
K.S. கோபாலகிருஷ்ணன்.. K.V. மஹாதேவன்....
MOULIS



படித்துப் பாருங்கள்



ஆசாரிய சுவாமிகள் சென்னை உபந்நியாசங்கள்

(பாகம் 3)

சச்சிதானந்தமாகிய அமுதக் கடல் பொங்கித் ததும்பும் திருவுள்ளம்; பல்லவர்களின் திருநாமங்களைச் சொல்லிச் சொல்லிப் 'பாலூறிப் போன தேன் வாய்' இத்தகைய ஓர் உள்ளத்திலிருந்து இத்தகைய ஒரு வாய் வழியாக வரும் மொழி அமுதமாகத் தானே இருக்கும்? ஆம், காஞ்சி காமகோடி பீடாதிபர்களான ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் அருள் வாக்குகள் மக்களை அமர நிலைக்கு உயர்த்தும் அமுதத் துளிகளே தாம். ஸ்ரீ ஆசாரியர்கள் தமது சமீபத்திய சென்னை விஜயத்தின் போது அருளிய உபந்நியாசங்களைப் புத்தக உருவில் வெளியிட்டு வருகின்றனர் கலைமகள் காரியாலயத்தினர். கலைமகளுக்கு மிக மிக உகந்த திருப்பணி இது. இப்போது மூன்றாம் பாகம் வெளியாகியிருக்கிறது.

ஆத்ம தத்துவத்திலிருந்து அரசியல் வரை எத்தனை விஷயங்களை எத்தனை அழகாகத் தான் எடுத்துச் சொல்கிறார்கள் நம் பெரியவர்கள்? இந்நூல் முன்னுரையில் டாக்டர் டி.எம்.பி. மகாதேவன் அவர்கள் சொல்வது போல், "'ஒன்றை'க் கண்டு கொண்டவர்களுக்குப் 'பலவற்றை'ப் புரிந்து கொள்வது கடினமா? .... அவ்வொன்றைத் தெரிந்து கொள்ளாத நமக்கு அதைக் காட்டுவதற்காகப் பலவற்றைக் குறித்து உரையாடுகின்றார் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள்." கவிதையைச் சொன்னாலும், கல்வெட்டைச் சொன்னாலும் கடைசியில் கடவுளைக் காட்டிக் கொடுப்பதுதான் குருவர்களின் கருத்து. அவர்களாலேதான் அப்படி முடியும் என்பது போல் அதைச் சாதித்தும் விடுகிறார்கள்.

அழகு ஒழுகும் பழகு தமிழில், தாயார் குழந்தையிடம் பேசுவது போல் பேசுகிறது இத் தெய்வம். அதை அப்படியே எழுத்துருவில் அளித்திருப்பதுதான் இந்தப்

இந்தியாவிலுள்ள பத்திரிகைகளுக்கு ஏற்பட்டுள்ள

நெருக்கடி

நம் நாட்டில் பத்திரிகைக் காகிதத்துக்குக் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் பல பத்திரிகைகள் மூடப்பட வேண்டிய நிர்ப்பந்த நிலைமைக்கு வந்திருக்கின்றன. பொதுமக்களுக்கு இதை அறிவிக்க வேண்டியது எங்கள் கடமை.

செலாவணித் தட்டுக் காரணமாக ரூபாய்க் கணக்கிலேயே பத்திரிகைக் காகிதம் இறக்குமதி செய்யப் பத்திரிகைகளுக்கு லைசென்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் காகிதம் கிடைக்கும்படி செய்ய மத்திய சர்க்கார் வர்த்தக இலாகா போதிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவில்லை.

"நேபா" காகிதம் பெற பத்திரிகைகளுக்கு மத்திய சர்க்கார் அனுமதிச் சீட்டுகள் வழங்கி இருக்கிறது. ஆனால் நேபா தொழிற்சாலையோ 'சப்ளை' செய்யும் நிலையில் இல்லை. தவிரவும், நடப்பு லைசென்சு காலத்திற்கு லைசென்சுகள் வழங்குவதில் மத்திய சர்க்கார் காரியாலயத்தில் மிதமிஞ்சிய தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

இவற்றின் கூட்டு விளைவினால் பத்திரிகைகளுக்கு இப்போது கடுமையான காகித நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடியைச் சமாளிக்க நாட்டில் எங்கும் போதிய காகிதம் கிடையாது.

[தேச நலனை முன்னிட்டு இண்டியன் அண்டு ஈஸ்டர்ன் நியூஸ் பேப்பர் சொஸைடி விடுத்துள்ள அறிக்கை இப்பத்திரிகையில் வெளியிடப்படுகிறது.]

பத்தகத்தின் தனிச் சிறப்பு; அதுவேதான் ஓரளவுக்கு இதன் குறைபாடும். தயாரிப்புடன் போகாத ஒருவரின் உரைகளை அவற்றின் இயற்கைச் சுவை குன்றாமலே அளிக்க வேண்டுமெனினும் கூட, ஓரளவுக்குச் செப்பம் செய்யத்தான் வேண்டும். இதைப் பதிப்பாளர்கள் செய்துதான் இருக்கிறார்கள்; ஆனால் அது போதாது. செப்பம் தேவை என்பதை முதல் பக்கத்தில் முதல் பாராவே சொல்லிவிடுகிறது: கிருஷ்ணனும், அர்ஜுனனும் நர நாராயணர்களின் அம்சம் என்பது போக, இதைத் தலைகீழாக மாற்றிக் கொடுத்திருக்கிறது.

மற்றொரு விஷயம்: ஸ்ரீ பெரியவர்கள் உபந்நியாசத்தில், பேசும் தமிழின் மாதுரியத்தை வடமொழி மேற்கோள்கள் கம்பீரமான ரீங்காரத்துடன் மொய்த்து மொய்த்து வட்டமிடும். இதை எழுத்தில் அப்படியே தரும்போது மேற்கோள்களை ஒட்டிவரும் வாக்குகள் அவற்றின் பொருளோ என்று வடமொழி தெரியாதவர் தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடும். 137ம் பக்கத்தில் கண்டுள்ள புருஷசூக்த மேற்கோள் ஓர் உதாரணம்.

சில இடங்களில் பின்னால் வரும் கருத்தை அனுசரித்து முழு சுலோகங்களையும் கொடுத்திருக்கலாம். உதாரணமாக அங்கோலம் 'நிருபிஜ ஸந்ததிம்' (பக்-90) த்ரியம்பக மந்திரம் (பக்-121) 'ஸர்வமூலம்' (பக்-130) 'ஹேர பதுகா' (பக்-180) இவற்றை முழுவதும் கொடுத்திருக்கலாம். பக்கம் 155-ல் உள்ள கீதா சுலோகத்துக்குத் தமிழில் பொருளையும் தந்திருக்கலாம். பக்கம் 11-ல் கண்டுள்ள 'யஸ்ஸர்வஜ்ஞ' என்று தொடங்கும் கீதை மேற்கோளை 'ஸ்தித ப்ரக்ஞஸ்ய' என்று முடித்திருப்பது சரியாக இல்லை. 'யாவானர்த்த உதபானே' என்பது அத்தியாயத்தின் கடைசி சுலோகம் (பக்-37) என்று கண்டிருப்பது தப்பு. 48-ம் பக்கத்தில் 'வேதோகிலோ தர்மமூலம்' என்ற மனுஸ்மிருதி மேற்கோள் காளிதாசன் வாக்கு என்பது போல் தொனிக்கிறது. மாஹேசுவர சூத்திரம் பதினொன்றைக் கொண்டு இருபத்தொரு சுலோகமுள்ள காரிகையை நந்திகேசுவரர் செய்துள்ளார்; 48-ம் பக்கத்திலோ பதினாறு சுலோகமென இருக்கிறது. 141-2ம் பக்கங்களிலுள்ள உபநிஷத மந்திரத்தில் 'பூர்ணமிதம்' என்பது 'பூர்ணம்' என்றே காண்கிறது. பதினொன்றாவது உபந்நியாசம் முழுவதும் 'ஆர்த்ரா' என்பது 'ஆருத்திரா' என்றே இருக்கிறது. 'மௌனவ்யாக்யா' சுலோகத்தில் தத்வதா - தனயா இரு வார்த்தைகளும் மாற்றி மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன. 157-ம் பக்கத்தோடு இசைத்துப் பார்க்கும் போது பக்கம் 155-ல் 'பயம், சோகம், காமம், அழுகை' என்றிருப்பதில் 'சோகம்' என்பது 'க்ரோதம்' என்றிருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது. சோகமும் அழுகையும் ஒன்று தானே?

அந்தச் சோகத்தையும், க்ரோதத்தையும் போக்கிப் பரம சாந்தி தழைக்கச் செய்யும் நூல்தான் இது.

ஆசாரிய ஸ்வாமிகள் சென்னை உபந்நியாசங்கள் பாகம்-3; வெளியீடு: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை - 4; விலை ரூபாய் 2.

டாக்டர் சண்முகம் செட்டியார்

"கோயமுத்தூர் வாணியர் தெருவிலே ஓர் அடக்கமான ஓட்டு வீட்டிலே அறுபத்தெட்டு வருடங்களுக்கு முன்பு ஒரு குழந்தை பிறந்தது. அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாக அமைந்தது."

இப்படித் தொடங்கி டாக்டர் சண்முகம் செட்டியாரின் வாழ்க்கையை வெகு சுவாரசியமாகச் சித்திரித்துக் கொண்டு போகிறார் ஆசிரியர் நீல்கண் பெருமாள். ஆங்கில மூல நூலைப் பழகு தமிழில் நயம்பட எஸ். சங்கரன் மொழிபெயர்த்திருக்கிறார்.

கல்லூரிப் படிப்பில் தொடங்கி, சட்டசபை, பார்லிமெண்டு என்று புகுந்து, சபாநாயகராகி, நிதிமந்திரியாகி வாழ்க்கையிலே வளம் கண்டு செல்வராக வாழ்ந்த சண்முகம் செட்டியார் எப்படித் தோல்வியையும் வெற்றியையும் சமமாகக் கருதி வாழ்ந்தார் என்பதை இந் நூலில் காணலாம். துக்கமும் சுகமும், வெயிலும் நிழலும் போல வந்தாலும் வாழ்க்கை வாழ்வதற்கே என்னும் பேருண்மையை இந்த நூல் எடுத்துக் காட்டுகிறது.

பிரசுரம்: அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை-17. விலை ரூ. 2.50.

அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்

29. நதி வளர்த்த நாகரிகம்!

சோமு

"இங்கிலாந்துக்கு வடக்கே ஸ்காட்லாந்து இருக்கிறது!" என்று சொன்னார் ஓர் ஆங்கிலேயர்.

"அப்படியில்லை. ஸ்காட்லாந்துக்குத் தெற்கே இங்கிலாந்து இருக்கிறது!" என்று அவரைத் திருத்தினார் அடுத்தவர். அப்படித் திருத்தியவர் ஒரு ஸ்காட்லாந்துக்காரர்!

மேற்கண்டவாறு ஒரு நிகழ்ச்சியைத் தொடங்கினார்கள் பி. பி. ஸி.யிலே!

விஷயம் என்னவென்றால், இங்கிலாந்து ஸ்காட்லாந்து ஆகிய இரண்டு பகுதியைச் சேர்ந்த மக்களுக்குமே தங்கள் நாடுதான் அதிக முக்கியம் வாய்ந்தது என்று அபிப்பிராயம்!

பிரிட்டன் என்ற நில மண்டலத்தின் எல்லைக்குள்ளே இருந்தபோதிலும், இங்கிலாந்து என்ற தெற்குப் பகுதியும் ஸ்காட்லாந்து என்னும் வடபகுதியும் பல விஷயங்களில் வெவ்வேறு விதமாக இருக்கின்றன! கலை, நாகரிகம், மனப்போக்கு, மக்களின் பண்பு ஆகியவற்றில் எல்லாம் "ஸ்காடிஷ் முத்திரை" என்று ஒரு முத்திரை, தனியாக இருப்பதை எடின்பரோவிலும் க்ளாஸ்கோவிலும் பார்த்தேன்!

'ஸ்காடிஷ் தையற்கடை,' 'ஸ்காடிஷ் பாங்கு,' 'ஸ்காடிஷ் துணிகள்,' 'ஸ்காடிஷ் பெயிண்ட்கள்', 'ஸ்காடிஷ் நகைக் கடை', 'ஸ்காடிஷ் உணவு விடுதி' என்று கடைகளிலும் அங்காடிகளிலும் 'ஸ்காடிஷ்' என்ற அடைமொழி தலையை உயர்த்திக் கொண்டு போவோர் வருவோரை அழைக்கிறது! செய்தித் துறையினர்கூடத் தங்களை "ஸ்காடிஷ் இன்பர்மேஷன் ஆபீஸ்" என்று தான் அழைத்துக் கொள்ளுகிறார்கள்!

ஸ்காட்லாந்தின் சங்கீதம் தனிப் பண்போடு கூடியது. அவர்களுடைய பேச்சு, பழக்க வழக்கம் ஆகியவற்றிலுங்கூடக் கூர்ந்து பார்த்தால் ஒரு தனியான பண்பு இருப்பதைக் காண்கிறோம். இங்கிலாந்தில் உள்ளவர்களை விட இன்னும் கலகலப்பாகவும் இருக்கிறார்கள் ஸ்காட்லாந்து மக்கள்!

லண்டனிலிருந்து ஆக்ஸ்போர்டைக் கடந்து வடக்கே செல்லச் செல்ல, ஆங்கில மொழியுமே மாறுபடுகிறது! "பஸ்" என்பது "புஸ்" என்று உச்சரிக்கப் படுகிறது! "பட்" என்பது ஒரு வளைவு வளைந்து "புட்" என்பது போல் ஒலிக்கிறது! இங்கிலாந்திலே விடுதியை "காண்டீன்" என்று அழைத்தால், ஸ்காட்லாந்தில் "ரிபெக்டரி" என்கிறார்கள்! "ஹாஸ்டலை" "இன்பர்மெரி" என்று அழைக்கிறார்கள். இன்னும் இப்படிப் பல மாறுதல்கள்!

நானூறு ஐந்நூறு மைல்களுக்குள் ஒரே நிலப்பகுதியில் இந்த ஆங்கில மொழி எப்படி எப்படியெல்லாம் மாறுபட்டு ஒலிக்கிறது என்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்!

எடின்பரோ நகரத்தை ஸ்காட்லாந்து தேசத்தின் அரசாங்கத் தலைநகரம் என்றால், க்ளாஸ்கோவை அந்தத் தேசத்தின் தொழிற் தலைநகரம் என்று சொல்ல வேண்டும்! பல ஆண்டுகளாகத் தொழிற் துறையில் மிகவும் முன்னேறிப் "புகைப் பட்டணம்" என்றே அழைக்கக்கூடிய அளவுக்குத் தொழிற்சாலைகளும் இயந்திரக் கூடங்களும் புகைந்து கொண்டேயிருக்கின்றன! இந்த நகரத்தில்! சுற்று வட்டத்தில் கப்பல் கட்டும் தொழில் மிகவும் உன்னதமான நிலையில் இருந்து வருகிறது.

"க்ளேட் நதி க்ளாஸ்கோவை வளர்த்தது; க்ளாஸ்கோ க்ளேட் நதியை வளர்த்தது!" என்று ஒரு வசனம் சொல்லுகிறார்கள்! க்ளேட் நதி க்ளாஸ்கோவின் கப்பற் தொழிலை வளர்த்தது. அந்தத் தொழில் வளர வளர, நதியும் விரிவடைந்தது!


நகரத்துக்குள் நுழைந்ததும் எல்லாக் கட்டடங்களும் சாம்பல் நிறத்திலும் கருப்பு நிறத்திலும் நிற்பதைக் கண்டேன். காரணம் சிமெண்ட் வர்ணத்தைத் தவிர வேறு எந்த வர்ணத்தில் கட்டடங்களை அமைத்தாலும் ஊரின் புகையானது அவற்றை இந்த நிறத்துக்குக் கொண்டு வந்துவிடும்!

எடின்பரோவைப் போலவே இந்த நகரத்திலும் நம்முடைய நாட்டிலிருந்து வைத்தியம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய கலைகளைப் பயில்வதற்காக மாணவர்கள் செல்கிறார்கள். டாக்டர் சந்திரசேகரன் மூலம் க்ளாஸ்கோவில் இரண்டு தமிழர்கள் எனக்கு அறிமுகம் ஆனார்கள். ஒருவர் செட்டி நாட்

டைச் சேர்ந்த கல்லல் வேங்கடாசலம். இவர் டாக்டர் பட்டம் பெற்று இப்பொழுது அங்கேயே பதவியில் இருக்கிறார். இன்னொரு நண்பர் மதுரைத் தியாகராயர் கல்லூரித் தலைவர் வரதாச்சாரியாரின் புதல்வர் கோபால கிருஷ்ணன்! இவர் க்ளாஸ்கோ விஞ்ஞானத் தொழில் நுட்பக் கல்லூரியில் ''டஸ்ட் டிஸைர்ச்'' புழுதி ஆராய்ச்சி என்ற சிறப்பு ஆராய்ச்சி பயின்று வருகிறார்!

''புழுதி ஆராய்ச்சி'' என்றால் ஆசிரியர்களும் மாணவர்களும் புழுதியிலேயா புரள்கிறார்கள்? இல்லை! நிலக்கரிச் சுரங்கங்களில் தாசியும் தூளும் நிரம்பியிருப்பதால், இந்தப் புழுதி சுவாசப் பைக்குள் சென்று நோய் உண்டாக்குகிறது. இதை நீக்குவதற்குரிய முறைகளை அந்தப் பல்கலைக் கழகத்திலே ஆராய்ந்து வருகிறார்கள். இந்த ஆராய்ச்சியில் கோபால கிருஷ்ணனின் திறமையை ஆசிரியர்கள் மிகவும் பாராட்டிப் பேசக் கேட்டு மனம்பூரித்தேன்.

க்ளாஸ்கோ பல்கலைக் கழகம் ஓர் அழகான இடத்தில், சோலையும் புல்வெளியும் பூஞ்செடி



களுமாகக் கண்ணுக்கினிய சூழலில் நிற்கிறது! 'ஸ்டீம் என்ஜின்' (நீராவிப் புகை வண்டி) கண்டுபிடித்த ஜேம்ஸ்வாட் இங்குதான் இருந்தார்! உலகப் புகழ்பெற்ற பல மேதைகள் — டெலிவிஷன் கண்டுபிடித்த விஞ்ஞானி உள்பட இங்கு தோன்றியவர்களே!

இந்த ஊரிலும் பாதாள ரயில் வண்டி ஓடுகிறது! ''எங்கள் பாதாள ரயில் வண்டித் தொடர் மிக மிகப் பழைமையானது!'' என்று செய்தி அதிகாரி சொன்னார். அப்படி அவர் சொல்லாவிட்டாலும், அதைப் பார்த்ததுமே அது மிகவும் பழைமையானது என்று புரிந்தது!

லண்டன் பாதாளப் பாதைமாதிரி அத்தனை விசாலமாக இல்லை. வண்டிகளும் சிறிதாக இருக்கின்றன. லண்டன் வண்டிகளைப் பார்த்தவர்களுக்கு இவை பொம்மை வண்டிகள் போலத் தோன்றும். ஆனாலும் மனிதர்கள் ஏறி இறங்கிச் செல்வதற்குப் போதுமான அளவு பெரியவைதான்! சுரங்கப் பாதை குறுகலாக இருப்பதால் வண்டிகளைப் பெரிது படுத்த இயலாமல் அன்றிருந்த பழைமையிலேயே இன்றும் இவை ஓடிக்கொண்டிருக்கின்றன! தேம்ஸ் நதியின் கீழே பாதாளத்தில் சுரங்கம் இருப்பதுபோலவே இந்த ரயில் வண்டித் தொடரும் சில இடங்களில் க்ளைட் நதியின் கீழே பாதாளத்தில் ஓடுகிறது!

க்ளாஸ்கோவின் சிறப்புக்களில் இன்னொன்று கால்பந்துப் போட்டி! 'புட்பால்' ஆடுவதில் இந்த மக்களுக்குள்ள காதல் அலாதி! மின்சார விளக்குகளைப் போட்டுக் கொண்டு இரவெல்லாம் கால்பந்துப் போட்டி நடக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! அதிலும் கத்தோலிக்கர்கள் ஒரு கட்சி, ப்ராடெஸ்டெண்ட் கிறிஸ்தவர்கள் ஒரு கட்சி என்று போட்டி போட்டுக் கொண்டு ஆட ஆரம்பித்து விட்டால், அந்த வேகம் பொது மக்களையுமே ஆட்டி எடுத்து விடுமாம்! இரண்டு கட்சிக் காரர்களும் ஏகபெருமான் தங்கள் கட்சியில் நின்று வெற்றிதர வேண்டும் என்று விசேஷப் பிரார்த்தனைகள் நடத்துவார்களாம்!

''க்ளாஸ்கோ க்ராஸ்'' என்று மிகவும் பழைமையான ஓர் இடம். இங்குள்ள மணிக் கூண்டு பாடல் பெற்ற ஒரு ஸ்தலம்! புத்தாண்டு பிறப்பதற்கு முன்னால், அதாவது டிஸம்பர் மாதம் முப்பத்தோராந் தேதி இரவு பன்னிரண்டு மணிக்கு முன்னால், சுற்றுப்புறத்திலுள்ள அத்தனை மக்களும் இங்கேவந்து கூடி விடுவார்களாம். ஒரு கையில் ஸ்காட்ச் விஸ்கியும், மறு கையில் ஒரு பெட்டியிலே ரொட்டியும் கொண்டு வந்து மணி அடித்ததும் புத்தாண்டு பிறப்பதை வரவேற்று மகிழ்ந்து உட்கொள்வார்களாம்! இதையொட்டி இன்னொரு விசித்திரமான பழக்கமும் இங்கே இருக்கிறது.

டிஸம்பர் மாதம் முப்பத்தோராந் தேதி இரவு பன்னிரண்டு மணிக்கு இந்தியர்களுக்கும் மற்றும் கறுப்பு நிறங் கொண்ட மக்களுக்கும் ஸ்காட்லாந்து தேசத்திலே திடீரென்று பிரமாதமான 'கிராக்கி' ஏற்பட்டு விடுமாம்! இதற்குக் காரணம் ஸ்காட்லாந்து மக்களின் ஒரு பழைய நம்பிக்கை! அதாவது புதிய ஆண்டு பிறந்த மறு விநாடி முதன் முதலாக ஒரு கறுப்பு மனிதனின் முகத்தில் விழித்தால் அந்த ஆண்டு அதிருஷ்ட வருஷமாக இருக்கும்

என்று ஸ்காட்லாந்து மக்கள் நம்புகிறார்கள்! கறுப்பு மனிதனாக இருந்தால் மட்டும் போதாது! அந்தக் கறுப்பு மனிதன் தன்னுடைய கறுப்புக் கையில் ஒரு கறுப்பு நிலக்கரித் துண்டை வைத்துக் கொண்டு எதிரே வர வேண்டும்! அப்படி வந்துவிட்டால் அது ஒரு மகத்தான நல்ல சகுனம்! இது காரணமாக க்ளாஸ்கோவில் படிக்கச் சென்றுள்ள நம்முடைய இளைஞர்களுக்கு டிஸம்பர் முப்பத்தோராந்தேதி ஒரே மதிப்பாம்! அவர்கள் தங்கியுள்ள வீட்டுச் சொந்தக்கார மூதாட்டிகள், இரவு பதினொன்றரை மணிக் கெல்லாம் இந்த இளைஞர்கள் கையில் ஒரு நிலக்கரித் துண்டைக் கொடுத்து வீட்டுக்கு வெளியே அனுப்பிவிடுவார்களாம்! பன்னிரண்டு அடித்ததும் கரித்துண்டும் கையுமாக வீட்டிலே நுழைய வேண்டும் என்று அவர்களை வேண்டிக் கொள்வார்களாம்!



தென்னிந்தியாவின் பிரபல நடன நட்சத்திரம் ஸ்ரீமதி கமலாலக்ஷ்மணன் இங்கிலாந்துக்குச் சென்றிருந்த போது அவரை பி. பி. ஸி. இந்தியப் பகுதியினர் மாதர் நிகழ்ச்சிக்காகப் பேட்டி கண்ட சமயம் எடுத்த படம்.

க்ளாஸ்கோ பழமையான நகரம். இப்பொழுது பழைய ஊரைச் சுற்றிப் புதிய புதிய குடியிருப்புக்கள் எழுந்திருக்கின்றன. என்றாலும் புகை சூழ்ந்த அந்தப் பழைய ஊருக்கு ஒரு தனியான கவர்ச்சி இருந்து வருகிறது. இதற்குக் காரணம் கட்டடங்கள் எத்தனை இருந்த போதிலும், அங்கங்கே பூங்காக்களும் சிற்றோடைகளும் கலைக்காட்சிகளுமாக நிரம்பியிருக்கின்றன! மாலை நேரங்களில் மக்கள் மன நிம்மதியோடு உலாவினால்தான் வேலை நேரத்தில் சுறுசுறுப்பாக இருப்பார்கள் என்பதை நன்றாகச் சிந்தித்து, நகராண்மைக்காரர்கள் பொழுதுபோக்கு வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். க்ளாஸ்கோ நகரத்தின் "பொடானிகல் கார்டன்ஸ்" தோட்டத்திலும், கெல்வின் கரையோரத்திலும் நடந்து சென்றபோது திருக்குற்றாலத்தில் மரப்பாலத்திலே இருப்பதுபோல ஒரு மன மயக்கம் ஏற்பட்டது!

இந்த ஊர்த் தோட்டங்களுக்கு நடுவே, சிறுவர்கள் விதம் விதமான விளையாட்டுகள் விளையாடுகிறார்கள். பாண்டியாட்டம் போன்று ஓர் ஆட்டம் ஆடிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்! பொம்மைத் துப்பாக்கி, வில்லம்பு விளையாட்டு, கால்பந்து முதலியன சாதாரணம்! பெரிய வீட்டுப் பிள்ளைகள் சொந்தத் தோணிகளைக் கொண்டு விளையாடுகிறார்கள். 'Golf' ஆட்டமும் நன்கு பரவியிருக்கிறது!

இங்குள்ள 'மிட்செல் நூல் நிலையம்' ஒரு பெரிய புகையிலை வியாபாரி வழங்கிய நன்கொடை! அந்தக் கட்டடத்தின் அழகும் அமைப்பும் பார்த்தபோது "கலைமகளின் கோவில்" என்றே அதை அழைக்கத் தோன்றியது! ஆறு லட்சம் நூல்கள் இங்கே இருக்கின்றன. உலக அரங்கிலே முன்னேறிச் செல்லும் மக்களின் மொழிகள் எல்லாம் இங்கே இடம் பெற்றுள்ளன! சங்கீதப் பகுதி என்று தனியாக ஒரு பகுதி இருக்கிறது. இதில் தங்கள் பெருமையை உலகுக்கு எடுத்துச் சொல்லத் தெரிந்து கொண்டுள்ள நாடுகளின் இசை நூல்கள் உட்கார்ந்து கொண்டிருக்கின்றன!

"எங்கள் பள்ளிக்கூடத்தில் இரண்டு தமிழ்ப் புஸ்தகங்கள் இருக்கின்றன. பார்க்கிறீர்களா?" என்று கேட்டார் கோபாலகிருஷ்ணன்.

"கட்டாயம் பார்க்கிறேன். இந்த ஆங்கில தேசத்தில் எங்காவது ஓர் இடத்தில் இரண்டு என்ன, ஒரு தமிழ்ப் புஸ்தகம் இருந்தாலும் போதும். அவசியம் வருகிறேன்!" என்று பதில் சொன்னேன்.

கோபாலகிருஷ்ணன் அவர்கள் தமது பல்கலைக் கழகத்திலேயுள்ள ஆயிரக்கணக்கான புஸ்தகங்களில் இந்த இரண்டு புஸ்தகங்களை எப்படித்தான் ஆராய்ந்து கண்டுபிடித்தாரோ என்று ஆச்சரியப்பட்டேன்! ஆனால் உண்மையில் ஆச்சரியப்படுவதற்கு இதில் என்ன இருக்கிறது! நிலச்சுரங்கத்திலுள்ள தானே ஆராய்கிறவருக்கு எந்த மூலையில் எது இருந்தாலும், அது எவ்வளவு புழுதியடைந்திருந்தாலும் கண்டு பிடித்துவிட முடியுமல்லவா! அப்படி அவர் கண்டுபிடித்த இரண்டு புத்தகங்களில் ஒன்று ஆங்கில—தமிழ் நிகண்டு; மற்றொன்று தமிழ்—ஆங்கில நிகண்டு.

முதல் புத்தகத்தை எடுத்து (Culture) என்ற வார்த்தைக்குப் பொருள் பார்த்தேன். "வேளாண்மை, பழக்கம், தேர்ச்சி," என்று கொடுத்திருந்தது. தமிழ் நாட்டின் பழைய சங்கீதச் சொல்லான "கௌசிகம்" என்ற வார்த்தையை இரண்டாவது புத்தகத்தில் புரட்டினேன். "ஒருவகையான சங்கீதம் A kind of music" என்று போட்டிருந்தது!

இந்த இரண்டையும் பார்த்ததும் நம்முடைய தேமதுரத் தமிழ் ஓசை உலகம் எல்லாம் பரவிவிட்டது என்று எண்ணி அந்த நிகண்டுகளை மறுபடியும் அவற்றின் ஆசனத்தில் அமர்த்தி வைத்தேன்! (தொடரும்)



உன் அன்னைக்குத் தெரியாதா?
உட்வர்ட்ஸ்
கிரைப் வாட்டர்
குழந்தை வளர்ப்புக்கு இன்றியமையாத தேவை
GRIPE WATER
இது ஐம்பது வருடங்களாக புத்தி சாலிகளான தாய்மார்களால் உபயோகிக்கப்பட்டு வருகிறது.
அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகள்: கோமல் மாறுபாக். கெமிஸ்ட்ஸ் (பிரைவேட்) லிட்., பம்பாய். எம். ஜி. ஷஹானி & கோ. (கல்கத்தா) பிரை லிட்., கல்கத்தா. டி. டி. கிருஷ்ணமாச்சாரி & கோ. மதராஸ். எம். ஜி ஷஹானி & கோ. (டில்லி) பிரை லிட்., டில்லி.


அழகுமிக்க தோற்றம்
மெல்லிய சருமத்திற்கு சமனமூட்டவும்,
மிருதுவாகவும் வெண்மையாகவும் திகழச்
செய்வதற்கு ஒரு ஸ்னோ அவசியம். அதுதான்
"'ஹாஸலீன்' ஸ்னோ", உஷ்ணப்
பிரதேசங்களுக்கென தனி முறையில் தயாரிக்கப்
பட்டது "'ஹாஸலீன்' ஸ்னோ"
குளுமையுடன் சுகம் தருகிறது. ஏமாற்றம்
செய்ய முடியாத இதன் பாக்கிங் ஒன்றே
இதன் தூய்மைக்கு உத்தரவாதம்.
"'HAZELINE' SNOW"
"'ஹாஸலீன்' ஸ்னோ"
டிரேட் மார்க்
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு
HAZELINE SNOW

திருவாதவூர் அண்ணல்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

சிலர் பெரிய மனிதர்களாகவே பிறக்கிறார்கள்; சிலர் முயற்சியால் பெரிய மனிதர்களாகிறார்கள். சிலர் பெரிய மனிதர்களாக ஆக்கப்படுகிறார்கள் என்பது ஆங்கிலப் புலவர் ஒருவரது விமரிசனம். இது மனிதர்களுக்கு மட்டும் இருக்கும் சிறப்பு அல்ல. கிராமங்கள், நகரங்களுக்குமே இச்சிறப்பு உண்டு. அரியக்குடி, செம்மங்குடி, முசிரி முதலிய கிராமங்கள், சரித்திரப் பிரசித்தியோ அல்லது புராணப் பிரசித்தியோ உடையவை அல்ல. என்றாலும் இம்மூன்று ஊர்களையும் இன்று இசை உலகில் அறியாதவர் இல்லை. காரணம் அரியக்குடியில் ஒரு ராமானுஜ அய்யங்கார், செம்மங்குடியில் ஒரு ஸ்ரீனிவாச அய்யர், முசிரியில் ஒரு சுப்பிரமணிய அய்யர் தோன்றியிருக்கிறார்கள், நல்ல சங்கீத விற்பன்னர்களாக வாழ்கிறார்கள். அது காரணமாக அரியக்குடி, செம்மங்குடி, முசிரி முதலிய கிராமங்களும் பிரசித்தி அடைந்து விடுகின்றன. அதுபோலவே மதுரை ஜில்லாவில் ஒரு சிறிய ஊர். அந்த ஊர் அவ்வளவு பிரபலமான ஊர் அல்ல. அங்கு அமாத்தியர் குலத்திலே ஒருவர் பிறக்கிறார், வளர்கிறார். அவருடைய அறிவுடைமையைக் கேட்டுப் பாண்டிய மன்னன் அரிமர்த்தனன் தன் மந்திரியாகவே ஆக்கிக் கொள்கிறான். இந்த அமைச்சரை இறைவன் ஆட்கொள்கிறான். அவர் திருவாசகம் என்னும் தெய்வப் பாக்களைப் பாடுகிறார். அதனால் இறைவனாலேயே மாணிக்கவாசகர் என்று அழைக்கப்படுகிறார். அந்த மாணிக்கவாசகரது பிறப்பால் வாதவூர் பெருமை அடைகிறது. மாணிக்கவாசகரதுபிள்ளைத் திருநாமம் என்ன என்று தெரியவில்லை. அவரை வாதவூரர் என்றே அழைக்கிறார்கள். வாதவூர் அண்ணல், வாதவூர்த் தேவன் என்றெல்லாம் போற்றப்படுகிறார். இப்படி மாணிக்கவாசகராம் வாதவூரர் பிறந்ததினாலே பெருமையும் பிரசித்தியும் பெற்ற தலம்தான் திருவாதவூர். அந்தத் திருவாதவூருக்கே செல்கிறோம் நாம் இன்று.



வாதவூரர்

திருவாதவூர் மதுரைக்கு வடகிழக்கே பதினன்கு மைல் தொலைவில் உள்ள சிறிய ஊர். மதுரையிலிருந்து ஒத்தக்கடை வரை நல்ல சிமிண்ட் ரோடு இருக்கிறது. அதன்பிறகு சாதாரணக் கப்பி ரோடு உண்டு. கார் இருந்தால் காரிலேயே செல்லலாம். இல்லாவிட்டால் பஸ்ஸிலும் செல்லலாம். ஊருக்குள் நுழைந்ததும் நம்மை வரவேற்பது ஒரு பெரிய குளம். அதனை ஏரி, கம்மாய் என்றெல்லாம் கூறுவர் மக்கள். அதுவே புராணப் பிரசித்தி உடைய விஷ்ணு தீர்த்தம். வேதங்களை வைத்திருந்த திருமால் அவற்றை இழந்திருக்கிறார் ஒரு சமயம். அவற்றை மீண்டும் பெற இத்தலத்துக்கு வந்து இங்கு கோயில் கொண்டிருக்கும் வேதநாயகனை வழிபட்டிருக்கிறார். அவர் வழிபட்டது, நீர் உருவில் நின்று. அதனாலேதான் இந்தத் தீர்த்தம் விஷ்ணு தீர்த்தம் என்கிறார்கள். இந்தத் தீர்த்தக் கரையில் நின்று பார்த்தால் குளத்தினுள்ளே இரண்டு கற்கம்பங்கள் தெரியும். அவைகளின் மீது ஒரு கல் விட்டமும் அதன்மேல் ஒரு பிம்பமும் இருக்கும். இதனையே புருஷா மிருகம் என்பர். உடல் எல்லாம் மிருகத்தின் உடலாகவும் முகம் மாத்திரம் முனிவரது முகம் போலவும் இருக்கும். புருஷா மிருகத்தைப்பற்றிப் பாரதத்தில் விரிவான விளக்கம் இருக்கிறது. பாண்டவர் தலைவனை தருமர் ராஜசூய யாகம் செய்ய முனைந்த போது, யாக பூமியைத் தேர்ந்தெடுத்து அதைச் சுத்தமாக்கப் புருஷாமிருகத்தையே வேண்டியிருக்கிறார். அப்படியே புருஷா மிருகம் வேள்வி நடக்க இருக்கும் இடத்துக்கு வந்து அதனைத் தூயதாக்கியிருக்கிறது. இதோடு மாத்திரம் இதன் வரலாறு முடிந்து விடவில்லை. இது விஷ்ணுதீர்த்தத்தின் மத்தியில் இருந்து தீர்த்தத்தையே புனிதமாக்கிக்கொண்டிருக்கிறது. இந்த வட்டாரத்தில் மழை இல்லாமலிருந்தால் நூறு தேங்காய்களையும், வேறு பொருள்களையும் கருக்கி இந்தச் சிலையின்மேல் பூசுவார்களாம்.


அப்படிப் பூசிய இரண்டு மூன்று நாட்களுக்குள் நல்ல மழை பெய்கிறதாம். இப்படி ஓர் அனுபவம் இந்தப் புருஷாமிருக வழிபாட்டிலே. ஆகவே நாம் விஷ்ணு தீர்த்தம், அங்குள்ள புருஷா மிருகம் இவைகளை வணங்கிய பின்னரே கோயிலில் நுழைய வேணும்.

கோயில் வாயிலில் ஒரு குளம், அதனை அக்கினி தீர்த்தம் என்பர்.

கோயில் வாயிலை ஐந்து மாடங்கள் கொண்ட ராஜகோபுரம் அணி செய்கிறது. கோயில் வாயிலைக் கடந்து உட்சென்றால் வெளிப் பிராகாரத்துக்கு வருவோம். அங்கு தல விருட்சமான மகிழ மரம் விரிந்து பரந்திருக்கிறது. அங்கேயே பைரவ தீர்த்தமும் இருக்கிறது. இந்தப் பிராகாரத்தின் வடபக்கத்திலே ஒரு நூற்றுக்கால் மண்டபம் இருந்திருக்க வேணும். அது இடிந்து சிதைந்து கிடக்கிறது என்றாலும் இன்னும் இருக்கும் கொடுங்கைகள் அழகு வாய்ந்தவையாக இருக்கின்றன. இந்த மண்டபத்தை மாணிக்கவாசகரே கட்டினார் என்பது கர்ண பரம்பரை. இந்த மண்டபத்தில்தான் நடராஜர் மணிவாசகருக்குத் தம் பாதச் சிலம்பொலி கேட்க நடம் ஆடியிருக்கிறார். அதை மாணிக்கவாசகரே,

பாதவூரில் வந்து இனிது அருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்

என்றும் பாடி மகிழ்ந்திருக்கிறாரே. இந்தப் பிராகாரத்தையும் கடந்தே அடுத்த பிராகாரத்துக்கு வரவேணும். பிரதான கோயில் நேரேயே இருக்கும். அங்கு சென்று வாதபுரி ஈசுவரராம் **வேதநாயகரைத்** தொழுது வணங்கலாம். வாயு பூஜித்த தலம் ஆதலால் வாதபுரி ஈசுவரர் என்று பெயர் பெற்றிருக்கிறார். வேதங்களையெல்லாம் காத்தருளிய காரணத்தால் வேதநாயகர் என்றும் பெயர் பெற்றிருக்கிறார். அம்மையின் பெயரும் **வேதநாயகி, ஆரணவல்லி** என்றுதானே. வேதநாயகர் கோயில் உள்ளேயே ஒரு கிணறு **கபிலதீர்த்தம்** என்ற பெயரோடு. சகரர்களைத் தம் பார்வையால் எரித்த கபில முனிவர் இங்கே வந்து வேதநாயகனைப் பூஜித்து இத்தீர்த்தம் அமைத்தார் என்பது புராண வரலாறு. இந்தக் கோயிலின் வடபக்கத்திலேயே ஒரு சிறு சந்நிதி. அங்கு சிலா விக்கிரகமாக நடராஜரும் சிவகாமியும் இருக்கின்றனர். நல்ல வடிவங்கள். நூற்றுக்கால் மண்டபம் நல்ல நிலையில் இருந்தபோது அங்கிருந்தவர்கள் போலும். பின்னர் மூலக் கோயிலிலேயே வந்து இடம் பிடித்திருக்கின்றனர். இந்தச் சந்நிதிக்கு நேரேயுள்ள தெற்கு வாயிலைத்தான் ஆறுகால் பீடம் என்கிறார்கள். நல்ல வேலைப்பாடமைந்த ஆறு தூண்கள் அந்த மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. அந்த வாயில் வழியாக வெளியே வந்து மேற்குப் பிராகாரத்துக்குப் போனால் அங்குதான் மணிவாசகருக்கு ஒரு சந்நிதி அமைத்திருக்கிறார்கள்.



கோயில்

அங்கு ஏடேந்திய கையராய்ச் சிலை வடிவில் மாணிக்கவாசகர் இருக்கிறார். அவரது உத்சவ விக்கிரகங்கள் இரண்டு இருக்கின்றன. ஒன்று பழைய வடிவம்; மற்றொன்று சமீபகாலத்தில் செய்யப்பட்டது. பழைய வடிவிலே முழங்காலுக்கு மேலே துண்டு அணிந்த நிலையில் இருப்பவரை, இப்போது கோவணத்துடன் நிற்பதாக அமைத்திருக்கிறார்கள். மாணிக்கவாசகரது துறவைப் பூரணமாகக் காட்டக் கோவணத்துடன்தான் நிற்க வேண்டுமென்று நினைத்தார்கள் போலும். பழைய வடிவிலே உள்ள அழகு புதிய வடிவில் இல்லைதான்.

இந்தப் பிராகாரத்தின் தென்பக்கத்து வாயில் வழியாகத்தான் வேதநாயகியின் தனிக் கோயிலுக்குச் செல்ல வேணும். எல்லாச் சிவன் கோயில்களிலும் அம்பிகை இறைவனின் இடப்புறம் இருக்க, இங்கு வலப்புறத்தில் இருக்கிறாள். மதுரையிலும் அப்படியே. அவிநாசி கருணாம்பிகையும் அப்படியே. இப்படி இடம் மாறிய காரணத்தால், இச்சந்நிதியில் சக்தியின் ஆதிக்கம் அதிகம் என்றும் தெரிகிறோம். நின்ற கோலத்தில் கம்பீரமாக நிற்கும் ஆரணவல்லியை வணங்கி வெளியில் வரலாம்.

இத்தலம் மாணிக்கவாசகர் பிறந்ததால் உயர்ந்தது என்று முன்னமேயே சொன்னேன். வாதவூரர் மன்னவன் விருப்பப்படியே அமைச்சர் பதவியேற்று, அவன் வேண்டிக் கொண்ட வண்ணமே கீழக்கரைக்குக் குதிரை வாங்கச் சென்றதும், அங்கு திருப்பெருந்துறையில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதும், பின்னர் மன்னன் வாதவூரரை அழைத்துக் கேட்க, அவருக்காக இறைவனே நரிகளைப் பரிகளாக்கிக் கொள்வதும் பின்னர் அந்தப் பரிகளே நரிகளாகி ஓடிப் போய் விடுவதும், இதற்கெல்லாம் காரணம் வாதவூரரே என்று அவரைச் சிறையில் அடைப்பதும், அங்கு வைகையில் வெள்ளம் பெருகி வர அதை அடைக்க ஊரையே திரட்டுவதும் அங்கு வந்தியின் பங்குக்காக இறைவனே கூலியாளாக வந்து பாண்டிய மன்னனிடம் அடிபடுவதும், பின்னர் வாதவூரர் பெருமையை அறிவதும் இறைவனே நடத்திய திருவிளையாடல். இந்தத் திருவிளையாடல் விழா சிறப்

பாக மதுரையில் நடைபெறுகிறது. வருஷந்தோறும் அவ்விழாவுக்கு, வாதவூரிலுள்ள மாணிக்கவாசகர் எழுந்தருளி நான்கு நாட்கள் அங்கு தங்கி அதன்பின்பே ஊர் திரும்புகிறார். வாதவூரராம் மாணிக்கவாசகருக்கு மற்ற மாணிக்கவாசகருக்கு இல்லாத சிறப்பு இருந்தாக வேண்டுமே. மார்கழி மாதம் முதல் பத்து நாட்கள், வாதவூரில் திருவெம்பாவை உற்சவம் நடைபெறுகிறது. பத்து நாட்களும் மாணிக்கவாசகர் உலா வருவார்.

இத்தலத்தில் சங்கப்புலவர் கபிலரும் வாழ்ந்திருக்கிறார். முன்னரே நாம் திருக்கோவலூரர் போயிருந்தபோது, அவர் பாரியின் சிறந்த நண்பர் என்றும், பாரி மக்களுக்கு மணம் முடித்துவைத்த பின் எரிமூழ்கி இறந்தனர் என்று அங்குள்ள கபிலக் கல் கூறும் கதை மூலம் தெரிந்திருக்கிறோம். மணிவாசகரைப் போலவே, கபிலரும் இவ்வாதவூரில் பிறந்தவர்தாம். இவர் சின்னப் பிள்ளையாக இருந்த போதே ஒரு பாட்டுப் பாடி யிருக்கிறார். பாட்டு இதுதான்.

நெட்டிலை இருப்பை வட்ட வான்பூ
வாடாதாயின்
பிடுடைப் பிடியின் கோடு ஏய்க்கும்மே!
வாடினே
பைந்தலைப் பரதர் மனைதொறும்
உணங்கும்
செந்தனை இறவின் சிர் ஏய்க்கும்மே!

நெடிய இலைகளையுடைய இலுப்பைப்பூ வாடாமல் இருந்தால் பெண் யானையின் கொம்பை ஒத்திருக்கும். வாடிவிட்டாலோ வலையர் வீடுகளில் காய்ந்து கிடக்கும் இரு மீன்போல் சுருண்டுகிடக்கும் என்பது பாட்டின் பொருள். இந்தப் பாட்டினையும் நினைவுபடுத்தி இந்தப் பாடல் பாடிய கபிலனார் பிறந்த ஊர் இருவாதவூர் என்று திருவிளையாடல் புராணம் கூறும்.

நீதிமா மதுரக நீழல்
'நெட்டிலை இருப்பை' என்றோர்
காதல்கூர் பனுவல் யாக்கும்
கபிலனார் பிறந்த மூதூர்
வேதநாயகனார் வாழ் திருவாதவூர்


என்பது பாடல். ஆகவே இந்த ஊர் சிறந்த இலக்கியப் பிரசித்தம் உடைய ஊராகவும் இருந்திருக்கிறது.


எல்லாம் சரிதான். மணிவாசகர் பிறந்த இடம், வீடு ஒன்றும் இந்தத் தலத்தில் இல்லையா என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. வேதநாயகர் கோயிலில் இருந்து தெற்கே இரண்டு பர்லாங்கு தூரத்தில் ஒரு சிறு கோயில் கட்டியிருக்கிறார்கள். அங்கு தான் மணிவாசகர் வீடு இருந்ததாம். அதனால் ஊர் மக்கள் கொஞ்சம் பணம் திரட்டி அங்கு மணிவாசகருக்கு ஒரு கோயில் எழுப்பியிருக்கிறார்கள்.

வாதவூரராம் மாணிக்கவாசகர் வரலாற்றைப் பற்றி எவ்வளவோ விவாதம். அவர் மூவர் முதலிகளுக்கு முற்பட்டவரா? இல்லை, பிற்பட்டவரா? இந்த வாதங்களுக்கெல்லாம் முடிவு காண்பது எளிதான காரியம் இல்லை. ஆனால் அவர் பிறந்த ஊர் வாதவூர் என்பதில் வாதம் ஒன்றுமே இல்லை. மானமங்கலத்திலிருந்து இங்கு வந்து குடியேறிய அமாத்தியப் பிராமணர் குலத்தில் தோன்றியவர் என்பதிலும் விவாதம் இல்லை. இவற்றையெல்லாம் விட, இந்த வாதவூர்த்தேவு என்று உலகு புகழ் மாமணியின் மணிவாசகம் ஊனினை உருக்கும், உள்ளொளி பெருக்கும் என்பதிலும் வாதமே இல்லை. திருவாசகத்தைக் கசிந்து பாடிய ராமலிங்க அடிகள்,

வான் கலந்த மாணிக்கவாசக!
நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால்
நற் கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து
செழுங்கனித் தீஞ்சுவை கலந்து என்
ஊன் கலந்து உயிர் கலந்து
உவட்டமாய் இனிப்பதுவே.

என்று கூறினார். திருவாசகத்தேனை, அமுதைப் படித்து அனுபவித்தவர்களுக்குள்ளே இதைப் பற்றியும் யாதொரு விவாதமுமில்லை. ஏதோ வாதவூர் என்ற தலத்தில் பிறந்தாலும், வாதங்கள் இல்லாத பல உண்மைகளை அல்லவா எல்லோரும் உணரும்படி செய்திருக்கிறார். அது போதும் நமக்கு.





கதை

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்



ஞாயிற்றுக் கிழமை. பிற்பகல் நேரம். அந்த நேரத்தில் எல்லோரும் பொதுவாகச் செய்கிற வேலையை நானும் செய்து கொண்டிருந்தேன். அதாவது நாற்காலியில் சாய்ந்து கொண்டு, கண்களை மூடியபடி, வராத தூக்கத்தோடு சண்டை போட்டுக் கொண்டிருந்தேன்

விஜயம் வந்து எதிரில் உட்கார்ந்தது அவன் என்னைக் கூப்பிட்ட பிறகுதான் தெரியும்.

"உங்களை ஒன்று கேட்கப் போகிறேன்."

என்னமோ ஏதோ என்று நான் அயர்ந்து போனேன். கவலையோடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன். மாதக் கடைசி.

"முத்துமாலையைத் தெரியுமோ இல்லையோ, உங்களுக்கு?"

"எந்த முத்துமாலை?" என்று திகிலோடு அவன் விளக்கத்துக்குத் தயாராக எழுந்து உட்கார்ந்தேன்.

"அதுதான் மாதப் பத்திரிகை!"

போன மூச்சு திரும்பி வந்தது. தெம்போடு, "சொல்லு!" என்று கேட்டேன்.

விஷயம் இதுதான். 'முத்துமாலை'யில் ஒரு சிறுகதைப் போட்டி. அதற்கு இவன் கதை எழுதுகிறான். என்னிடம் யோசனை கேட்க வந்திருக்கிறான். அவன் இதுவரை எழுதாதவனல்ல. அவ்வப்போது சில பத்திரிகைகளில் அச்சில் ஏறிவிடும் அவன் கதைகள், அவன் ஆர்வத்தை நன்றாக வளர்த்துவிட்டன. இப்போது தைரியமாக அவன் இப்படிப் போட்டியில் இறங்கிவிட்டாலும் என் பக்க பலத்தை நாடியதில் வியப்பில்லைதான். அவன் எழுதியவைகளைப் படித்து நான் நிறைய விமரிசனங்கள் செய்திருக்கிறேன். அதன் இருவித பலன்களையும் அனுபவித்திருக்கிறேன். அவன் மனத்தில் நான் ஒரு பொல்லாத 'கிரிடிக்'. அதனால்தான் இப்போது கட்சிக்காரன் வக்கீலைத் தேடிக்கொண்டு வருகிற பாவனையில் என்னிடம் வந்திருக்கிறான்.

"போட்டிக்கு முத்துமாலையை வைத்துக் கொண்டே ஒரு கதை எழுதலாமென்று உத்தேசம்!"

"முத்துமாலையா?"

"ஏன்? அந்தப் பெயரிலேயே சுவாரசியமாக ஒரு கதை எழுத முடியாதா?"

"முடியும். இருந்தாலும்..."

"எடுத்ததும் அபசகுனம் மாதிரி தடுக்காதீர்கள். நான் சொல்கிறதையெல்லாம் முதலில் கேளுங்கள்!"

இந்தமாதிரி சமயங்களில் நான் தணிந்து போவதுதான் வழக்கம்.

"சொல்லு!"

"வீட்டில் ஒரு சமையற்காரி. அவளுக்குக் கழுத்தில் ஒரு முத்துமாலை வந்து சேருகிறது. அதே சமயத்தில் வீட்டு அம்மாளின் முத்து மாலையும் காணாமல் போயிருக்கிறது!"

"இந்தமாதிரித் தமிழில் அநேகம் கதைகள் வந்தாயிற்றே!"

"முழுதும் கேளுங்கள். அவள் திருடவில்லை அதை. இருந்தாலும் அவள் மேல் சந்தேகம் எஜமானிக்கு. அவளைக் கேட்கிறாள். அவள் அது கல்ச்சர் முத்துமாலை என்று சொல்கிறாள். எஜமானிக்குச் சமாதானப்படவில்லை. வீட்டுக்கு வந்த நகை செய்யும் பத்தரிடம் அதைக் கொடுக்கிறாள். அது அசல் முத்து மாலை என்று தெரிய வருகிறது!"

"அவளுக்கு ஏது அசல்?"

"அங்கேதான் ஒரு திருப்பம் தேவை. நீங்கள் ஒரு வழி சொல்லுங்களேன்!"

"அது அவளுடையதல்ல. கடையில் தன் போலி மாலையைப் பழுது பார்க்கக் கொடுத்தாள். திரும்ப அவள் கைக்குக் கிடைத்த போது அசலும் போலியும் மாறி விட்டன. அப்புறம் கடைக்காரனே தேடிக்கொண்டு வருகிறான் வீட்டுக்கு. அவள் மேல் பழி இல்லை என்று வெளிப்படுகிறது."

"கதையை எவ்வளவு சுச்சிதமாக முடித்து விட்டீர்கள்?" என்று அவன் அடக்க முடியாத பெருமையோடு கேட்டான்.

பிறவாத கதை

அட்டைப் படக் கதை



''முடிக்கிறதாவது? ஒன்றுவது!''—ஸாமர்ஸெட் மகாம் என்று ஒரு பிரபல ஆசிரியர் ஏற்கனவே எழுதி வைத்திருக்கிற கதைதான் இது. அதற்கும் 'முத்துமாலை' என்றுதான் தலைப்பு! தெரியுமா?''

அவள் ஆர்வம் அடங்கிப் போயிற்று.

''சரி, விடுங்கள்! சமையற்காரியாக இருந்தால்தானே? வீட்டுப் பெண் என்று வைத்துக் கொள்வோம். தூரத்து உறவு. ஏதோ வேலையில் இருக்கிறாள். வீட்டோடு இருந்து பணம் கொடுத்துச் சாப்பிடுகிறாள். அவள் பேரில் சந்தேகம். வீட்டில் யார் யாரோ இருக்கிறார்கள். இருந்தும் அவள் பேரில்தான் சந்தேகம் ஏற்படுகிறது.''

''ஏன்?''

''அதுதானே கேட்கிறேன்?''

''வீட்டுக்காரி கொடுமைக்காரி. அவள்மேல் பொறாமை. அவளை அப்புறப்படுத்த நினைக்கிறாள். அதற்காகவே இப்படி ஒரு பழியைச் சுமத்த எண்ணி...''

''ஆஹா!''

''...என்று கொண்டு போனால் ஆண்டன் செகாவ் எழுதியிருக்கிற ''அமர்க்களம்'. என்கிற கதை மாதிரி போய்விடும்!''

''அது யார் செகாவ்?''

''செகாவ் தெரியாது?''

''தெரியவே தெரியாது!''

''வாயைக் கழுவிக் கொண்டு வா! செகாவைத் தெரியாத கதாசிரியைகளும் உண்டா?''

''எனக்குச் செகாவையும் தெரியாது....''

''போதும்! போதும்! கதைக்கு வா. மேலே என்ன செய்வதாக உத்தேசம்?''

''சரி. பழைய வழிக்கே போவோம். மாலை அசல் மாலை. தொலைந்தது போலி. உண்மை கடைசியில் தெரிகிறது. ஆனால் அதற்குள் விஷயம் ரொம்பத் தூரத்துக்குப் போய் விடுகிறது!''

''ஆமாம், கதையே ஒரு பிரபல கதாசிரியருடையதாகி விடுகிறது!''

''அது யாரவர்?''

அந்த ஆசிரியர் அந்தச் சமயத்தில் அவள் எதிரில் தென்பட்டிருந்தால் நெற்றிக் கண்ணைத் திறந்து விட்டிருப்பாள்.

''பிரெஞ்சு கதாசிரியர் மாப்பஸான் எழுதியிருக்கும் கதையில் இப்படித்தான் ஒரு பெண் தன் பணக்காரத் தோழியிடமிருந்து ஒரு விசேஷத்துக்குப் போய் வர, ஒரு வைர அட்டிகையை இரவல் வாங்கிப் போட்டுக் கொண்டு போகிறாள். அட்டிகை தொலைந்து விடுகிறது. தோழியிடம் எப்படி அதைச் சொல்கிறது? சொத்து, சம்பாத்தியம் எல்லாவற்றையும் தொலைத்து அதேபோல் ஒரு வைர அட்டிகையை வாங்கித் திருப்பி விடுகிறாள். கண்காணாமல் கணவனுடன் வேறு இடத்துக்குப் போய்க் கடினமாகப் பிழைத்து அவஸ்தைப்படுகிறாள். எத்தனையோ சங்கடங்களைப் படுகிறாள். கடைசியில் ஒருநாள் அவள் தன் தோழியைப் பார்க்க நேரிடுகிறது. உண்மை அவளை மீறி வந்து விடுகிறது. அவள் தோழி என்ன சொல்கிறாள், தெரியுமா? 'அடி பாவி! நான் உனக்குக் கொடுத்த மாலைஅசலேஇல்லை!' என்றுதான்!''

''அடிபாவி!''

''விடு! நீ என்ன செய்யப் போகிறாய் இப்போது?''

''அது தான் யோசிக்கிறேன்.''

''யோசி!''

''சரி; வீட்டில் ஒரு குழந்தை. குழந்தையின் சங்கிலி தொலைந்து போய் விடுகிறது.''

''முத்து மாலை பவுன் சங்கிலியாகி விட்டதா....?''

''ஆமாம். அதுவும் வீட்டில் இல்லை. வெளியிலேதான் தொலைகிறது.''

''எங்கே? பள்ளிக்கூடத்திலா?''

''இல்லை. அது சின்னக் குழந்தை.''

''அப்போது தொலைந்த இடம் எது?''

''என்னது? நீங்கள் போலீஸ்காரர் மாதிரி விசாரணை செய்ய ஆரம்பித்து விட்டீர்களே?''

''இல்லை. தொலைந்தது அம்மாவுடன் கடைக்குப் போன போதா? அப்பாவுடன் கிளப்புக்குப் போனபோதா?''

சிறு வயதில் கால் மாற்றி விளையாடும் போது 'ஆற்றிலா? சேற்றிலா?' என்று கேட்கிற ஞாபகம் வந்துவிட்டது எனக்கு. வேடிக்கைதான்.

''சரி! அப்பா; கிளப்பு.''

''சரி. சந்தேகம்?''

''சந்தேகம் இன்னும் கதையில் ஒட்டிக் கொண்டுதான் இருக்கு. யாரோ ஒரு வழிப் போக்கன் பேரில்! ஆனால் சங்கிலி வேறு எங்கேயோ கிடைக்கிறது.''

"எங்கே?"

"இளைப்புக்கு வந்திருந்த ஓர் உத்தியோகஸ்தர் பையில்!"

"குழந்தை கழற்றி அவர் பையில் போட்டு விட்டதோ?"

"இருக்கட்டுமே?"

"அடே அசடே!"

"ஏன்?"

"இதை உனக்கு முன்னால், நீ பாப்பாவாக இருந்த போதே எழுதி விட்டார் கு. ப. ராஜகோபாலன். 'பாப்பாவின் சங்கிலி' என்கிற கதையில்!"

"அட பாவமே!"

"பாவந்தான். பேசாமல் நீ வேறு வழியில் திரும்பி விடு. சங்கிலி இல்லாவிட்டால் டாலர். தொலைய வேண்டாம். விழுங்கி விடுகிறது குழந்தை...."

அவள் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தாள். அதில் வெற்றி மிளிர்ந்தது.

"சொல்லுங்கள். விழுங்கி..."

"ஆமாம். விழுங்கி..."

"ஒரு ஐடியா! இந்தச் சங்கிலியையும் டாலரையும் தலையைச் சுற்றி எறிந்துவிட்டுப் பேசாமல் அதைத் தங்கப் பல்லாக்கிவிட்டால் என்ன? அதுதான் விழுங்குவதற்குச் சௌகரியமாயிருக்கும்!"

"ஆனால் எழுதச் சௌகரியப்படாதே!"

"ஏனாம்?"

"எஸ். வி. வி. 'ருக்மிணிக்கு வயிற்றிலே பல்' என்று சிரிக்கச் சிரிக்க அப்படி ஒருகதை எழுதியிருக்கிறாரே, உனக்குத் தெரியாதா?"

"சத்தியமாகத் தெரியாது!"

"விடு. இதற்காக வருத்தப்படாதே. இன்றைக்கு உனக்கு என்னவோ 'பிளாட்' சரியாக வரவில்லை. போகிறது. இன்னொரு நாள் பார்ப்போம்."

"அப்படி விடுவானேன்? இன்றைக்குத் தான் ஒழிந்திருக்கிறது."

அவள் குரலில் ஆவல் தேங்கியது. என்னுடைய சம்சார அனுபவத்தில், அது, நான் அது வரை மறுத்திராத குரல். கடிகாரத்தைப் பார்த்தேன். சிறிய முள் மூன்றுக்குப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தது. அன்றைக்குத் தூக்கமில்லை அவ்வளவுதான். விஜயம் எழுந்தாள்.

"காப்பி கொண்டு வருகிறேன். அப்போது தான் ஜோர்!"

அவள் இங்கிதத்தைக் கண்டு வியந்தேன். பார்வையைச் சொடுக்கி விட்டு அவள் உள்ளே போய்விட்டாள். அவளுக்குத் தெரியும் நான் மறுக்கமாட்டேனென்று. அந்தப் பார்வைக்கு நான் பத்து வருஷங்களாய் அடிமையாயிருக்கிறேனே?

காப்பியோடு வந்து சேர்ந்தாள்.

"யோசித்துப் பார்த்தேன். வேறு விதமாக ஆரம்பித்தால் என்ன?"

"எப்படியோ?"

"வேலைக்காரியே வேண்டாம். எஜமானியும் வேண்டாம்."

"கம்யூனிஸமா?"

"கேலி பண்ணுகிறீர்கள்!"

"பின்னே?"

"ஒரு பிச்சைக்காரன்."

"பரம்பரைப் பிச்சையா?"

"இல்லை. நல்ல நிலைமையில் இருந்தவன் தான். தொழிலாளி. ஏதோ கஷ்ட காலம்; பிச்சைக்காரனாகி விடுகிறான் என்று வைத்துக் கொள்வோமே?"

"அப்படி என்ன தொழிலாம் அது?"

"நெசவுத் தொழில்."

"அதுதான் இப்படித் தள்ளி விடுகிறதற்குச் சௌகரியம். பலே! அப்புறம்?"

"அவனுக்குப் பிச்சையும் எடுக்கத் தெரியவில்லை. எல்லோரும் அவனைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்."

"மற்றப் பிச்சைக்காரர்களும் கூடவா?"

"இல்லை. ஒரு பிச்சைக்காரன்தான் அனுதாபத்தோடு அவனுக்கு உதவ முன் வருகிறான். அவனுக்குப் பிச்சை எடுக்கும் வழியைக் கற்றுக் கொடுக்கிறான். முதலும் தருகிறான்."

"உன் கதை மேலே போகாது!"

"ஏன்?"

"அது தி. ஜானகிராமன் எழுதின 'பஞ்சத்துக்கு ஆண்டி' மாதிரி வந்து விடுகிறதே?"

"அதில் எப்படியாகிறது?"

"பிச்சைக்காரன் குரங்காட்டியாகப் பார்க்கிறான்...!"

"என் கதையில் குரங்கே வரவில்லை."

"இல்லாவிட்டால் நாய்க்குட்டி!"

"ஒரு குட்டியும் இல்லை. கதையும் இல்லை. உங்களிடம் சொல்ல வந்தேனே?"

"அப்போது என்னை விட்டுவிடு."

"பிச்சைக்காரனைப் பிச்சைக்காரியாக்கி விட்டால்....?"

நான் பேசவில்லை. காப்பி தீர்ந்துவிட்ட தம்ளரையே பார்த்துக் கொண்டிருந்தேன். இப்போது என்னுடைய முறை. கோபந்தான்.

"சொல்லுங்களேன்!"

என்னைத் தன்புறம் திருப்பி அவள் இப்படித் தலையை அசைத்துக் கேட்கும்போது, அந்த நளினத்தை அலட்சியம் செய்ய எனக்கு மனம் வருவதில்லை.

"பிச்சைக்காரி திருடுவதாக உன் கதையா?"

"எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?"

"சொல்லு. கையிலிருந்த குழந்தையையும் விட்டு விட்டுப் போய் விடுகிறாளா?"

"இருங்கள்......அப்படியே வைத்துக் கொண்டாலென்ன?"

"வேறே என்ன? லா. ச. ராமாமிருதம் எழுதியிருக்கிற "இதழ்கள்" ஆகிவிடப் போகிறது."

"எந்த 'இதழ்கள்'?"

"எத்தனையோ 'இதழ்கள்'. அதில் இப்படி ஒரு 'இதழ்கள்'!"

"போச்சு போ!"

"போகிறதாவது? நகரவே இல்லையே?"

"சரி. ஒன்று செய்யலாமா?"

"என்ன உன் யோசனை?"

"வீட்டுப் பெண் ஒரு பையனை வளர்த்து வருகிறாள்."

"ஏது? எப்படிக் கிடைத்தான்?"

"அநாதைப் பையன்."

"அப்புறம்?"

"அவளுக்கு அவனிடம் ஓர் அலாதி பற்றுதல் உண்டாகி விடுகிறது. தம்பியென்கிற பரிவுக்கும், பிள்ளையென்கிற ஆசைக்கும் மேலே!"

"சபாஷ்!"

"அவனுக்குப் போட்டியாக அந்த வீட்டுக்கு இன்னொரு பையன் வந்து சேருகிறான்."

"இன்னொரு அநாதையா?"

"இல்லை. அவள் மைத்துனன்!"

என் முகம் கறுத்தது.

"மேலே கேளுங்கள்! முதல் பையனுக்கு அவன் மேல் பொறாமை. அந்த வேகத்தில் அவன் அருமையாக வைத்துக் கொண்டிருக்கிற சாமான்களில் ஒன்றை எடுத்து மறைத்து வைத்து விடுகிறான்..."

"மறுபடியும் திருட்டா?"

"ஏன்?"

"ஒன்றுமில்லை. உன்னுடைய கதை ஏன் இப்படிச் செக்கடி மாட்டைப் போல் மறுபடியும் மறுபடியும் திருட்டுப் புரட்டிலேயே இறங்கி விடுகிறது?"

"என்னவோ வைத்துக் கொள்ளுங்களேன். எல்லோருக்கும் அவன் மேலே சந்தேகம். அவளுக்கு மட்டும் அவன் பேரில் நம்பிக்கை."

"அது பொய்த்துப் போகிறது. அப்படித்தானே?"

"அப்படி வைத்துக் கொள்ளலாமா?"

"தாராளமாக வைத்துக் கொள்ளலாம். அப்போதுதான் தாகூரின் சிறுகதைக்கும், உன்னுடையதுக்கும் உருவ ஒற்றுமை பூரணமானதாக இருக்கும்."

"அதென்ன கதை?"

"'ஒதுக்கப்பட்டவன்' என்று அவர் ஒரு கதை எழுதியிருக்கிறாரே, படித்திருக்கிறாயோ இல்லையோ?"

"இல்லை. நீங்கள் பெரிய அறிவாளி. ஆரம்பம் முதல் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டே யிருக்கிறீர்களே?"

"முட்டுக்கட்டையா போட்டேன்?"

"பின்னே என்னவாம்?"

"ஐயோ, விஜி! நீ என்னைக் கேட்டது நல்லதாகப் போயிற்று. இல்லாவிட்டால் நீ ஒன்று எழுதப் போக...."

அவள் என்னை முறைத்துப் பார்த்த விதம் வேடிக்கையாக இருந்தது. மேலே சொல்லாமல் நிறுத்திக் கொண்டேன். அவள் கன்னத்தின் மேல் கையை வைத்துக் கொண்டு ஏதோ யோசனையாக இருந்தாள்.

"கடைசியாகக் கேட்கிறேன், நீங்கள் ஒன்று செய்வீர்களா?"

"என்ன விஜி, ஏதோ சினிமா வசனம் மாதிரி பேசுகிறாய்?"

"இப்படி எழுதினால் என்ன?"

"எப்படி?"

"குற்றவாளி அநாதைப் பையனும் இல்லை; வேலைக்கு வந்த பெண்ணும் இல்லை!"

"பின்னே?"

"அவள் தகப்பனார்தான்!"

"அதென்ன கூத்து?"

"ஆமாம். அவர் ஒரு பதுக்கல் வியாபாரி. லைசென்ஸ் இல்லாமல் சாமான்களைக் கடத்தி வருபவர். இந்தத் திருட்டு வேலை பெண்ணுக்குத் தெரியும். ஆனால் அவள் வீட்டுக்கு அடிக்கடி வரும் அந்த வாலிபனுக்குத் தெரியாது."

"அவன் போலீஸ் அதிகாரியா?"

"இல்லை. அவன் நண்பன்தான் போலீஸ் அதிகாரி. அவர்களுக்குத் தெரியாமல் அவன் அவர்களைப் பின்தொடருகிறான்."

"அப்புறம்?"

"அப்புறம் அந்த வாலிபனுக்கு உண்மை தெரிந்து போகிறது. அவளுக்குத் தெரிந்து போயிற்றென்று அவனுக்குத் தெரிகிறது."

என் முகத்தில் ஈயாடவில்லை.

"மேலே சொல்லு!" என்றேன்.

"இப்போது நீங்கள் நினைப்பீர்கள்; அவன் காதலா கடமையா என்று தடுமாறினான் என்று! கடைசியில் தியாகத்தைக் காதல் செய்து விட்டு."

"காதலைத் தியாகம் செய்து விட்டு என்று சொல்லு!"

"அதுதான் இல்லை. கடமையும் இல்லை, தியாகமும் இல்லை!"

"பின்னே!"

"என் முடிவு புது மாதிரி. இந்தக் காலத்துப் பாணி. அந்தப் பையனால் அந்தப் பெண்ணை அதிருப்தி செய்ய முடியவில்லை. தானே ஒரு பிளாக் மார்க்கெட் பேர்வழி ஆகிவிடுகிறான். நண்பனையும் வழக்கு உருப்படியாகாமல் செய்து காலை வாரி விட்டு விடுகிறான்!"

'எப்படி என் முடிவு?' என்று கேட்பது போல் விஜயம் என்னை வெற்றிப் புன்னகையோடு பார்த்தாள்.

"புதுமையாகத்தான் இருக்கிறது. ஆனால்..." என்று இழுத்தேன்.

"ஆனால் என்னவாம்?" என்று அவள் என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வை சுட்டது. நெற்றிப் புடைப்பில் கோப ரத்தம் குறுகுறுத்தது.

"இது கொஞ்சம் பழைய புதுமை. ஆசிரியர் 'கல்கி' எழுதியிருக்கிற "அலையின் கண்ணீர்" என்கிற நாவலில் இப்படித்தானே முடிவு வருகிறது? செராஜ், செராஜ், என்கிற தேசத் தொண்டன் வனஜா என்கிற பெண்ணுக்காகத் தனராஜ் என்ற போலீஸ் இன்ஸ்பெக்டரை இதே போல் மண்ணைக் கவ்வச் செய்ததை, நீயும் நானும் படித்திருக்கிறோமே? உனக்கு ஞாபகமில்லையா?" என்று கேட்டேன்.

விஜயம் விருட்டென்று எழுந்து உள்ளே போய் விட்டாள்!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

அன்னையின் அன்புலகிலே-பொன்னான பொருள்களே யன்றி வேறுண்டோ?

ஆதரவுக்கு ஆதரவான அன்னைக்கு

ஆதரவு: டால்டா

காத்தருளும் அன்னையின் இரு கண்ணிமைகளுக்குள்ளே நாம், நம் உலகம்... அங்கே காண்பதெல்லாம் அன்பு... கேட்பதெல்லாம் அன்பு.... பெறுவதெல்லாம் அன்பு... பொன்னான பொருள்களையே எந்நாளும் தருவது அவள் பண்பு!

சுவைப்பதெல்லாம் அன்பு... குன்றாத அன்பையே கூறுகிறது அன்றாடக் குழம்பும் ரசமும்... இமைகொட்டாத கண்காணிப்பிலே, உன்னதமான பண்டங்களாலான உணவு... அருமை தெரிந்து அவள் டால்டாவினால் சமைக்கும் நல்லுணவு!

தரத்திலுயர்ந்த தாவர எண்ணெய்களாலான, தூய டால்டா ... வளரும் உடம்புக்குத் தேவைப்படும் வைட்டமின்கள் அடங்கிய டால்டா... நல்லுணவின் செல்வத்துணை ... நம்மவர்க்கே உரிமையன்றோ...



டால்டா வனஸ்பதி: அறுசுவைச் சமையலுக்கு உறுதுணை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு. DL. 69-X52 T

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



அடைந்திட்டோம் அழகென்னும் குலச் செல்வம்...

மகாராணி
சந்தன சோப்

பவழமல்லிகைப் பாங்கான மென்மைநயமும், சல்லாத் துகில் போன்ற சருமத் தெளிவும் உங்கள் மேனிக்கு சொந்தமென மிளிரவே... வனப்பென்னும் செல்வம் உங்கள் வசப்படவே... மகாராணி சந்தன சோப்!



அழகுசாதன சோப்புக்களில் அரசியர்க்கரசி

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

MHR. 3—X52 TM